கல்கி




பொருளடக்கம்


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே


கல்கி



மூஷிகர்: கடுவெயில் காலத்தில், காங்கிரஸ் மகாசபையினர் தங்கள் மகாநாட்டு மன்றத்தை மட்டும் பனியில் புதைத்துக் கொண்டு ஜில்லென்று கூட்டம் போட்டு விட்டார்கள். இனி, மந்திரிகள் தங்களுக்கு மட்டும் மழை பெய்யும் செயற்கை மேகங்களைக் கூடக் கூட அழைத்துச் செல்வார்களோ?


பூனை குறுக்கே ஓடுகிறது!
பாகிஸ்தான்
இந்திய இணைப்பு.
முடிவான விஷயம்
PK


சதாசார சமிதி
லஞ்ச ஊழல்
கொக்கின் தலையில் வெண்ணெய்!



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 44

அடிமை சோஷலிஸமா? சுதந்திர சோஷலிஸமா?

சோஷலிஸம் என்கிற பெயர் சமூக சௌக்கியம் [என்பதைக் குறிப்பதாக ஆகிவிட்டது. இந்தக் கவர்ச்சிகரமான பெயரைக் காட்டியே ஆட்சேபகரமான கொள்கைகளைப் பின்பற்றுவது தற்போது சாத்தியமாகி யிருக்கிறது. நல்ல இலட்சியத்தை அடைய முயலாமல், அந்த இலட்சியத்தைக் குறிக்கும் 'சோஷலிஸம்' என்ற பெயரை ஓர் உபாயமாக்கி அதன் மூலம் மக்களை மாக்களாக்கும் தீய இலட்சியத்தை அடைய ஒரு கூட்டம் முயன்று வருகிறது. சோஷலிஸம் என்று அவர்கள் மக்களுக்காகக் கூறுகிற இலட்சியம் வேறு; தங்களுக்கென அதன் மூலம் அடைய விரும்பும் இலட்சியம் வேறு. ஆள்கிற கட்சிக்கும் கட்சிக்காரர்களுக்குமே சர்வாதிகாரம் வேண்டுமென்பதுதான் அவர்களுடைய உண்மை இலட்சியம். சமதர்ம சமூகநலனைக் குறிக்கும் சோஷலிஸம் என்ற வார்த்தையை உபாயமாக்கி மக்களை மயக்குகிறார்கள்; அவர்களை வீரியமற்ற குதிரைகளாக்கி, சர்வாதிகாரம் என்ற தேரை இழுக்க வைக்கப் பார்க்கிறார்கள்.

இன்று சோஷலிஸத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் ஏதும் பேதமில்லை. அவற்றுக்குள் கொள்கைப் பாகுபாடு செய்து வாதச் சண்டைகள் போடுவது பொருளற்ற காரியம். சர்க்காரிடம் நாட்டின் செல்வமவ்வளவும், அதிகாரமவ்வளவும் இருக்க வேண்டும்; தனி மனிதர்கள் ஒரு சக்தியுமற்றுப்போக வேண்டும் என்பதுதான் சோஷலிஸ சித்தாந்தம். 'காலக்கிரமத்தில் சர்க்கார் தனது சக்தியை இழந்துவிடும். மக்களே அதிகாரம் பெறுவார்கள்' என்பதாக சோஷலிஸ்டுகள் கூறுவது வழக்கம். ஆனால் எந்த சோஷலிஸ்டு நாட்டிலும் இவ்வாறு நடந்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை. நீண்ட காலமாக சோஷலிஸ ஆட்சி நடக்கும் ருஷியாவைப் பாருங்கள். அங்கு சர்க்கார் அதிகாரம் இம்மியேனும் குறைந்திருக்கிறதா? அதிகார மதுவைச் சுவைத்தவர்கள் அதனை ஒருபோதும் விடமாட்டார்கள். சோஷலிஸத்தால் வீரியம் இழந்த மக்கள் என்றுமே அடிமைகளாகத்தான் இருக்க வேண்டும்.

'ஒரு பிரஜைக்கும் மற்றொரு பிரஜைக்கும் பேதமேயில்லாமல் செய்வோம்' என்று பறைசாற்றுவது யாவரையும் கவரத்தான் செய்யும். ஆனால் இது சாத்தியமா? சாத்தியமற்ற ஒரு பொய்யைச் சொல்வது சரியான கோட்பாடாகி விடுமா? எல்லாம் ஒரே மட்டமாக ஆகிவிட்டால் சமூகம் முன்னேறவே முடியாது. வித்தியாசங்கள் இருக்கவே செய்யும். அவைதான் வாழ்வுக்கு வேகமூட்டும் விசை. தண்ணீர் மட்டம் உயர்வு — தாழ்வாக இருந்தால்தான் மின்சாரம் கிடைக்கும். வித்தியாசங்கள் இருந்தாலும் அவற்றால் அநீதமாக யாரும் முன்னேறாமல் காத்துத் தருவதே சர்க்காரின் கடமை. சட்டத்தின் முன் யாவரும் வித்தியாசமின்றி சம நீதி பெறவேண்டும்; யாவரும் எவ்விதமான வித்தியாசமுமின்றிச் சமமான வாய்ப்புக்களைப் பெற்றிருக்க வேண்டும். இந்த அளவுக்குத்தான் சமத்துவம் சமூகத்துக்கு உதவும். தொழிலிலும், வியாபாரத்திலும் வித்தியாசம் கூடாது, போட்டியே வேண்டியதில்லை என்று எல்லோரையும் ஒரு மட்டமாக்கி, சர்க்கார் ஆதிபத்தியம் செலுத்துவது இயற்கை நியதிக்கே விரோதம். அது ஒருகாலும் பலனளிக்காது.

தனது முயற்சியையும், மூலதனத்தையும் ஒட்டி ஒருவன் நியாயமான முறையில் பொருளை ஈட்டவும் அதனைத் தனதென்று காக்கவும் ஜனநாயகம் பூரண உரிமை அளிக்கிறது. இந்த உரிமையை மறுக்கும் சோஷலிஸம் ஜனநாயகத்துக்கு விரோத

மாகும். 'ஜனநாயகம்' என்பதை ஓர் உரிச்சொல்லாக்கி 'ஜனநாயக சோஷலிஸம்' என்ற தொடர் வார்த்தையைச் சிருஷ்டிப்பதால் சோஷலிஸம் ஜனநாயகமாகிவிடாது. ஆனால் வார்த்தைகளை வைத்தே மகத்தான மோசடி செய்வதுதான் இன்று ஆட்சியாளர்களின் செயலாகிவிட்டது.

இந்த மகத்தான மோசடியால் வசீகரணப்பட்டுள்ள பாமர மக்கள் தங்கள் வோட்டுக்களை சோஷலிஸத்துக்கு அளிப்பதன் மூலம் தங்களுடைய சுதந்திரத்தையே தற்கொலை செய்து கொள்கிறார்கள். 'சுதந்திரக் கட்சி படிப்பாளிகளைத்தான் ஆகர்ஷிக்கும்' என்று காமராஜ் அவர்கள் ஒரு முறை கூறினார். வாஸ்தவம். அதைத் தெரிந்து கொண்டதால்தான் அவர் பாமர மக்களை சோஷலிஸம் என்ற மகத்தான மோசடியால் மயக்க முடிகிறது.

'சோஷலிஸம்' என்ற வார்த்தைக்கு ஒரு நல்ல பொருள் இருப்பதாகக் கற்பிதமாகி யிருப்பதால் நாமும் அந்தப் பதத்தை ஒப்புக் கொள்வோம். சோஷலிஸம் ஒரு நல்ல இலட்சியம் என்றே வைத்துக் கொண்டால் அதன் விளைவு என்னவாக இருக்க வேண்டும் ? எல்லா மக்களும் சந்தோஷமாகவும் சுபிட்சமாகவும் இருக்க சோஷலிஸம் உதவ வேண்டும். எல்லோரும் சமமான வாய்ப்புக்களைப் பெற்றிருக்க சோஷலிஸம் உதவ வேண்டும். சட்டத்தின் ஆட்சி சமரீதியாக நடக்க அது சகாயம் செய்ய வேண்டும். இவை யெல்லாம் இன்று நடைபெறுவதாக யாரேனும் அந்தரங்க சுத்தமாகக் கூற முடியுமா? சோஷலிஸத்தினால் புதிய பேதங்களும் சலுகைகளும் உண்டாக வில்லை என்று யாரேனும் கூற முடியுமா?

மக்கள் சுபிட்சம், சம வாய்ப்பு, சட்டத்தின் சீரான ஆட்சி இவற்றுக்கு முயலாமல் சர்க்கார் சர்வாதிபத்தியத்துக்கே அல்லவா நமது சோஷலிஸவாதிகள் முயன்றுவருகிறார்கள்? கண்ணை மூடிக் கொண்டு ஒரு தப்பிலிருந்து இன்னொரு தப்புக்குத் தாவிச் சர்க்கார் சர்வாதிபத்தியம் என்ற வலையை இறுகப் பின்னி விட்ட சோஷலிஸ்டுகள் அதிலிருந்து ஒரு போதும் மீளப் போவதில்லை. இதன் பின்னும் காங்கிரஸ் சோஷலிஸத்தை ஏற்கலாமா?

சோஷலிஸம் என்றால் சமூக நலன் என்று பொருள் கொண்டால் சுதந்திரக் கட்சியும் ஒரு சோஷலிஸத்தைக் கூறுகிறது. சர்க்காருக்கு சர்வாதிகாரம் தராத சோஷலிஸமே அது. இந்த இரண்டு சோஷலிஸங்களில் எது வேண்டும் என்பதே கேள்வி. மக்கள் குறைந்தபட்ச சுதந்திரம் பெற்றிருந்து, சர்க்கார் சர்வ சக்தி படைத்திருக்கும் காங்கிரஸ் சோஷலிஸம் வேண்டுமா? அல்லது மக்களின் சுதந்திரம் அநாவசியமாகத் தடைப் பெறாமல் நாட்டு நலனுக்காக மலர்ச்சி பெறும் வகையில் சர்க்கார் கண்காணிக்கும் சுதந்திரா சோஷலிஸம் வேண்டுமா? இயற்கை நியதிக்கு விரோதமாக, போட்டியின்றி — சொத்துரிமையின்றி — எல்லாம் சர்க்காருடைய பொருள் என்கிற கொள்கையில் நாட்டில் உற்பத்தி வளருமா? வளராது. காங்கிரஸ் சோஷலிஸத்தின் விளைவான ஒழுங்கீனங்களையும், வீண் செலவையும், மோசடியையும் குறைக்க வழி உண்டா? அவற்றைக் குறைப்பதாகச் சொல்லிக் கொண்டு சர்க்கார் புது ஏற்பாடுகள் செய்யும்போது அவற்றிலும் புது ஒழுங்கீனத்தையும் வீண் செலவையும் மோசடியையும் அல்லவா காண்கிறோம்? இந்நிலையில் சீர்திருத்தத்தை எப்படிக் காண்பது? இயற்கைக்கு விரோதமான நடைமுறை ஒரு நாளும் சீர்திருந்தாது.

இயற்கை நியதிகளை ஒப்புக் கொள்வோம். நியாயமான போட்டியும், நியாயமான சுய லாப நோக்கமும் கொண்ட சுதந்திர வாழ்க்கை ஏற்பட உதவி செய்வோம்; அதன் மூலம் பொருள் தட்டுப்பாட்டையும், வேலையின்மையையும், வறுமையையும் வெல்வோம். நாட்டுச் சுபிட்சத்துக்கு உதவும் சுய ஈடுபாட்டு முறைகளை வரிச்சுமையால் நசுக்கும் சோஷலிஸம் நமக்கு வேண்டவே வேண்டாம்.

'இன்று சுதந்திரத்தை இழந்தாலும் பரவாயில்லை; இதனால் சுபிட்சம் பெறலாம்; இழந்த சுதந்திரத்தையும் என்றோ ஒரு நாள் மீண்டும் பெறலாம்' என்று எண்ணுவதை விடப் பேதைமை எதுவும் இல்லை. நாம் இழக்கும் சுதந்திரம் சாசுவதமாகச் சர்க்காருக்குத் தத்தம் செய்த பொருள்தான். இப்போதே விழிப்புப் பெறாவிட்டால் இன்னும் வேகமாக, ஒருகாலும் திருப்பிப் பெற முடியாத வகையில், எல்லாச் சுதந்திரங்களையும் இழந்து நிற்போம். நாம் மிகவும் முனைப்புடன் இப்போதிருந்தே எல்லா இடுக்கண்களையும் மீறி எழுச்சி கொண்டால்தான் உண்டு. தீரமே முதல் தேவை. பிரச்னைகளைத் தீர்ப்பது தீரமே. நாம் தீரமாக இருக்கச் சங்கற்பித்து விட்டோமானால் கடினமான காரியமெல்லாம் தானே இலேசாகி விடும். தீரம் பெற தெய்வ அருளை நாடுவோமாக !

இரண்டு அபவாதங்கள்

காச்மீரத்தைப் பாகிஸ்தானுக்குக் கொடுத்து விட வேண்டுமென்று சுதந்திரக் கட்சி விரும்புகிறது என்பதாக ஓர் அபாண்டக் குற்றச்சாட்டு உள்ளது. இதனை ஆணித்தரமாக மறுத்துச் சென்ற வாரம் சென்னையில் கூடிய சுதந்திரக் கட்சிப் பாராளு மன்றக் குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றி யுள்ளது. காச்மீர மக்கள் தங்கள் கருத்தைத் தாங்களே எடுத்துச் சொல்ல உரிமை பெற வேண்டும் என்றுதான் சுதந்திரக் கட்சி கூறுகிறதே ஒழிய காச்மீரத்தைப் பாகிஸ்தானுக்கு அளிக்க வேண்டும் என்று ஒரு போதும் கூறவில்லை. 'காச்மீரம் ஏதோ நன்செய் - புன்செய் நிலச் சொத்தல்ல. அது ஒரு மக்கள் கூட்டம். அவர்கள் விருப்பப்படியே முடிவெடுக்க வேண்டும்' என்று மீண்டும் மீண்டும் கூறி வரும் சுதந்திரக் கட்சியானது காச்மீரம் இந்தியாவுக்குச் சொந்தமென்றோ, பாகிஸ்தானுக்குச் சொந்தமென்றோ கூறி ஒரு நாளும் தன் கருத்தை அந்நாட்டின் மீது திணிக்காது. காச்மீரம் காச்மீர மக்களுக்கே சொந்தம் என்பதுதான் அதன் கருத்து. அவர்கள் யாரோடு இணைந்திருக்க விரும்பினாலும், அல்லது தனித்திருக்க விரும்பினாலும் அதனையே அமுலாக்க வேண்டும் என்பது சுதந்திரக் கட்சியின் அபிப்பிராயம்.

நேரு சர்க்காரின் மீதுள்ள விரோதத்தாலேயே ராஜாஜி காச்மீர விவகாரத்தில் இக்கருத்தை வெளியிடுகிறார் என்பதாக இன்னோர் அபவாதம் உள்ளது. இதனை மிகவும் உருக்கமாக மறுதலித்துச் சென்ற இதழ் 'ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியதாவது:

''நேரு சர்க்காரை அப்புறப்படுத்துவதற்காகவே காச்மீர விஷயத்தில் நான் ஒரு குறிப்பிட்ட கொள்கையைக் கடைப்பிடிப்பதாகச் சிலர் நம்புகிறார்கள். இதைவிட உண்மைக்கு அப்பாற்பட்டது எதுவும் இருக்க முடியாது. வாஸ்தவத்தில், நான் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு ஒருவரே இந்திய - பாகிஸ்தான் நட்புக்காக நம் மக்களை ஊக்க முடியும் என்று நம்புகிறேன். சொந்தக் காரணத்துக்காக நான் இவ்விதம் நடக்கிறேன் என நினைப்பவர்களுக்குச் சொல்கிறேன்: எனக்கு ஸ்ரீ ஜவாஹர்லால் அவர்களிடம் உள்ள அன்பு வேறு யாருடைய அன்புக்கும் குறைந்ததல்ல. சொந்த விருப்பு வெறுப்புக்கள் என் கருத்தை உருவாக்கவில்லை. இந்தியாவின் பாதுகாப்பு எவ்வளவு பலமாக இருக்க இயலுமோ அவ்வளவு பலமாக இருக்க உதவும் கருத்தையே நான் கூறுகிறேன். நான் சொல்வதில் தவறு இருந்தாலும் இருக்கலாம். ஆனால் நேருவிடம் விரோதம் இருப்பதால் நான் ஏதோ ஒரு கொள்கையைப் பின்பற்றுவதாகச் சொல்வது ஆதாரமற்ற பேச்சு; அநீதி.''

இந்தியா-பாகிஸ்தான் நல்லுறவு ஏற்படவேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பிரதமர் பம்பாயில் பேசியிருப்பதும், இதற்கு ஷேக் அப்துல்லா உதவக்கூடும் என்ற அவரது உட்கருத்தும் ராஜாஜி அவர்பால் வைத்துள்ள நம்பிக்கையை மெய்ப்பிக்கும் என்றே எதிர்பார்க்கலாம். தம்மை நல்ல வழியில் செல்லவொட்டாமல் தடுப்பவர்களிடமிருந்து பிரதமர் மீளவேண்டியதே இன்றைய தேவை.

மீண்டும் கோட்டை விடலாகாது

'லடாக்கில் சீனா — இந்தியா இரு படைகளும் ஒரு குறிப்பிட்ட தூரம் பின் வாங்கி இடையில் ஒரு ராணுவ சூனியப் பகுதி ஏற்பட வேண்டும்; இதனை இரு நாடுகளும் பரிபாலிக்க வேண்டும்' என்பது கொழும்புத் திட்டப் பிரேரணை. இதற்கு வெகுதூரம் விட்டுக் கொடுத்து ஒரு புதிய 'சலுகை'யை எதிரிகளுக்கு அளித்துப் பம்பாய் காங்கிரஸில் பேசியிருக்கிறார் பிரதமர் நேருஜி. லடாக்கில் சீனாவுக்கு உள்ள ஏழு காவல் சாவடிகளை அது காலி செய்து விட்டால் இரு நாடுகளும் நேரடிப் பேச்சு வார்த்தை தொடங்கலாம் எனக் கூறியுள்ளார் நம் பிரதமர். லடாக்கில் நமக்கு நாற்பத்து மூன்று காவல் சாவடிகள் இருந்தன. இவற்றை மீண்டும் அமைத்து நம்மைப் பலப்படுத்திக் கொள்ளத் தக்க முயற்சி எதுவும் செய்யப்படவில்லை. துராக்கிரகமாக ஊடுருவல் செய்து சீனா அங்கு நிறுவிய காவல் சாவடிகளை அப்புறப்படுத்துவதால் நம்முடைய நியாயமான உரிமையை நிலைநாட்டிக் கொண்டதாக ஆகாது. சீனாவுக்காக எவ்வளவோ விட்டுக் கொடுத்து ஏமாந்து விட்டோம். மீண்டும் அதே பாதையில் பிரதமர் செல்வது மிகவும் துரதிர்ஷ்டமாகும். இவ்விஷயமாகச் சுதந்திரக் கட்சிக் காரியதரிசி ஸ்ரீ எம். ஆர். மஸானி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையை ஆளும்கட்சியினர் யாவரும் கவனிக்க வேண்டும்.



நற்பணிகள் நான்கு

★ ஆண்டவனின் அருட்பான்மை மலையெனப் பொலிய, அவன் தாயாகி வந்து அருள் செய்த தலம் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை. பெண்ணுக்குப் பேறு பார்க்க முடியாமல் வணிக மாதொருத்தி காவிரி வெள்ளத்துக்கு அக்கரையில் தவித்து நின்றபோது, சிவபெருமானே அவளுருவில் சென்று மகளுக்கு மருத்துவம் செய்ததால் இங்கு தாயுமானவர் என்றே பெயர் பெற்றிருக்கிறான். திருச்சி மலைக் கோட்டை தாயுமான ஸ்வாமி கோயில் தொன்மைப் புகழ் வாய்ந்தது. இவ்வால யத்தைப் பழுது பார்த்து, படிகளைச் செப்பனிட்டு, மலை மீது மின்சார விளக்குகள் அமைத்து மகா கும்பாபிஷேகம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக இம்மாதம் 26ந் தேதியிலிருந்து திருச்சியில் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரின் நாராயணீய உபந்நியாசம் பதினைந்து நாட்களுக்கு நடைபெறுகிறது.

தாயான தத்துவனின் தயையைப் பெற விரும்புவோரெல்லாம் ஸ்ரீ ஏ.எஸ். மணி, டிபுடி சீஃப் அகௌண்ட்ஸ் ஆபீஸர், ஸ்டேட்டிரான்ஸ்போர்ட்ஸ், ஜிம்கானு ரோட், மாதுங்கா, பம்பாய்—19 என்ற விலாசத்துக்குத் திரவியம் அனுப்பி வைக்கலாம்.

★ புனித காசியில் ஹநுமான் கட்டத்தில் சுகதேவ மடம் என்ற பெயரில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துக்குரிய சங்கர மடம் ஒன்று உள்ளது. இங்கு சந்திரமௌளீச்வரப் பெருமானுக்கும், ஸ்ரீ பகவத்பாதர்களுக்கும் பிம்பங்கள் உள்ளன. இலமாகி வரும் இம்மடத்தைப் புதுப்பிக்கவும், புது மண்டபம் எழுப்பவும், யாத்ரீகர்கள் தங்க விடுதி அமைக்கவும் கள்ளிக்கோட்டை சாலாபுரம் P. O. வைச் சேர்ந்த ஆடிட்டர் ஸ்ரீ எஸ். பரமசிவன் அவர்கள் ஆசாரியரின் பூரண ஆசியுடன் முயன்று வருகிறார்கள். திருப்பணி பூர்த்தியாக சுமார் இரண்டரை லட்சம் ரூபாய்கள் பிடிக்கும். காசித் தலத்தில் கங்கைக் கரையில் காமகோடியின் சிறப்புத் துலங்க அன்பர்கள் யாவரும் ஆடிட்டர் ஸ்ரீ பரமசிவனுக்குத் துணை புரிய வேண்டுகிறோம்.

★ சென்னையிலிருந்து பூவிருந்தவல்லி செல்லும் சாலையில் பத்தாவது மைலில் பாலியாற்றங்கரையில், வேற்கண்ணி சமேதராக வேதபுரீசுவரர் திருமணக் கோலத்தில் அகத்தியருக்குத் தரிசனம் தந்த தலம் திருவேற்காடு. இந்தத் திருவேற்காட்டில் வேற்கண்ணியின் திருச்சாம்பரிலிருந்து கருமாரியம்மன் உருப் பெற்று, வெள்வேலின் கீழ் அமர்ந்து கோரிய வரங்களைப் பூர்த்திசெய்வதை நேர்முகமாக அநுபவித்த அடியார்கள் அனந்தம். தேவியின் திருக்கோயில் ராஜ கோபுரம் 1957ம் வருஷம் தொடங்கப் பெற்று, தற்போது முக்கியமான திருப் பணி நிறைவு பெற்றுள்ளது. மகாகும்பாபிஷேகம் ஜூன் மாதம் 19ந் தேதி நடை பெறவிருக்கிறது. இந்த மகா கும்பாபிஷேக வைபவத்தில் பக்தர்கள் திரளாகக் கலந்து கொண்டு எஞ்சியுள்ள திருப்பணிகள் இனிது நிறைவேறத் தங்கள் காணிக்கைகளைச் செலுத்திக் கருமாரி அம்மனின் அருளுக்குப் பாத்திரமாகவேணும்.

★ அயோத்தியில் பிறந்த ராமனை நம்முடைய அருமைத் தெய்வமாக்கிக் கொண்டுள்ள தென்னிந்தியர் வட இந்தியாவிலேயே அவனுக்கு ஓர் ஆலயம் எடுக் கிறார்கள் எனில் அது விசேஷமான நிகழ்ச்சியல்லவா? கல்கத்தாவாழ் தென் னிந்தியர்கள் இப்படி ஒரு விசேஷ நிகழ்ச்சிக்குக் காரணகர்த்தராகியுள்ளனர்.

சுமார் ஒன்றரை லட்சம் ரூபாய் அளவுக்கு ஆலயத்துக்காகத் திட்டம் தீட்டி கல்கத்தா லேக் கார்டன் பகுதியில் ஸ்ரீ ராமமந்திரத்தை உருவாக்கியுள்ள னர். ஜூன் மாதம் பன்னிரண்டாம் தேதி ராம மந்திரத்துக்குக் கும்பாபிஷேகம் நடக்கிறது. ஸ்ரீ ராமன் — சீதாதேவி — லட்சுமண ஸ்வாமி — ஆஞ்சநேயர் ஆகி யோரின் விக்கிரஹங்கள் அன்றே பிரதிஷ்டையாகின்றன.

எல்லா மக்களுக்குமான கும்பாபிஷேகத்தில் எல்லா மக்களுமே கைங் கரியம் செய்ய வேண்டுமென்பது ராமமந்திர நிர்வாகஸ்தர்களின் விருப்பம். இந்த விருப்பத்தை நிறைவேற்றித் தர வேண்டிய ராமனடியார்கள், Managing Committee, Sri Ram Mandir, 58/14/1, Prince Anwarsha Road, Lake Gardens P.O., Calcutta - 45 என்ற விலாசத்துக்குக் காணிக்கை அனுப்ப வேணும்.

நான்கு நற்பணிகளை ஒரே மூச்சில் சொல்லி விட்டோமே என்று தயங்க வேண்டாம். நான்கு திவ்விய கைங்கரியங்கள் நிறைவேற உதவி செய்தால் இன்னும் நாலாயிரம் பணிகளுக்கு உதவவும் தன்னால் வசதி ஏற்படும்.

கண்ணுதேவி புகழோங்கிய சினிமா ''நட்சத்திரம்'' எல்லாருக்கும் தெரியுமே? நான் சொல்லப் போகும் அவளைப் பற்றிய கதை இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த விஷயம். அப்போது கண்ணுதேவியின் பெயர் மந்தவெளி கண்ணு.

மந்தவெளி கண்ணுவுக்கு வயது எட்டுதான். அவளுடைய தகப்பன் இறந்தபோது இவளுக்கு ஐந்து வயது. தாயார் வள்ளியம்மாள் ஒரு பெரிய மனிதர் வீட்டில் மாதம் பதினைந்து ரூபாய் கூலிக்கு வேலை செய்து வந்தாள். கண்ணுவுக்கு ஓர் அண்ணனும் ஒரு தங்கையும். இருவரும் சிறு குழந்தைகள்.

ஒரு சினிமா கம்பெனியில் ஷூட்டிங்கு காலத்தில் கூட்டத்தில் ஒரு குழந்தையாக ''நடித்து'' வந்தாள். அந்த மைனர் பார்ட்டில் வாரம் ஐந்து ரூபாய் கூலி பெற்று வந்தாள். ஐந்து ரூபாயைத் தாயாரிடம் கொடுத்து விடுவாள். முதலில் ஷூட்டிங்குக்கு வேண்டிய அலங்கார உடுப்புக்களைச் சினிமாக்காரர் கொடுத்தார்.

மந்தவெளி கண்ணு



குடும்பத்தை வள்ளியம்மாள் தன் மாதம் பதினைந்து ரூபாய் சம்பளமும் கண்ணுவின் சம்பாத்தியமும் சேர்த்து எப்படியோ சமாளித்து வந்தாள். ஆனால் அந்தக் காலத்தில் விலைவாசிகள் இப்போது இருப்பது போல் அத்தனை உயரவில்லை.

சில சமயம் கண்ணுவுக்குச் சினிமாவில் வேலை இருக்காது. அப்போது வள்ளியம்மாள் ரொம்பக் கஷ்டப்படுவாள்.

ஒரு நாள் சித்திரை மாதம் துவாதசி செவ்வாய்க் கிழமை மாலை வழக்கம் போல் கண்ணு சினிமா ஆபீசு மாடிக்குத் தன் வாரச் சம்பளம் பெற ஏறிச் சென்றாள். இருபத்தைந்து எக்ஸ்ட்ராக்களுக்குச் சினிமா மானேஜர் பெருமாள் நாயுடு கூலி பட்டுவாடா செய்தார். ஒரு ரூபாய் நோட்டுக்களாகக் கண்ணுவுக்கும் அவர் கூலியைத் தந்தார். பெற்றுக் கொண்டு மாடிப் படியில் இறங்கினாள்.

படியின் முதல் வளைவில் நின்று பணத்தை எண்ணினாள். பணம் கொடுத்த போது குமாஸ்தா எதிரில் யாரும் எண்ணும் வழக்கமில்லை. அப்படி எண்ணுவது மரியாதைக் குறைவு. அவநம்பிக்கையைக் காட்டும்.

கண்ணு மெதுவாகக் காகித நோட்டுக்களைப் பிரித்து எண்ணினாள். எண்ணிய போது ஆறு நோட்டுகளாகக் கண்டாள். மறுபடியும் எண்ணினாள். ஒரு நோட்டு அதிகமாகத்தான் இருந்தது. பெருமாள் நாயுடு எண்ணுவதில் தவறு

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

செய்து ஒரு ரூபாய் அதிகமாகக் கொடுத்து விட்டதாக உணர்ந்தாள்.

மானேஜர் நாயுடு இப்படித் தவறாக எண்ண மாட்டாரே என்று மறுபடியும் எண்ணினாள். ஒரு ரூபாய் அதிகமாகத் தான் இருந்தது என்று நிச்சயமாகக் கண்டாள். பணத்தை மடித்துச் சொக்காய் ஜேபியில் வைத்துக் கீழே சென்றாள்.

ஒரு ரூபாய் அதிகமாக வந்தது தன் அதிர்ஷ்டம். அம்மா எவ்வளவு சந்தோஷப்படுவாள் என்று எண்ணிக் கொண்டு இறங்கினாள்.

இரண்டாவது வளைவில் மறுபடியும் தாமதித்தாள். நாயுடுவிடம் சொல்லி விட்டு ஒரு ரூபாயைத் திருப்பித் தந்து விடுவது நல்லது என்று எண்ணினாள். அடுத்த கணம் இந்த ஒரு ரூபாய்க்கு ஏதாவது தங்கைக்கு வாங்கிக் கொண்டு போகலாம் என்று யோசித்தாள்.

கண்ணு! இப்படிக் குழந்தையை நீ சோதிக்கலாமா? அம்மை கௌரி! நீதான் இந்த இளம் குருத்தைக் காப்பாற்ற வேண்டும். ஐயோ! கால் மேலே ஏறவில்லை. கீழே சென்றாள்.

ஏழைக்கு ஒரு ரூபாய் என்றால் பத்து ரூபாய் மாதிரி. தானாக வந்த அதிர்ஷ்டத்தை உதைத்துத் தள்ளிவிட எளிதில் மனம் வராது.

கண்ணு! சோதனை செய்ய வேண்டாம்.

மூன்றாவது வளைவு வந்தது. அங்கு மறுபடி ஒரு நிமிஷம் நின்றாள். நல்ல வேளை! தரும தேவதை கண்ணுவை விட்டு விடவில்லை. ஏழை அகதிகளைத் தெய்வம் காப்பாற்றும். "சீ.... சீ..மோசம் கூடாது. இது திருட்டுத்தனம் ஆகும். திரும்பிச் சென்று மானேஜரிடம் விஷயத்தைச் சொல்லி விடுவதுதான் சரி" என்று உள்ளத்தில் அம்மை கௌரி சொன்னதும் கண்ணுவுக்கு ஓர் உறுதி ஏற்பட்டது. ஜெயித்து விட்டாள் சத்துருவை மந்தவெளி கண்ணு.

கிடுகிடு வென்று குதித்தேறினாள் எல்லாப் படிகளையும். மானேஜர் அறைக்குள் முகத்தில் ஒரு ஜோதியுடன் புகுந்தாள். விஷயத்தைச் சொல்லிப் பெருமாள் நாயுடுவிடம் ஆறு ரூபாய் நோட்டுகளையும் காட்டினாள்.

ஒருவித பதற்றமும் இல்லாமல் பெருமாள் நாயுடு ஒரு ரூபாயை எடுத்துக் கொண்டு, "சரி, போ", என்று சொல்லி விட்டார்.

கண்ணுவின் குழந்தை உள்ளத்தில் நடந்த குருக்ஷேத்திர யுத்தம், பாவம், மானேஜர் எப்படி உணர்வார்? அவருக்கு மாதம் ஒன்றுக்கு இருநூறு ரூபாய் சம்பளம். தம் எண்ணிக்கைத் தப்பித்ததை எண்ணிக் கொஞ்சம் வருத்தப்பட்டார். அவ்வளவே. கண்ணுவின் தர்மசங்கடத்தைப் பற்றி அவருடைய கருத்து செல்லவில்லை.

தாயாரிடம் விஷயத்தைக் கண்ணு சொன்னாள். "கண்ணு! நீ செய்தது




சரி" என்று கட்டித் தூக்கி முத்தமிட்டாள். "உன்னை அம்மை எப்போதும் காப்பாற்றுவாள்!" என்றாள்.


கண்ணுதேவி இந்தக் கதையை யாரிடமும் சொன்னதில்லை. சென்ற பூசத்தில் கோயிலில் அவளும் புருஷன் சாமியப்பாவும் சாமியைக் கும்பிட்டு விட்டுத் திரும்பும் போது புருஷனிடம் முதல் தடவையாக இந்த விஷயத்தைக் கண்ணில் நீர் பெருகச் சொன்னாள். சாமியப்பா தன் மனைவியைப் பற்றி மிகப் பெருமையுடன் என்னிடம் சொன்ன கதை, இது. பெருமைப்பட வேண்டிய சம்பவம்தானே!

(ஒரு பழைய ஆங்கிலக் கதையை ஒட்டியது)

நாட்டின் பாதுகாப்புக்கும்



அபிவிருத்திக்கும்



நெருங்கிய தொடர்பு உண்டு

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும், தேசிய பாதுகாப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. நாட்டின் எதிர்பட்டுள்ள அவசர நெருக்கடியை சமாளிக்க சில தொழில்களுக்கு புதிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மின்சாரத் திட்டங்கள், உருக்கு போன்ற அடிப்படைத் தொழில்கள், இயந்திரங்கள், இயந்திரக் கருவிகள், மின்சாரங்கள், நிலக்கரிச் சுரங்கங்கள், ரயில்வேக்கள், இஞ்சினியரிங் மற்றும் மருத்துவ தயாரிப்புப் பயிற்சியளிப்பது ஆகியவைகள், துரிதகதியில் நடைபெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மாதிரி உறுதியான அஸ்திவாரத்திலேயே நாட்டின் பாதுகாப்புச் சக்தி உருவாகிறது. நம் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இது ஒன்றே ஏற்ற பணி.

உங்களால் முடிந்த ஒவ்வொரு வழியிலும்—எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும்-இந்த இயக்கத்திற்கு ஆதரவு அளியுங்கள். லட்சக்கணக்கான மக்களின் சலியாத உழைப்பாலும், தயக்கமற்ற உழைப்பாலுமே இந்தியா தன் படைபலத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று கருதுகிறது.



திட்டத்திற்கு உதவுங்கள்

இந்தியாவின் பாதுகாப்பைப் பலப்படுத்துங்கள்

DA 63/394



பெண்ணையும் பிள்ளையும் அழைத்துக் கொண்டு பெண்ணும பிள்ளையும் (பேடீ—பேடே) என்னும் ஹிந்திப் படம் பார்க்கச் சென்றேன்.

"கதை இருக்கிறது சார்!" என்றார் நண்பர் ஒருவர்.

நிசமாகவே கதை இருந்தது. அது எங்கும் ஓடிப் போய்விடவில்லை.

ரகு என்ற ஆலைத் தொழிலாளிக்கு மூன்று குழந்தைகள். மூத்தவள் பெண்; மற்ற இருவரும் பிள்ளைகள். அறியாப் பருவமுள்ள பாலகர்கள். இந்தப் பாத்திரமேற்று நடித்துள்ள அறியாப் பாலகர்களான அன்வர், ஷஹீத், துலாரி, சுரேஷ்குமார் ஆகியவர்கள் நன்றாகவே நடித்துள்ளனர்.

வீட்டு வாடகை தரவில்லை என்பதற்காக ரகுவின் சைக்கிளை வீட்டுச் சொந்தக்காரர் பறித்துக் கொண்டு விடுகிறார், அலுவலகத்துக்குப் போக முடியாமல்.

"அப்பா! இனி ரகுவுக்கு வேலை போய்விட வேண்டியதுதானே?" என்று கேட்டான் என் பையன்.

வேலை மட்டுமா போயிற்று? இரண்டு கண்களும் போய் விட்டன. தன் குழந்தைகளை அநாதையாகத் தவிக்க விட்டு விட்டுக் குருடனாகவே கண் காணாத இடத்துக்கு ஓடி விடுகிறான்.

'கதை முடியும் கட்டத்தில் ரகு திரும்பி வந்துவிடுவான் அப்பா!' என்றான் என் பையன்.

வீட்டை விட்டு விரட்டப்பட்ட அநாதைக் குழந்தைகள் மூன்றும் ரயில் ஏறுகின்றன. என் பெண் சொன்னது போலவே பிரிக்கவும் படுகின்றன. நடுப் பையன் ரயிலிலேயே விடப்பட்டு ஒரு நாடகக் கம்பெனிக்காரர்களுடன் சேருகிறான்.

பெண் தன்னைப் போலவே தாயற்ற—ஆனால் பணக்காரப் பையன் ஒருவனின் வீட்டில் தஞ்சம் புகுகிறாள். பணக்காரப் பையன் அன்போடு போட்ட லாக்கெட்டுடன் கடைசிப் பையன் களவாடப்படுகிறான்.

"அந்தப் பணக்காரப் பையனுக்கும் இந்த ஏழைப் பெண்ணுக்கும் 'காதல்' ஏற்படும் இல்லையா?" பெரிய கேள்வியாகத்தான் போடுகிறான் என் சிறு பிள்ளை!

இந்தக் காலத்துப் பிள்ளைகள்தான் சினிமா பார்த்துப் பார்த்துப் பழக்கமானவர்களாயிற்றே! அவர்கள் கதை சொல்லச் சொல்ல 'பேடீ – பேடே' கதையும் இம்மி பிசகாமல் வளர்கிறது. கடைசியில் மூன்று கல்யாணங்களுடன் ஜாம் ஜாமென்று கதை முடிகிறது.

நம் தமிழ்நாட்டு நேயர்களுக்கு இது போன்ற கதைகள் புதிதில்லைதான். ஹிந்தி நேயர்களுக்கு ஒருவேளை புதிதாகப் படலாமில்லையா?

ஆனால் இது பிரசாதின் படமாயிற்றே? கதையைப் புரியும்படியாக, அறுசுவை உண்டிக்கு என்ன என்ன பக்குவங்கள் எல்லாம் செய்யவேண்டுமோ, அப்படிப் பல்சுவையுள்ள கதைக்குத் தேவையான முறையில் சுநீல்தத், சரோஜா தேவி, ஜமுனா, மகமூத் போன்ற நடிகர்களின் உதவியோடு தாளித்துக் கொட்டிப் படமாக்கி இருக்கிறார்.

என்னைப்போல் பெண்ணையும் பிள்ளைகளையும் பெற்றவர்கள் அவர்கள் கதை சொல்லச் சொல்லத் திரைப்படக் கதையைப் பார்த்துப் புரிந்துகொண்டு ரசித்திடலாம். —ரா. வீ.



உண்மைக் கதை

என் குடும்பம்



[கெரால்ட் டுரேல் ஐரோப்பிய மிருகக்காட்சி சாலைகள் பல வற்றிற்கும் ஏராளமான மிருகங்களைப் பிடித்துக் கொடுத்திருப்பவர். A Zoo in my luggage என்ற அவருடைய நூலின் சில பகுதிகள். படங்கள் வரைந்திருப்பவர் ரால்ப் தாம்ப்ஸன் — லண்டன். பேர்ட் ஹார்ட்—டேவிஸ் பிரசுரம்.]

மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள 'பிரிட்டிஷ் காமரூன்ஸ்' பிரதேசத்தில் நானும் என் மனைவியும் ஆறு மாதங்கள் பிரயாணம் செய்ததைப் பற்றிய விவரமே இந்நூல். நாங்கள் அங்கு சென்றதற்கான காரணம் கொஞ்சம் அபூர்வமான ஒரு விஷயம்தான். நாங்கள் எங்களுக்கென்றே பிரத்தியேகமாக ஒரு மிருகக் காட்சிசாலை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினோம். அதற்கான மிருகங்களைச் சேகரிக்கவே புறப்பட்டோம்.

முதல் உலக மகாயுத்தம் முடிந்த காலந்தொட்டே நான் உலகின் பல்வேறு பாகங்களிலும் உள்ள மிருகக்காட்சி சாலைகளுக்காக எத்தனை எத்தனையோ மிருகங்களைக் கானகங்களுக்குப் போய்ப் பிடித்துக் கொடுத்திருக்கிறேன். ஆனால் அதனுலெல்லாம் எனக்கு மிகுந்த மன வருத்தமே ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்னவெனில், வன விலங்குகளைப் பிடித்தது முதற்கொண்டே அவற்றின் தாயாகவும் தந்தையாகவும் நான் மாறி விடுவேன். என் நிலையில் நீங்கள் இருந்தால் உங்களுக்கும் இதே நிலைதான் ஏற்படும். வாயில்லா ஜீவன்களுக்கு உணவூட்டி அவற்றைப் பாதுகாத்துச் சுமார் ஆறு மாதங்கள் வரை உடனிருந்து கவனித்து வளர்த்து வந்தால் போதும், அம்மிருகங்களுக்கும் நமக்குமிடையே பந்தபாசம் ஏற்பட்டு விடும். அதன் பிறகு அவற்றை விட்டுப் பிரிவதென்றால் நெஞ்சுருகாமல் இருக்குமா? அவற்றை ஏதேனும் ஒரு மிருகக் காட்சிசாலையில் யாரேனும் ஒருவரிடம் ஒப்படைத்து விட்டு வருவது என்றால் மனம் நோகாதா?

இந்தச் சங்கடத்திலிருந்து மீள எனக்கு ஒரே ஒரு வழிதான் தோன்றியது. அது நமக்கெனத் தனியாக ஒரு மிருகக்காட்சி சாலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுதான். அதே சமயத்தில் அதைப் பொதுமக்களுக்கும் திறந்து விட்டுவிட்டால் நிர்வாகச் செலவுக்கும் போதுமான வருவாய் கிடைக்கலாம்.

இதைவிட இன்னும் ஒரு முக்கியமான நோக்கம் எனக்கிருந்தது. உலகில் விதம் விதமான ஜீவராசிகள் பல்லாயிரக் கணக்கில் வாழ்கின்றன என்றாலும் இவற்றில் ஒருசில பிராணி இனங்கள் மனிதனுடைய பேராசை காரணமாகப் பூண்டோடு அழிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு நசிக்கப்பட்டு வரும் குலத்தைச் சேர்ந்த மிருகங்களில் கூடுமானவரை சிலவற்றைப் பிடித்து, அவற்றுக்குப் பாதுகாப்பு அளித்து, அந்த இனங்கள் பூமியிலிருந்தே மறைந்து விடாமல் காப்பாற்ற வேண்டும்; அதற்கு என்னால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்பது என் ஆசை.

ஃ ஃ ஃ

பாஃபட் என்ற பகைமையான பகுதியின் சர்வ வல்லமை பொருந்திய தலைவராக விளங்கியவர் என் நெருங்கிய நண்பர். முன்பே அவர் ஊருக்கு ஒரு முறை போய்ப் பல மிருகங்களைப் பிடித்திருக்கிறேன் நான். இப்போதும் அங்கேதான் சென்று கொண்டிருந்தேன். வழியில் மாம்ஃபி என்ற டவுனில் சில நாட்கள் தங்க உத்தேசித்திருந்தேன். அங்கே யுனைடெட் ஆப்பிரிக்கா கம்பெனியின் மானேஜர் எனக்கு உதவுவார் என்று இருவருக்கும் பொதுவான நண்பரொருவர் என்னிடம் கூறியிருந்தார்.

அவருடைய வீட்டுக்குள் நுழைந்து சென்று என்னை நானே அறிமுகம் செய்து கொண்டேன்.

''அட, ஆண்டவனே! நீதான் அந்தப் பிராணிப் பித்துப் பிடித்தவனா?'' என்ற அவர், என்னை உற்றுப் பார்த்தார். ''அப்பனே! நான் குடித்த 'ஜின்'தான் என்னை ஏமாற்றுகிறதா? அல்லது உண்மையாகவே உன் வயிறுதான் அப்படி 'ராக் அண்ட் ரோல்' நடனமாடுகிறதா?'' என்று கேட்டார்.

''ஓ! அதுவா?.... அது என் சட்டைப் பைக்குள்ளிருக்கும் கிரிப்பின்னை படுத்தும் பாடு!'' என்றேன் நான்.

அந்தக் கிரிப்பின்னையை அந்த இடத்திலிருந்து இருபத்தைந்தாவது மைலில் நான் விலைக்கு வாங்கினேன். லாரியில் அது ஓரிடத்தில் நில்லாமல் இங்கு மங்கும் ஓடியது. எங்கே 'கியர் பாக்ஸி'ல் காலைச் செருகி ஒடித்துக் கொண்டு விடுமோ என்று பயந்து போய் அதை என் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டிருந்தேன்.

நானும் எனது மனைவி ஜாக்கியும், என் உதவியாளன் பாபும், ஸெக்ரடரி ஸோபியும் ஜானுடைய வீட்டில் தாற்காலிகமாகக் குடியேறினோம். மிருகங்கள் என்றாலே கட்டோடு பிடிக்காது ஜானுக்கு. அப்படியிருந்தும் நான்கு பிராணிப் பிரியர்களைத் தன் வீட்டில் வரவேற்க அவருக்கு எத்தனை துணிச்சலும் பெருந்தன்மையும் இருக்க வேண்டும்?

நாங்கள் வந்து சேர்ந்த இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் ஜானுடைய வீட்டு வராந்தாவில் ஒரு மங்கூஸ், ஓர் அணில், ஒரு புஷ் பேபி, இரண்டு குரங்குகள் ஆகியவை யிருந்தன. வாசலுக்கு வந்தால் ஒரு குரங்கு ஜானுடைய கால்களை இறுகக் கட்டிக் கொள்ளும். இந்த அரவணைப்பைப் பொறுத்துக் கொள்ள அவன் பழகிக் கொண்டிருக்கும் வேளையில் ஒரு நாள் மத்தியானம் அகஸ்டைன் என்னைக் காண வந்தான். அவன் தன் பின்னோடு ஆஜானுபாகுவான ஆறடி உயரமுள்ள சகா, மேற்கு ஆப்பிரிக்கன் ஒருவனை அழைத்துக் கொண்டு வந்தான்.

''எங்களுக்காகக் கொஞ்சம் நல்ல கயிறு கொடுத்து உதவ முடியுமா?'' என்று கேட்டான் அகஸ்டைன்.

''கயிறு? எதற்குக் கயிறு?''

''ஒரு பெரிய மலைப் பாம்பைக் கண்டோம். அதைப் பிடிக்க நல்ல கயிறு இல்லை.''

'மலைப் பாம்பு' என்றதும் பாப் துள்ளிக் குதித்தான். ஊர்வன என்றால் அவனுக்கு உயிர் !....

''எவ்வளவு பெரிய பாம்பு?''

அகஸ்டைனுக்கு அருகில் ராட்சதனைப் போல் நெடிதுயர்ந்து நின்ற அந்த மேற்கு ஆப்பிரிக்கன் தன் துடையைத் தட்டிக் காண்பித்தான். ''இவ்வளவு பெரிது! அது பொத்








துக்குள் போய் ஒளிந்து கொண்டிருக்கிறது. அதைப் பிடிக்கக் கயிறு இல்லே!''

சுமார் எட்டடி அகலமும் மூன்றடி உயரமும் உள்ள பல குகைகள் அந்தப் பாறையில் இருந்தன. அந்தத் துவாரங்கள் ஒன்றோடொன்று தொடர்புடையன. மழை நீர் உள்ளே புகுந்தாலும் கீழ்த் துவாரங்கள் வழியாக வடிந்து விடுவது போல் வசதியாக அமைந்திருந்தது. ஒரு மலேப் பாம்பைத் தவிர வேறு எந்தப் பிராணியும் இந்தக் குகையினுள் சிரமமின்றிச் சௌகரியமாக வாழ முடியாது. இந்த இடத்தை நாங்கள் அடைந்ததும் ஆப்பிரிக்கர்கள் முன் யோசனையுடன் சுற்றுப் புறத்திலிருந்த புல்லேக் கொளுத்தினர்கள்;—அந்தப் புகையினல் பாதிக்கப்பட்டுப் பாம்பு வெளி வரும் என்பதால். ஆனல் இந்தப் பாம்பு எங்களே ஏமாற்றி விட்டது. பாபும் நானும் குப்புறப் படுத்துக் குகைத் துவாரங்களுக்குள்ளே ஊர்ந்து போனேம்.

பாப் அதனே அநாவசியமாகத் தொந்தரவு செய்ய விரும்பாதவன் போல் மெதுவாக ஒரு கழியின் வளேந்த நுனிப் பகுதியைப் பாம்பை நோக்கி நகர்த்தினன். சுருண்டு படுத்திருந்த பாம்பினுடைய உடலின் ஒரு வளேவில் நன்கு பொருந்துகிற மாதிரியாகக் கொக்கி போல் மாட்டினன். கழியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பலம் கொண்ட மட்டிலும் ஓர் இழுப்பு வேகமாக இழுத்தான்.



அவ்வளவுதான்! அடுத்த கணம் பாம்பின் பெரும் பகுதி எங்களே நோக்கி நழுவி வந்தது. பாப் மனக் கிளர்ச்சியுற்றவனுகப்பின் நோக்கி நகர்ந்து கொண்டு மீண்டுமொரு முறை இழுத்தான். சுருண்டிருந்த பாம்பு நீண்டு நெளிந்தது. அதன் தலேயும் கழுத்தும் உடலின் நெளிவு சுளுவுகளுக்கு மத்தியிலிருந்து வெளிப்பட்டு எங்களே நோக்கி நீண்டு சவுக்கடி கொடுப்பது போல் எங்களேத் தாக்கியது. நாங்கள் அவசரம் அவசரமாகப் பின்னேக்கி நகர்ந்து பொந்துக்குள்ளிருந்து வெளிப்பட்டோம். பாப், ''கயிறு! கயிறு! சீக்கிரம் கயிறு!'' என்று கத்திக்கொண்டே கழியைப் பற்றி இழுத்தான். பாம்பு வெளிப்பட்டுக் கழியின் வளேயக் கொக்கியிலிருந்து தன்னே விடுவித்துக் கொள்ள எப்படியெல்லாமோ நெளிந்து அரும்பாடு பட்டது.

இந்தத் தருணத்தில் பாப் ஒரு சிறிய உருண்டையான கல்லின்மீது காலே வைக்க அது அவன் காலே வாரி விட்டுவிட்டது. பாப் கீழே விழுந்தான். கழி அவன் கரத்திலிருந்து நழுவி விட்டது. கண்ணிமைக்கும் நேரத்தில் 'ப்ளாட்டிங் பேப்பர்' நீரை உறிஞ்சிக் கொள்வது போல் பாம்பு பாறையின் ஒரு பிளவினுள் நுழைந்து மறையப் பார்த்தது.

அந்த இடுக்கினுள் மனிதனல் நுழைய முடியாது. நானும் பாப்பும் வெளியே நீட்டிக் கொண்டிருந்த பாம்பின் வாலேப் பிடித்துச் சக்தி உள்ள மட்டிலும் இழுத்தோம். அதனுடைய வலிமை மிக்க தசை நார்கள் எங்கள் கரங்களுக்கிடையில் அலே அலேயாய்ப் பம்மிச் சுருங்குவதை உணர்ந்தோம். வியர்வையால் நனேந்திருந்த எங்கள் கரங்களிலிருந்து அது அங்குலம் அங்குலமாய் வழுக்கிச் சென்று பாறை இடுக்கில் மறைந்துவிட்டது. எங்கோ பாறைப் பிளவின் அடிவாரத்திலிருந்து கேட்பது போல் பாம்பின் வெற்றிப் பெருமூச்சாகச் சீறும் ஒலி மட்டுமே எழுந்தது.

நாங்கள் இரைக்க இரைக்க ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். சிகரெட் பாக்கெட்டை எடுத்து எல்லோருக்கும் சிகரெட்டை விநியோகித்தேன். ''பாப்! நமக்கும் நல்ல காலம் வரும், கவலேப்படாதே!'' என்று ஆறுதல் கூறினேன்.

கானகத்தில் மிருகங்களேப் பிடிக்க மிகவும் பயன்படும் முறை துவாரம் உள்ள, பெரும்பாலும் காய்ந்து போன மரத்தைச் சுற்றிப் புகை எழும்பச் செய்து அதன் மூலம் அதன் உள்ளிருக்கும் ஜந்துக்களே வெளியேற்றி வலேயில் விழப் பண்ணுவதுதான்! மரத்தின் மேலே வலே அல்லது பையுடன் ஒருவன் உட்கார்ந்திருப்பான். மரத்தின் தண்டுப் பாகத்தின் மேல் பகுதியில் உள்ள துவாரங்களெல்லாம் வலே கட்டப்பட்டிருக்கும். அடிவாரத்திலுள்ள துவாரங்களே அடைத்து விட்ட பிறகு தீ மூட்ட வேண்டும். பச்சை இலேகளே நெருப்பில் நிறையப் போட்டுப் புகையைக் கிளப்பவேண்டும். இல்லாவிட்டால் காய்ந்த மரம் முழுதுமே பற்றி எரிந்து சாம்பராகிவிடலாம். மரத் தண்டின் மையத்தில் குழாய்போல் வெற்றிடம் இருப்பதால் புகைபோக்கியில் புகை நுழைவது போல் இங்கும் புகைமேலே ஏறும். பாம்புகள், காட்டுப் பூனே, வௌவால், ராட்சத நத்தை போன்றவை வெளியே ஓடி வந்து வலேகளில் விழுந்து சிக்கிக் கொள்ளும்.

இம்முறை மரத்தின் மேலிருந்து கீழே இறங்கிய ஆப்பிரிக்கன் பையில் தன்னிடம் ஏதோ அகப்பட்டுக் கொண்டிருப்பதாய்ச் சொன்னன்.

''மனிதனுக்கு இருப்பதுபோல் அதற்குப் பெரிய கண்கள்!'' என்ருன் வியப்புடன்.

நான் ஆர்வம் மேலிட்டவனுக, ''அதற்குக் குரங்குக்குள்ளதைப் போன்ற விரல்கள் இருக்கின்றனவா!'' என்று கேட்டேன்.


''ஆமாம்!'' என்ருன்.

நான் பரபரப்புடன் ஆனல் ஜாக்கிரதையாகப் பையைப் பிரித்துப் பார்த்தேன். பெரிய காதுகளும், அகன்ற கண்களும், மனிதனுடை

யது போன்ற கரங்களும் கொண்ட அந்த ஜந்து — சந்தேகமேயில்லே! நான் எதிர்பார்த்தது போல் அது ஒரு புஷ்பேபிதான்! புஷ்பேபி மிகவும் அபூர்வமான ஒரு பிராணி. அதிலும் இரண்டு விதங்கள் உண்டு. அந்த இரண்டு பிரிவுகளும் என்னிடம் இன்னும் சிக்கியிருந்தது காணக் கிடைக்காத ஒன்ருகும். ''பாப்! இதை இங்கிலாந்துக்கு நாம் எடுத்துப்போனல் ஐரோப்பா கண்டத்திலேயே இந்தப் பெயர் கொண்ட பிராணி நுழைவது இதுதான் முதல் தடவையாக இருக்கும்'' என்றேன் நான் மகிழ்ச்சியோடு.

பாஃப்பட்டின் மன்னரைப்போல் விளங்கிய ஃபான் எங்களை வரவேற்று உபசரித்தார். அவரது விருந்தினர் விடுதியில் நாங்கள் தங்கி இருந்தோம். அப்போது சில ஆப்பிரிக்கர்கள் எங்களைக் காண வந்து தங்கள் காணிக்கையாக ஒருகூடையைத் தரையில் வைத்தார்கள்.

அதைத் திறந்து பார்த்தேன். உள்ளே ஓர் அணில் குட்டி இருந்தது. அது மூன்றரை அங்குல நீளம்தான் இருந்தது. கூடையின் அடியில் பரப்பியிருந்த புல்லில் சுற்றிச் சுற்றி வந்தது. அதை மெல்ல எடுத்து என் கரத்தில் வைத்துக் கொண்டேன். அதைக் கண்டதும் என் மனைவியின் கண்டத்திலிருந்து எழுந்த வியப்பொலிகளும் அன்பொழுகும் கொஞ்சும் மொழிகளும் ஒருவாறு அடங்கும் வரையில் பொறுமையோடு காத்திருந்து விட்டுச் சொன்னேன்: ''இதோ பார்! உனக்கு இது வேண்டுமானல் வைத்துக் கொள். ஆனல் அணில்கள் சிறைப் படுத்தப்பட்டால் அவை சாதாரணமாய் அதிக நாட்கள் உயிர் வாழ்வதில்லை. அதற்கு உணவூட்டுவதே பெரும் பிரச்னையாக இருக்கும். அடைத்து வைக்கப்பட்ட அணில்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதிலேயே கண்ணு யிருக்கின்றன. இதை நான் அனுபவத்தின்பேரில் சொல்கிறேன்'' என்றேன்.



என் மனைவி என் சொற்களை லட்சியம் செய்யாமல், ''எவ்வளவு அழகான நிறம்!'' என்று அதைப்பற்றி வர்ணிக்க ஆரம்பித்து விட்டாள். நான் பயந்ததற்கு நேர்மாறாக அந்த அணில் குட்டி பிழைத்துக் கொண்டது. அது கண்களைத் திறந்த பிறகு வெகு வேகமாக வளர்ந்து வனப்பு மிக்க அணிலாக மாறி எங்களை மகிழ்வித்தது.

எத்தனையோ விதமான மிருகங்களைச் சேகரித்துக் கொண்டு நாங்கள் கப்பலேறினேம். கப்பல் காப்டன் எங்கள் சாமான்களையெல்லாம் பார்வையிட்டு வியந்து போனர்.

''பெட்டி படுக்கைகளுடன் ஒரு மிருகக் காட்சி சாலையையும் தூக்கிக் கொண்டு போகும் பிரயாணியை நான் இப்போதுதான் முதன் முதலாகப் பார்க்கிறேன்!'' என்று அவர் புருவங்களையும் தோள்களையும் உயர்த்தி இப்படியும் அப்படியுமாய்த் தலையை அசைத்து விட்டுத் தம் அலுவல்களைக் கவனிக்கப் போய் விட்டார்......

போர்ன் மவுத் நகரில் என் அக்காள் வீட்டுத் தோட்டத்தில் என் மிருகங்களெல்லாம் உலவி வந்தன. அவற்றுக்கிடையில் நானும் என் மனைவியும் வளைய வந்தோம்.

வீட்டில் நாயும் பூனையும் வளர்த்தால் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் பொறுப்பார்கள். கழுகுகள், ஆந்தைகள், குரங்குகள் என்ற பிராணிகளை வளர்த்தால் அவர்கள் எப்படி அவற்றைச் சகிப்பார்கள்? அந்த ஊரில் ஒரு மிருகக் காட்சி சாலையை ஏற்படுத்தவும் நகரசபை அநுமதிக்கவில்லை.

ஜே. ஜே. ஆலன் என்பவர் தாம் நடத்தி வந்த பெரிய கடையில் ஒரு பகுதியை எனக்கு ஒழித்துவிட முன் வந்தார். அங்கே தாற்காலிகமாக என் மிருகங்கள் குடிபுகுந்தன.

திடீரென்று ஒரு நாள் போலீஸாரிடமிருந்து என் வீட்டுக்கு டெலிபோன் வந்தது. ''உங்கள் குரங்குகளில் ஒன்று தப்பித்துக் கொண்டது; உடனே வாருங்கள்'' என்று அவர்கள் அலறினர்கள்.

டாக்ஸியில் விரைந்து போய்ப் பார்த்தேன். ஆலன் எம்போரியத்தின் வாசலில் கண்ணாடி ஜன்னல்கள் உண்டு. அதற்குப் பின்னல் அந்தக் கடையில் கிடைக்கக் கூடிய பொருள்களை விளம்பரத்துக்காக அலங்காரமாய் வைத்திருப்பார்கள். இந்தக் காட்சிப் பொருள்களில் ஸாட்டின் மெத்தை பரப்பப்பட்ட கட்டிலும் ஒன்று. அதன் மீது என் குரங்கு ஏறி மேலும் கீழுமாய் எம்பி எம்பிக் குதித்துக் கொண்டிருந்தது. தெருவில் இந்த வேடிக்கையைக் காண ஏகக் கூட்டம்!

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு மிருகக் காட்சி சாலைக்குத் தகுந்த இடம் தேடுவதில் நான் முன்னிலும் தீவிரமாய் ஈடுபட்டேன்.

ஒருநாள் நான் என் நண்பர் ஹாரிட்-டேவிஸுடன் பேசிக் கொண்டிருந்த போது ச்சேனல் தீவுகளில் (பிரிட்டிஷ் தீவுகளுக்குத் தெற்கே) தமக்குத் தெரிந்த ஒருவர் இருப்பதாகவும் அவர் எனக்கு உதவ முடியும் என்று தாம் நம்புவதாயும் தெரிவித்தார். அந்த நண்பர் பெயர் மேஜர் ப்ரேஸர்.

அவரைச் சந்திக்க நானும் என் மனைவி ஜாக்கியும் விமானத்தில் புறப்பட்டோம்.

ஜெர்ஸி நகர் விமான நிலையத்தில் இறங்கிய பிறகு ஒரு மணி நேரத்துக்குள்ளாக எங்கள் மிருகக் காட்சிச் சாலைக்கு ஏற்ற நல்ல இடம் எங்களுக்குக் கிடைத்து விட்டது!

நீங்கள் இந்தப் பக்கம் வந்தால் அவசியம் விஜயம் செய்யுங்கள்.


புதியது
ப்ரோடெக்ஸ் ஒரு சர்வ-காரிய டால்க்.
அது குடும்பத்தினர் அனைவருக்கும்
மிகச்சிறந்தது.
"ப்ரோடெக்ஸ் எனக்கு விருப்பமானது. ஏனெனில் அது எந்தக் குடும்பத்திற்கும் ஏற்றபடி சிக்கனமானது"
"நாள் முழுதும் புதுமையுடனிருக்க நான் ப்ரோடெக்ஸையே விரும்புகிறேன்"
"எனது மிருதுவான சருமத்தைப் பாதுகாப்பதால் அம்மா ப்ரோடெக்ஸையே விரும்புகிறாள்"
PROTEX
ப்ரோடெக்ஸ் ஒரு உயர்ந்த ரக, மனோரம்மிய நறுமணமுடைய, சர்வ-காரிய டால்க். எல்லாக் குடும்பத்தினருக்கும், குளித்தபிறகும், கோடைக்காலத்தில் குளிர்ச்சிக்கும் மிகச் சிறந்தது. ப்ரோடெக்ஸ் வாங்குங்கள்–மிக மிகப்பெரிய டப்பா-மிகமிகக் குறைந்த விலை.
ப்ரோடெக்ஸ்
ஆல்-பர்ப்பஸ் டால்கம் பௌடர்
PTP-8-7-TAM.



முதல் உலகப் போரில் சார்ஜெண்ட் யார்க் தனித்து நின்று இருபது ஜெர்மன் வீரர்களைக் கொன்று ஒரு மெஷின் கன் பட்டாளத்தைச் சேர்ந்த நூற்றி முப்பத்திரண்டு பேர்களையும் கைப்பற்றியது போரில் தனி நபரின் சாமர்த்தியத்துக்கும் அபார சாதனைக்கும் எடுத்துக்காட்டு. அந்தப் பணிந்த பட்டாளத்தின் மேஜரைத் தம் முன்னால் துப்பாக்கி முன் இட்டுச் சென்று, ''இந்தப் பட்டாளத்தில் யாராவது எந்த விதமான வஞ்சகச் செயலையும் செய்தால் உங்கள் அதிகாரியின் உயிர் பறிபோய் விடும்!'' என்று எச்சரித்து அந்தப் பிடிக்கப்பட்ட பட்டாளத்தை நடத்திச் சென்றார். தம் பட்டாலியன் தலைமைக் காரியாலயத்தில் அந்த நூற்று முப்பத்திரண்டு ராணுவக் கைதிகளையும் அழைத்துச் சென்றபோது அங்குள்ள மேஜர், ''இங்கே இத்தனை கைதிகளையும் பாதுகாக்க எங்களிடம் பாதுகாப்பு வீரர்கள் (Guards) கிடையாது!'' என்று கூறிவிட்டார். பிறகு அத்தனை பேரையும் ரிஜிமெண்ட் தலைமைக் காரியாலயத்தில் கொண்டு சேர்த்து அங்கிருந்த கர்னலிடம், ''இதோ என்னிடம் சரணடைந்த ஒரு பட்டாளம் இருக்கிறது. நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள். நான் நடந்து நடந்து களைத்து விட்டேன்!'' என்றார்.

யார்க் களைப்படைந்து விட்டாலும் ஓய்வு பெற வில்லை. பொழுது விடிய இன்னும் வெகு நேரம் இருந்தது. அவரது படை தூரத்திலுள்ள காட்டில் இன்னும் போரிட்டுக் கொண்டிருந்தது. ஆகவே ராணுவ அதிகாரியிடம் சென்று, ''நான் மறுபடியும் எனது பணிக்குச் செல்லத் தயார்!'', என்று கூறினாராம் யார்க். இவரல்லவா உண்மையான வீரர்!

முதல் உலகப் போரில் தீரம் மிக்க செயல் புரிந்த அமெரிக்க சார்ஜெண்ட் யார்க்குக்கு இத்தாலியப் போர்ப் பதக்கம், காங்கிரஷனல் பதக்கம் முதலியவை கிடைத்தன. இவரது ராணுவ வாழ்க்கையை ஹாலிவுட்டில் படமாகக்கூட ஆக்கியிருக்கிறார்கள். உண்மையான வீரத்துக்கும் தீரத்துக்கும் நிச்சயம் பெருமை கிட்டும் என்பது புரிகிறதல்லவா?

இதேபோல் மலையாளத்தில் பாலக்காட்டிலிருந்து உலகப் போரில் கலந்து கொண்டு போரிட்ட ஈ.கே. எஸ். நாயர் தீரச் செயலுக்காகப் பன்னிரண்டு பதக்கங்களுக்கு மேல் பெற்றிருக்கிறார். இவரது அருமைப் புதல்வன் தான் ராதாகிருஷ்ணன். இளவயதிலிருந்தே தம் தந்தையைப் போலவே ராணுவத்தில் சேர்ந்து புகழ் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார் ராதாகிருஷ்ணன். தம் தந்தையின் ராணுவ உடைகளைப் போட்டு அவர் வீர நடை நடப்பாராம். என்றும் எப்பொழுதும் அவர் சிந்தனை ராணுவத்தைப் பற்றியே யிருந்தது. கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே தம் தந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ராணுவ எலெக்டிரிகல் மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் பிரிவிலே 1960 வருஷம் நவம்பர் மாதத்தில் கிராட்ப்ஸ்மேனாகப் புகுந்தார் ராதாகிருஷ்ணன். இவரது திறமையைக் கண்டதும், 1962 ம் வருஷம் டேராடூன் ராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிலத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டேராடூனில் இவர் பத்து மாதங்கள் தீவிரப் பயிற்சி பெற்றார். பிறகு சென்னையில் உள்ள அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் ஏழு மாதங்கள் தம் பயிற்சியைத் தொடர்ந்தார்.

நம் எல்லைப்புறத்தில் எதிரிகள் தலை காட்டவே இந்திய ராணுவ விஸ்தரிப்புக்கு அவசியமேற்பட்டது. அதற்காகச் சென்னையில் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி 1963ம் வருஷம் மத்திய சர்க்கார் மந்திரி திரு சி. சுப்பிரமணியம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தக் கல்லூரியில் தேர்ந்த பயிற்சியாளர்கள் தினம் மே மாதம் ஒன்பதாம் தேதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பயிற்சி முடிந்த அறுநூறு இளைஞர்களும் அன்று பாண்டுவாத்திய இசைக்கேற்ப வீர நடை போட்டு, பிரிகேடியர் ராம்சிங்குக்கு வணக்கம் செலுத்திச் சென்றது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. தாய்நாட்டின் சேவைக்காகத் தம் அருமைப் புதல்வர்களின் வீர நடையைக் கண்டு அன்று குழுமியிருந்த

இளைய பாரதத்தினர்



அவர்கள் பெற்றோர், உற்றோர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

இந்தக் கல்லூரியில் சேர்ந்த அறுநூறு இளைஞர்களில் தென்னிந்தியாவின் பெருமை துலங்க எல்லாப் பயிற்சிகளிலும் சிரமாகத் திகழ்ந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார் ராதா கிருஷ்ணன். இவரைப் பற்றி மற்றொரு பயிற்சியாளர், 'இவர் தென்னிந்திய ஹீரோ!' என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

இனி 'பட்டாலியன் அண்டர் ஆபீஸராக'ப் போகும் திரு ராதாகிருஷ்ணனுக்கு நீச்சலில் அதிகப் பிரியம். இன்னும் இவருக்குக் கலியாணமாக வில்லை.


போர் வெறி பிடித்த சீனு தன் இளைஞர்களுக்கு என்ன பாடம் கற்பிக்கிறது, தெரியுமா? "வாழ்நாள் முழுதும் போராடிக் கொண்டே இரு. போராட்டத்திலேயே இளைஞர்கள் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். கடுமையான போராட்டமே புரட்சி இலட்சியங்களை உணர்த்தும்" என்று உபதேசம் செய்கிறது.


இந்தப் போராட்டம் போர் முனையில் மட்டும் நிகழ்வதல்ல. ஒவ்வொரு துறையிலுமே இளைஞர்கள் போராடி, உழைத்து உயர வேண்டும். அப்போதுதான் யுத்த முனையில் இருப்போரும் வெற்றி காண்பது இயலும். நம் இமயத்தின் எல்லையிலே சீனர்கள் பெரும் படைகளைக் குவித்துநிற்கும் வேளையில்,

"இன்னல் வந்துற்றிடும் போததற்கஞ்சோம்!"

என்று நமமுடைய இந்திய மண்ணைக் காக்கும் பணியில் ராதாகிருஷ்ணனைப் போன்ற திறம் மிக்க இளைஞர்கள் முன்னணியில் நிற்பார்கள்.

— **குண்டுமணி**





மாயூரம் ஸ்ரீ வி. சுவாமி அய்யங்கார் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி **எஸ். வி. ராகவன்** அவர்கட்கும், சென்னை **ஸ்ரீ வி. வி. எஸ்.** தேசிகன் அவர்கள் குமாரி சௌபாக்கியவதி **லீலாவுக்கும்** சென்னையில் சமீபத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. **வாழ்க, மணமக்கள்!**

கயல் விழி

பன்னிரண்டாம் அத்தியாயம்

புலியும் பூனையும்

கங்காபுரித் தலைநகரத்தின் வானளாவிய கோயில் கோபுரம் அதை முதன் முதலில் உருவாக்கிய மாவீரர் கங்கை கொண்ட சோழப் பெருமகனின் மனத் திண்மை போலவும் சிந்தனைச் சிகரம் போலவும் கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. அவருக்குப் பின்பு பல தலைமுறைகள் அதைக் கோநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தி விட்டன. இப்போது மூன்றும் குலோத்துங்கரின் ஆட்சியிலும் அந்த நகரம் சீரும் சிறப்பும் பெற்றுத்தான் விளங்கியது.

வடக்கே கன்னடமும் களிதெலுங்கும் பேசப்பட்ட நாடுகள் முதல், தெற்கே பாண்டிய மண்டலத்தின் குமரிக் கடல் வரையிலும் தனது மேலாட்சியை நிலைநாட்டியிருந்த சோழ சாம்ராஜ்யத்தின் தலைநகரமல்லவா கங்காபுரி! அதன் 'அழகையும் வளத்தையும் வெளிப் படுத்துவதே போல் நகரமெங்கும் மாட மாளிகைகள், கூட கோபுரங்கள், அங்காடிகள், ஆடரங்குகள், படை வீடுகள் நிறைந்திருந்தன.

அதிலிருந்து அப்போது ஆட்சி செலுத்திய மூன்றும் குலோத்துங்கர் தமது முன்னோர்களை யெல்லாம் விட ஒரு வகையில் பெரும் பேறு பெற்றவர். கவிச் சக்கரவர்த்தி கம்பரைத் தமது அன்பால் கவர்ந்து இராமனின் கதையைத் தீந்தமிழ்க் கவிதையால் பாட வைத்தவர் அவர்.

கம்பர் தமது இராமாயணத்தில் அயோத்திமா நகர்ப் படலத்தைப் பாடியபோது, அவர்தம் கண்ணெதிரே பரந்து விரிந்து கிடந்தது கங்கை கொண்ட சோழ புரம்தான். அவருடைய கற்பனையின் அயோத்தியான




அகிலன்

கங்காபுரியின் மண்டபங்கள் சில வற்றை மட்டிலும் நாம் கம்பரின் கவிச் சித்திரத்தின் வாயிலாகவே கண்டுவிட்டு, அடுத்தாற்போல் அரண்மனைக்குச் சென்று சக்கரவர்த்தியைக் காணுவோம்.

"மன்னவர் தருதிறை அளக்கும் மண்டபம்!
அன்னமென் நடையவர் ஆடும் மண்டபம்!
உன்னரும் அருமறை ஓதும் மண்டபம்!
பன்னரும் கலைதேர் பட்டி மண்டபம்!"

சிற்றரசர்கள் யானைகள் மீதும் பொதி மாடுகள் மீதும் அனுப்பிக் கொண்டிருக்கும் திறைப் பொருட்களை அளவிட்டுக் கணக்கெடுப்பதற்காக உள்ள திறை மண்டபம் ஒருபுறம் கட்டுக் காவல்களோடு காட்சி தருகிறது. 'கலையினொடும் கலைவாணர் கவியினொடும் இசையினொடும்' கலை மாதர் கலாப மயில்களெனச் சிலம்பொலித்து ஆடிக் களிக்கும் ஆடரங்கு ஒருபுறம் மக்கள் கூட்டத்தால் பொங்கி வழிகிறது. பல்வகைச் சாத்திரங்களையும் இலக்கியங்களையும் பயின்றுணரும் அறவோர் கூடும் நீதி நெறி மண்டபம் ஒரு புறம் நிமிர்ந்து நிற்கிறது. பல்வகைக் கலைகளையும் கற்றுத் தேர்ந்த புலவர்கள் வாதப்போர் புரியும் பட்டிமண்டபம் ஒரு புறம் கற்றறிந்தோரால் காமுறப் பட்டு விளங்குகிறது. இந்த மண்டபங்களின் வாயிலாகவே நாம் அந்த ஆட்சியின் சிறப்பை ஒருவாறு உணர்ந்து பெருமையுறுகிறோம்.

அடுத்தாற்போல் பல மதில்களைத் தாண்டி, அரண்மனை மாளிகையின் புறவாயிலையும் கடந்து உள்ளே சென்றால், அதென்ன காட்சி அங்கே!

ஆமாம், இன்று வெள்ளிக்கிழமையல்லவா? சக்கரவர்த்தி இளவரசர் இராஜ இராஜனுடன் தமது படைகளின் அணிவகுப்பை நேரில் பார்வையிடச் செல்கிறார். அதற்கான முன்னேற்பாடுகள் சித்தமாகி விட்டன.

வாயிற் கதவோரம் முரசுகள் தாங்கிய யானையின் மீது முரசறைவோர் நின்று கொண்டிருக்கிறார்கள். இருபுறமும் வரிசை வரிசையாகக் கூர் வேலில் கொடி தாங்கிய குதிரை வீரர்கள் சக்கரவர்த்திகளைச் சூழ்ந்து செல்ல ஆயத்தமாகி விட்டனர். பட்டத்துப் பெரும் களிறொன்றும் சிறு களிறொன்றும் அம்பாரிகளுடன் அசைந்தாடி நிற்கின்றன.

சக்கரவர்த்தியைத் தூரத்தில் கண்டு விட்ட பெரும் களிறு திடீரென்று ஆனந்தத்தோடு தனது துதிக்கையை மேலே தூக்கிய வண்ணம் பிளிறத் தொடங்கி விட்டது. மலைபோன்ற தனது உடலைக் கூனிக் குறுகிக் கொண்டு நாய்க் குட்டி போல் அவர் முன்பு குழைந்து மண்டியிட்டது.

காலடியில் தரை அதிர, கைவீச்சால் காற்றசைய, கண் விழிப்பால் கனல் உமிழ, அவரது பாதங்களுக்காக விரிக்கப்பெற்ற பட்டுப் பரிவட்டத்தின் மீது வேகமாக நடந்து வந்தார் குலோத்துங்க சோழர். அவர் மீது 'குலோத்துங்கன் கோவை' பாடிய புலவர் அவரிடம் இல்லாத சிறப்பைச் சொல்லவில்லை. 'கரு வீர மேகம்' என்றும், 'உருவாலும் உறுப்பாலும் மதனன்' என்றும், 'காட்டாண்மை வீமன்' என்றும் அவரைக் குறிப்பிட்டது முற்றிலும் பொருத்தமே. அவருடைய வயதின் முதிர்ச்சி உடற்கட்டின் இளமைக்குள் பதுங்கி விட்டது.

நேரே சென்று யானையின் மதம் பொழியும் மத்தகத்தை வருடிக் கொடுத்து விட்டு, பாயும் வேங்கையென அதன்மேல் தாவி ஏறினார் சக்கரவர்த்தி. அம்பாரிக்கு அருகில் சென்றவுடன் அடுத்த களிற்றைத் திரும்பிப் பார்த்தார். இளவரசன் இராஜ இராஜன் நிதானமாக யானைப் பாகனின் உதவியோடு அதன் மேல் ஏறிக் கொண்டிருந்தான். சக்கரவர்த்தியின் நெற்றி சுருங்கியது. அதில் கவலைக் குறி தோன்றி மறைந்தது.

அம்பாரியில் அமரப்போன சமயத்தில் அரண்மனைக்கு வந்து கொண்டிருந்த பாண்டிய நாட்டு அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபரைப் பார்த்து விட்டார் குலோத்துங்கர்.

"சயங்கொண்ட வல்லபரே! மதுரையிலிருந்து இப்போதுதான் வருகிறீர் போலும். செய்தியைக் கேட்பதற்காக இங்கு காலம் தாழ்த்திக்கொண்டிருக்க முடியாது. நீரும் நம்முடன் இந்த யானையின் மீதே வரலாம்."

'சக்கரவர்த்திகளோடு அவரும் யானை மீது சரியாசனத்தில் அமர்ந்து பேசுவதா?' நடுங்கியது சயங்கொண்ட வல்லபரின் உடல். நெருப்பும் குலோத்துங்கரும் ஒன்று என்பது அவர் பழக்கத்தால் அறிந்த விஷயம். நெருங்கினாலும் சுட்டுப் பொசுக்கும்; தொலைவில் விலகினாலும் அதன் வெப்பம் தகிக்கும்.

"ஏன் காலம் கடத்துகிறீர்?" என்று உறுமினார் சக்கரவர்த்தி.

வாய் பேசாது யானை மீதேறி அம்பாரிக்குச் சென்று, அவர் பாதங்களை ஒட்டி அதன் கீழே அமர்ந்தார் சயங்கொண்ட வல்லபர்.

யானை மீது கட்டிய வார் முரசுகள் அதிர்ந்தன. யானைகளின் கழுத்

துக்களை அலங்கரித்த வெண்கல மணிகள் கிண்கிணி நாதம் எழுப்பின. காலைக் கதிரொளியில் யானைத் தந்தங்களை அலங் கரித்த தங்கப் பூண்களும் அவற்றின் நெற்றிப் பட்டங்கள்—முதுகுப் போர்வை களும் கண்களைப் பறித்தன. குதிரை களின் குளம்பொலியும் கூடவே எழுந் தது. புறப்பட்டுவிட்டார் சக்கரவர்த்தி.

குலோத்துங்கரைக் கண்டு களிப்பதற் காக வெள்ளிக்கிழமையின் வரவை எதிர் பார்த்திருக்கும் நகர மாந்தர் சாலைகள் தோறும் குழுமியிருந்தனர். மேல் மாடங்களில் கூடியிருந்த பெண்களின் மென் கரங்கள் மலர் தூவத் துடித்துக் கொண்டிருந்தன. ஆண்கள் வாழ்த் தொலி எழுப்பக் காத்திருந்தனர்.

மலர்மாரி பொழிந்த வண்ணமாக வும், வாழ்த்தொலி எழுந்த வண்ண மாகவும் இருந்தன. சக்கரவர்த்தி தம் வலக்கரத்தை உயர்த்தி ஆசி கூறிய படியே சென்றார். சயங்கொண்ட வல்லபரிடம் இன்னும் அவர் செய்தியை விசாரித்தறிய வில்லை. அவருடைய கவனமெல்லாம் மக்களின் மகிழ்ச்சிப் பெருக்கை அளவெடுப்பதில் இருந்தது.

சட்டென்று ஓரிடத்தில் பின்புறம் வந்த இளவரசனின் யானையைத் திரும் பிப் பார்த்தார் சக்கரவர்த்தி. அவர் நினைத்த படியேதான் அங்கும் நடந் தது. இராஜ இராஜன் அழகிய மகளிர் கூட்டமொன்றைப் பின்புறம் திரும்பி நோக்கிக் கொண்டிருந்தான். சக்கர வர்த்தியின் முகம் இப்போது இரண் டாவது முறையாகக் கவலையால் கருங் கியது. 'தன்னை அடக்கி ஆளத் தெரி யாதவன் எப்படி சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆளப் போகிறான்?' என்று தம் மையே கேட்டுக் கொண்டார் அவர்.

நகரத்தின் உள் மதிலைத் தாண்டி மரங்கள் சூழ்ந்த சாலை வழியே படை யிருப்புக்களை நோக்கி நடந்து கொண் டிருந்தது யானை. சயங்கொண்ட சோழ வல்லபரிடம் திரும்பி, 'செய் தியை இனிமேல் கூறலாம்' என்பது போல் உற்றுப் பார்த்தார்.

நடந்த விஷயங்களை முதலில் கூறி விட்டுப் பின்பு ஓலையைக் கொடுக்க லாமா, அல்லது ஓலையைக் கொடுத்து விட்டு நடந்தவற்றைக் கூறலாமா என்று அது வரையில் தவித்துக் கொண்டிருந் தார் வல்லபர். முடிவில், ஓலையை முத லில் கொடுப்பதே நலமென்று தோன்றி யது. அவ்வாறே குலசேகர பாண்டி யர் அனுப்பிய ஓலையை நடுங்கும் கரத் தால் சக்கரவர்த்தியிடம் நீட்டினார்.

ஓலையை வாங்கிப் படித்த குலோத் துங்கரின் முகம் அதைப் படித்த மாத் திரத்திலேயே பயங்கரமாக மாறியது. சயங்கொண்ட சோழ வல்லபரை அவர் உருட்டி விழித்தார். தாங்கிக் கொள்ள முடியாத அவமானம் நேர்ந்து விட்டது போல் ஆத்திரமடைந்த அவர் அந்த ஓலையைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து, அதை வாங்கிக் கொண்டு வந்த சயங்கொண்ட வல்லபரின் முகத் தில் ஓங்கி அடித்தார்.

''இதைக் கொண்டு வந்து எம்மிடமே நீர் நீட்டுவதற்குத்தான் உம்மை அங்கே அமைச்சராக அனுப்பி வைத்தேன் போலும்! வல்லபரே, பாண்டிய நாடு நமக்கு ஒரு துரும்புக்குச் சமம். ஆனால் எப்படி அந்தத் துரும்புக்கு நம்மை எதிர்த்து நிற்கத் துணிவு வந்தது என் பதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தன்னுரிமையாம், தன் னுரிமை! இந்த நெஞ்சு உரம் அவர் களுக்கு எப்படி வந்தது ?''

அமைச்சர் தடுமாறினார். 'நெருப்பு அருகில் இழுத்து வைத்துக் கொண்டு

போகக்கத் தொடங்கி விட்டது' என்ற எண்ணம் வந்து விட்டது அவருக்கு.

''சக்கரவர்த்திகளிடம் இதுவரையில் நன்னெறியோடுதான் இருந்து வந்தார் குலசேகர பாண்டியர். அவருடைய தந்தை விக்கிரம பாண்டியருக்காகத் தாங்கள் போர் தொடுத்து நாட்டை மீட்டுக் கொடுத்ததை அவர் மறக்க வில்லை. ஆனல்.... இளவரசன் சுந்தர பாண்டியனின் செருக்கும் அஞ்சாத நெஞ்சும் அவன்மேல் பாண்டியர் வைத்திருக்கும் பாசமும்தான் இப்படி ஓர் அவசர முடிவுக்கு அவரை வரச் செய்து விட்டன.''

''சுந்தர பாண்டியன்!'' என்று பட்டத்து யானையே பதறும் வண்ணம் கர்ஜித்தார் சக்கரவர்த்தி; ''அவனுடைய செருக்கு...... அஞ்சா நெஞ்சு....அவன் மேல் பாண்டியன் வைத்த பாசம்.....''

சக்கரவர்த்தியால் சுந்தர பாண்டியனைப் பற்றிய செய்தியையே தாங்கிக் கொள்ள முடிய வில்லை. பல போர்களை நடத்தி, பல வெற்றிகளைக் கண்டு, ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்துக்கே அதிபதியாகி யிருந்த அவர், ஏனே அந்த ஓர் இளைஞனின் மனத் திண்மையைப் பொறுக்க முடியாமல் துடித்தார்.

பல லட்சம் போர்வீரர்களை அவரால் அடக்கி ஆள முடிந்தது. பல்லாயிரக் கணக்கான அதிகாரிகளைக் கண்காணித்து ஆட்சித் திறமையால் மக்களைக் காப்பாற்ற முடிந்தது; யார் குற்றமிழைத்தாலும் தண்டனை விதித்து, யார் சிறப்பாக உழைத்தாலும் ஏற்றம் தந்து, ஒடுக்க வேண்டியவர்களை ஒடுக்கிப் போற்ற வேண்டியவர்களைப் போற்ற முடிந்தது. காரணம் அவர் முதன் முதலில் தம்மையே அடக்கி ஆளக் கற்றுக் கொண்டிருந்தார்.

ஆனல், அவருடைய குமாரனும் எதிர்காலத்தின் ஆட்சிச் சுமையை ஏற்கப் பிறந்தவனுகிய ஒருவனை மட்டிலும் அவர் பிள்ளைப் பிராயத்திலிருந்தே கண்காணித்து வளர்க்கத் தவறி விட்டார். இந்திலேயே வளைந்து ஒழுங்கும் கட்டுப்பாடுமாய் உருவாக்கத் தவறிவிட்டார். 'குலசேகர பாண்டியன் வேறு எதையுமே சாதிக்கா விட்டால்கூட வலிமை கொண்ட ஓர் இளைஞனை உருவாக்கி விட்டான் போலிருக்கிறதே!' என்று கசப்புடன் நினைத்தார்.

அவருடைய பார்வை உடனே இராஜ ராஜன் பக்கம் திரும்பியது. அவன் அப்போது கையில் ஏதோ ஒரு சிறிய திரைச் சீலையை வைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். 'எந்தப் பெண்ணின் ஓவியத்தை யாவது வைத்துக் கொண்டு ஏக்கப் பெருமூச்சு விடுவான்! தன்னையே அடக்கி ஆளத் தெரியாத இந்த ஆண்மையற்றவனிடம் அரசியல் பீடம் நிலைத்து நிற்குமா?'

விழிகளில் வெறுப்பையும் வேதனையையும் உமிழ்ந்தார் சக்கரவர்த்தி.

பதின்மூன்றும் அத்தியாயம்

விதி வழியே மதி சென்ருல்....

மதிவழியே விதியறிந்து நடப்பவர்களுக்கு அந்த விதியே பணிந்து கொடுத்துக் குற்றேவல் செய்து அவர்களுக்கு ஏற்றம் தருகிறது. அப்படி அடங்கிக் குற்றேவல் செய்யும் விதியே, மதிவழியே தன்னை மனிதர்கள் நடத்தாத போது அவர்களைக் குப்புறத் தள்ளி விட்டு, வேடிக்கையும் பார்க்கிறது. மதி வழியே செல்லும் விதி பாகனின் அங்குசத்துக்கு அடங்கிய பழக்கப்பட்ட யானை; தன் வழியே மதியை இழுக்கும் விதி கட்டுக்கடங்காது வெறி பிடித்தோடும் மதயானை.

குலோத்துங்க சோழரின் மன வலிமையான அங்குசத்தால் அறுபதாயிரம் யானைகள் அவருடைய படை வீடுகளில் அடங்கிக் கிடந்தன. பட்டத்து யானையின்மீது சென்று கொண்டிருந்த அந்த வீர வேங்கை தம்முடைய மைந்தனின் மீது ஏற்பட்ட வெஞ்சினத்தைப் பாச உணர்ச்சியெனும் பலவீனத்தால் அவன் மீது காட்ட முடியாமல், தம்மெதிரில் இருந்த சயங்கொண்ட சோழ வல்லபர் மீதே திருப்பினர். மதி புரண்டது; விதி இழுத்தது.

''வல்லபரே! அந்தச் சுந்தரபாண்டியன் அப்படி வளர்ந்து இப்படி மாறும் வரையில் நீர் அங்கே என்ன செய்து கொண்டிருந்தீர்? ஒரே நாளில் அவனை அழித்து ஒழித்திருக்கலாம்; அல்லது குலசேகரனுக்கு எதிராக அவனைத் திருப்பி விட்டு அவர்களது சக்தியைச் சிதற அடித்திருக்கலாம். இத்தனை காலம் அமைச்சராக இருந்த நீர் அங்கு என்ன செய்து கொண்டிருந்தீர்? பதவிக்குச் சென்றவுடன் எந்தச் சக்தியால் நாம் அப்படி உயர்ந்தோம் என்பதை மறந்து விட்டீரா ?''

மறுமொழி கூறாது தலை குனிந்தார் சயங்கொண்ட வல்லபர். முன்பே சுந்தர பாண்டியனின் தீவிரப் போக்கு பற்றித் தம்முடைய இரகசிய ஓலைகளில் கோடி காட்டியிருந்தார் அவர். ஆனால் அப்போது தம் வலிமையில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சக்கரவர்த்தி அதைப் பொருட்படுத்தவில்லை. 'சக்கரவர்த்திகளுக்குத் தம் எதிர்காலமான அடுத்த தலைமுறையிடம் நம்பிக்கை இல்லை; அதனால்தான் சிறிய பகையைப் பெரிதாக்கிப் பதறுகிறார்' என்று அச்சம் கொண்டார் வல்லபர்.

''ஒன்றும் ஒன்றும் சேர்ந்தால் இரண்டு என்னும் கணக்கு அறிவில்லாதவர்கள் கற்கும் அரிச்சுவடிக் கணக்கு ! ஒருவனுடைய சிந்தனையும் மற்றொருவனுடைய சிந்தனையும் ஒன்று சேர்ந்து விட்டால் அவர்கள் இருவரும் ஓராயிரம் பேர்களின் வலிமையைப் பெறுகிறார்கள். அரசியல் சூழ்ச்சி தெரியாமலா உம்மைப் போய்ப் பாண்டியனுக்கு அமைச்சராக்கினேன்? நீரோ அவர்களுடைய ஒற்றுமைக்கு வாழ்த்துக் கூறி மகிழ்ந்திருக்கிறீர்!''

''என்னுடைய தவறு மன்னிக்க முடியாத தவறு, சக்கரவர்த்திகளே !''

''தவறு அல்ல அது; குற்றம்; அரசியல் குற்றம்!''

மன்னித்து அருளும்படி மன்றாடிய வல்லபர், ''இப்போதும் காலந் தாழ்ந்து விடவில்லை; சுந்தர பாண்டியனை முளையிலேயே கிள்ளி விடலாம்'' என்றார்.

''கிள்ளி எறிவதா? கூடாது!'' என்றார் சக்கரவர்த்தி. ''கிள்ளி எறிந்தால் போதாது. சாணக்கியர் என்ற இராஜதந்திரியைப் பற்றிய கதை ஒன்று தெரியுமா உமக்கு? அவர் நடந்து செல்லும் போது முட்செடி ஒன்று அவர் காலில் தைத்து விட்டதாம். அவர் அதைக் கிள்ளி எறியவில்லை. அப்படியே ஆணி வேருடன் அதைப் பறித்து வாயிலிட்டு மென்று அதன் சக்கையைக் காறி உமிழ்ந்தாராம். கிள்ளி எறிந்தால் மறுபடியும் துளிர்த்து விடுமல்லவா ?''

பின்னர் சக்கரவர்த்தி வல்லபரிடம் ஏதும் பேசவில்லை. தம் அடுத்த திட்டங்களைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தார்.

பின்புறம் வந்த இளவரசன் இராஜராஜனும் ஒரு வகையில் மனக் கொதிப்போடுதான் வந்து கொண்டிருந்தான். மதுரைக்கு அவன் இரகசியமாக அனுப்பி வைத்த வீரர்கள் இருவரும் முதல் நாள் மாலையே அவனிடம் வந்து செய்தியைக் கூறி விட்டார்கள். கயல் விழிக்காக அவன் அனுப்பி வைத்த பரிசில்கள் யாவும் அப்படியே திரும்பி வந்து விட்டன. பாண்டிய நாட்டில் அவர்கள் கேள்வியுற்ற முரசுச் செய்தியையும் தெரிவித்தார்கள் அவர்கள்.

முரசுச் செய்தியால் பாண்டிய நாடு சோழ சாம்ராஜ்யத்தின் மேலாதிக்கத்தை உதறித் தள்ளியதுகூட இராஜ இராஜனுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை! ஆடல் நங்கை கயல் விழியால் எப்படி அந்த அழைப்பை அலட்சியப்படுத்த முடிந்தது? இளவரசாகிய தானே பரிசும் ஆளும் அனுப்பியதை அவளால் எப்படி மறுக்க முடிந்தது? ஒரு பேதைப் பெண், அதிலும் பாணர் குலப் பெண், பரிசுகள் பெறுவதும் பரிசு வழங்குவோரை மகிழ்விப்பதுமே முறையாகக் கொண்ட பெண் இப்படி அவமதித்து அனுப்புவதா?

என்றாலும் அவனுடைய வேட்கை வெட்கமறியவில்லை. தனது மேலங்கியினுள் மறைத்து வைத்திருந்த அவளது ஓவியச் சுருளை மெல்ல எடுத்து விரித்தான். அம்பாரிக்குள் அவன் தனித்திருந்ததால் அந்த ஓவியத்தை அவன் கண்ணிமைக்காமல் காண முடிந்தது. அரச குலத்துப் பெண்டிரைவிட, பரிவார மகளிரைவிட, அடிமை கொண்ட வேற்று நாட்டு வேள மகளிரைவிட, ஏன் அவன் கண்ணில் பட்ட எல்லாப் பெண்களிடமும் இல்லாத ஏதோ ஒரு தனித்தன்மை அவளிடம் இருந்தது.

காதளவோடிய நெடுங் கயல்கள், தூண்டில் முள் போன்று உதட்டில் துள்ளிய புன்னகை, இடது கன்னத்தில், கண்ணை ஒட்டியிருந்த கருநீல மச்சம், இளமை கொழிக்கும் கன்னங்கள், பருவ மலர்ச்சியின் மணங் கமழும் மார்பகம், சந்தனத்தால் கடைந்தெடுத்த சிற்பம் போன்ற உடற் கட்டு... விழிகளால் அந்த ஓவியத்தை விழுங்கத் தொடங்கினான் இளவரசன். அவனுடைய கண்ணோட்டம் கலைமான் தான் விரும்பும் பிணைமானை நோக்கும் கண்ணோட்டமாக இருக்கவில்லை. பிணைமானைத் தனது வெம்பசிக்கு இரையாக்கத் துடிக்கும் சிறு புலியின் வெறி நோக்காக இருந்தது அது.


படைவீரர்களது வரவேற்பாகிய முரசுகளின் முழக்கத்தையும் சங்கொலியையும் கேட்ட பின்னர்தான் இராஜராஜனுக்குத் தன்னுணர்வு வந்தது. தலை தூக்கிப் பார்த்தான். நாலா புறங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் பெருங் கடல் போல் பரவியிருந்த படை வெள்ளத்தினூடே அவனும் சக்கரவர்த்தியும் யானைகளாகிய தோணிகளில் மிதந்து செல்வதுபோல் தோன்றியது அவனுக்கு.

(தொடரும்)

முதுகுக்கு மெத்தை காட்டும் மல்யுத்தம்



நியூஸிலந்து 'ஹாக்கா' கோரஸ் நடனம்...



கிங்காங்குக்கு மெத்தை காட்டினர்

"மல்யுத்தம் பார்க்கப் போகிறேன்!"

"சினிமாக்கொட்டகையிலா? பஸ் ஸ்டாண்டிலா? ரயில்வே ஸ்டேஷனிலா?"

"அங்கேயெல்லாம் நாமல்ல மல்யுத்தம் பண்ணணும்! நான் நிஜமான மல்யுத்தம் எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் காணப் போகிறேன்...!"

"நிஜமான மல்யுத்தம்னு பொய் மல்யுத்தம்னு ஒண்ணு இருக்கோ?"

"'நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன், நீ அழுற மாதிரி அழு' என்கிற கதையிலே மல்யுத்தம் நடக்கிறதும் உண்டு. ஒரு புல்தடுக்கிப் பயில்வான் ஒரு குண்டோதரனை இலேசில் வென்றுவிடுவான், ஓர் அஸ்திரத்தைப் பிரயோகித்து!"

"அது என்ன அஸ்திரமோ? மல்யுத்தத்தில் ஓர் அஸ்திரமும் பிரயோகிக்கக் கூடாதே!"

"எந்த அஸ்திரத்தைப் பிரயோகித்தால் பிணமும் வாய் திறக்குமோ, அதைத்தான்! அப்புறம் என்ன? 'மேட்அப்' பைட்தான்!"

"சார்! நீங்க சீக்கிரம் புறப்படுங்க. இந்த அக்கப் போரெல்லாம் எதற்கு? பஸ்ஸுக்கு மல்லுக்கு நின்று போவதற்குள் மல்யுத்தப் போட்டி முடிந்துடப் போகிறது."

யாரோ இவர் யாரோ?



"ஹாக்கா!..." இப்படி ஒரு கூக்குரல்: கைதட்டல்; கோரஸ் நடனம்!

மல்யுத்தப் போட்டியில் நடனமா? ஆச்சரியமாயிருக்கிறதா? நியூஸிலந்து மல்யுத்த வீரர்கள் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னும் தங்கள் நாட்டு வழக்கப்படி எதிர்த்த கோஷ்டியினருடன் சேர்ந்து கொண்டு 'ஹாக்கா' நடனம் ஆடி விட்டுப் பிறகு ஆட்டத்தைத் தொடங்குகிறார்கள். 'ஹாக்கா'வுக்கும் 'காக்கா' பிடித்தலுக்கும் சம்பந்தம் இருக்குமோ, என்னவோ? யார் கண்டார்கள்?


இதற்குள் மைக் அலறியது; மணி ஒலித்தது. ஆட்ட அரங்கின் மெத்தையில் நியூஸிலந்து மல்யுத்த வீரரும், இந்திய மல்யுத்த வீரரும் வந்துவிட்டார்கள். இவர்கள் போட்டியை மேற்பார்வையிட 'ரிபரி' விசிலுடன் காட்சியளித்தார். முதல் போட்டி இந்திய மல்யுத்த வீரர் பதினேழு வயதான கங்காராம் காபேரிக்கும் நியூஸிலந்து மல்யுத்தக்காரர் ரான் ஆஸ்ட்ரேல்லாவுக்கும் ஆரம்பமாயிற்று.

வாழ்க்கையில் காலை, கையைப் பிடித்தால் உடனே காரியம் நடந்துவிடும் என்பார்கள். ஆனால் இங்கே மல்யுத்த வீரர் எதிரியின் காலைக் 'கபக்'கென்று பிடித்துவிட்டால் வந்தது ஆபத்து! எதிரியின் முதுகுக்கு அவர் மண்ணைக் காட்டி — இல்லை, இல்லை — மெத்தை காட்டி வெற்றி பெற்றுவிட்டார் என்று அர்த்தம். 'தலைகுப்புற வீழ்ந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற கதையாக இங்கே மல்யுத்த வீரர்கள் மெத்தைக்கு முதுகைக் காட்டாது போராடும் தன்மையை வெறும் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது! அப்படித் தோற்றுவிடும் போலிருந்தால் மெதுவாக மெத்தையை விட்டு விலகிச் சென்று தப்பித்துக் கொள்கிறார்கள். இதைக் கண்டு ரிபரி அவரைச் சும்மா விடுவாரா? உடனே

விசிலை ஊதி ஆட்டத்தை நிறுத்தி, அவர்களைக் கர்ம சிரத்தையாக மெத்தைக்கு நடுவே இழுத்து வந்து ஆட்டத்தை மறுபடியும் தொடங்கி வைக்கிறார்! இது சாஸ்திரிய முறைப்படி கர்நாடக சுத்தமாக நடைபெறும் மல்யுத்தப் போட்டியாயிற்றே! தர்மம் குன்றி அதர்மம் ஓங்கும்போது அங்கே ரிபரி விசிலை ஊதித் தர்மத்தை நிலைநாட்டுகிறார்!

யானையும் பூனையும் சண்டையிட்டால் நன்றாக இருக்குமா? அதனால் லைட் வெயிட், பெதர் வெயிட், வெல்டர் வெயிட், ப்ளை வெயிட், பாண்டம் வெயிட் என்ற பிரிவுப்படி மல்யுத்த வீரர்களைப் பிரித்து விடுவதால் கொத்தவரங்காய் பூசணிக்காயைச் சந்திக்க முடியாது!

மல்யுத்தப் போட்டி நடைபெறும் காலம் பத்து நிமிஷம். இந்தப் பத்து நிமிஷங்கள் மல்யுத்த வீரர்களுக்கு ஒரு யுகம் போதும்!



சாஸ்திரிய மல்யுத்தம் 'ப்ரீ ஸ்டைலு'க்குச் சமாதி கட்டியது......

அதற்குள் படாத பாடுபட்டு விடுகிறார்கள்; அல்லது படாதபாடு படுத்தி விடுகிறார்கள்.

நியூஸிலந்து கோஷ்டி மல்யுத்த வீரர் டேவிருரி வந்தவுடனேயே பதுங்கிப் பதுங்கிப் 'பாவலா' போட்டார். ஆனால் அந்தப் பாழும் இந்திய மல்யுத்த வீரர் முக்தியார் சிங் அவரைச் சும்மா விடவில்லை. 'தப்பாட்டம் ஆடுகிறாயா?' என்று அவரைப் பல தடவை உருட்டிப் போட்டுச் செம்மையாக அமுக்கி விட்டார். டேவிருரி முதுகுக்கு மெத்தை காட்டிய வேளையில் அவர் முதுகுக்கு ஸ்ட்ரெச்சர் தேவையாகி விட்டது! மெத்தையை விட்டுப் பிறகு ஸ்ட்ரெச்சரில் தான் டேவிருரி எடுத்துச் செல்லப்பட்டார். 'சரியாக ஆடியிருந்தால் உங்கள் முதுகுக்கு மெத்தை மட்டும் காட்டியிருப்பேன். இப்படித் தப்பாட்டம் ஆடி நீங்களே முதுகுக்கு ஸ்ட்ரெச்சர் தேடிக் கொண்டு விட்டீர்களே!' என்று முக்தியார் சிங் முணுமுணுத்தது காதில் விழுந்தது. 'இனிமேல் என்னிடம் மல்யுத்தத்துக்கு வருகிறவர்கள் கையோடு ஸ்ட்ரெச்சரையும் கொண்டு வாருங்கள்!' என்று தப்பாட்டம் ஆடியவர்களுக்கு அவர் இனி எச்சரிக்கை செய்தால் வியப்பில்லை. அவர் ஹரித் கேசரியாயிற்றே!

''இந்திய மல்யுத்த வீரர்கள் எப்படி வாட்ட சாட்டமா இருக்காங்க பார்த்தாயா! இவர்கள் எந்தக் கடையில் அரிசி வாங்குகிறார்களோ?'' என்று அருகிலிருந்த ஒல்லி மனிதர் அங்கலாய்த்தார்.

''சுவாமி! அவர்கள் பருப்புச் சோறில்லை; சப்பாத்தி மனுஷங்க!''

''அதுதான் சப்பாத்தி மாதிரி உடம்பை வளைக்கிறாங்க!'' என்றார்.

''ஸார் முதுகில் விளக்கெண்ணெய் தடவிக் கொண்டால் நழுவி நழுவி விழுந்துவிடலாம்.



பயூன் அல்ல, இந்திய கோஷ்டி 'கோச்'!




''ஒரு ஸ்ட்ரெச்சரைக் கையில் வைத்துக்கொண்டு என்னிடம் வாருங்கள்.''

பிறகு பிடிக்கு அகப்பட வேண்டாம்!'' என்று யோசனை கூறினார் ஒருவர்.

''ஸார்! அந்தப் பாச்சா பலிக்காது. மல்யுத்த வீரர்கள் அரங்குக்கு வந்ததும் முதலில் அவர்கள் தலையிலிருந்து கால்வரை தடவிப் பரீட்சை பார்த்துவிட்டுத்தான் ரிபரி ஆட்டத்தைத் தொடங்குகிறார்!''

இந்திய மல்யுத்த வீரர்களிலேயே மால்வாதான் கட்டை குட்டையானவர். அவர்மூர்த்தி சிறிது; கீர்த்தி பெரிது! நியூஸிலந்து கோஷ்டியில் ஜான் ஹாரிஸ் நெடிதுயர்ந்தவர்; ஆஜானுபாகு. ஹாரிஸைப் பற்றி அறிமுகப் படுத்திய அறிவிப்பாளர் 'சினிமாவுக்குப் போக வேண்டிய தோற்றம் படைத்தவர்'



' சினிமாவுக்குப் போங்கள். உங்களை இரும்ப மல்யுத்தத்திக்கு அனுப்புவார்கள். அப்ப உங்களைஒருகை பார்க்கிறேன்!''

என்று கூறினார். இதைக் கேட்டு இந்திய 'அர்ஜுனப் பரிசு' பெற்ற மால்வா 'நீர் சினிமாவுக்குப் போனவுடன் உம்மை மல்யுத்தத்துக்கே திருப்பி அனுப்பி விடுவார்கள். அப்பொழுது உம்மை ஒருகை பார்க்கிறேன்!'' என்று சவால் விடுவாரோ என்னவோ?

மல்யுத்த சங்கம் வெளியிட்டுள்ள புத்தகத்தில் சினிமா நடிகை சௌகார் ஜானகி கையில் கோப்பையுடன் காட்சியளிப்பதைப் பார்த்து. ''இவங்களும் மல்யுத்தப் போட்டியில் கலந்து கொள்ள வந்திருக்கிறாங்களோ? இவர்களுக்குக் கோப்பை கிடைத்திருக்கிறதே! எப்பொழுது இந்தப் போட்டி நடைபெற்றது? நான் பார்க்கத் தவறிவிட்டேனே!'' என்றார் ஆங்கிலம் தெரியாத தரை மகாஜனம் ஒருவர்.

''இல்லே, இல்லே. மல்யுத்த வீரர்களுக்குப் பரிசைக் கொடுத்துத் தம் பக்கம் புகழைத் தேடிக் கொண்டு விட்டார் அவர்!''

இதற்குள், ''ஸார்! இது என்ன ஸார் போட்டி! சாஸ்திரிய முறைப்படி மல்யுத்தம் பண்ணுறாங்களாம்! இது யாருக்கு வேணும்? ப்ரீஸ்டைல் மல்யுத்தம் பார்க்கணும்; கிங் காங் — தாரா சிங் சண்டை மாதிரி இருக்கணும். இதிலே அவ்வளவு சுவாரஸ்யம் இல்லையே! அடி, குத்து, உதை, ரத்தக் களறி ஒண்ணுகூட இல்லாத இது மல்யுத்தமா?'' என்று ஒரு ரசிகர் குறைப் பட்டுக் கொண்டார்!

''ஸார்! நீங்கள் என்ன, அரக்கரா? என்ன கொடூரச் சித்தம் உங்களுக்கு!'' என்றார் இளகிய மனம் படைத்தவர் ஒருவர்.

''சாமி! அவசரப்படாதேயும். உம்மைப் போன்ற ரசிகர்களுக்கென்று கடைசியில் அந்தப் போட்டியும் வைத்திருக்கிறார்கள்'' என்று சமாதானப்படுத்தினார் அருகிலிருந்தவர்.

இந்திய — நியூஸிலந்து அமெச்சூர் மல்யுத்தப் போட்டி முடிந்து, அந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். 'மாரத வீரர் மலிந்த நன்னாடு' பாரத தேசமல்லவா? பாரத நாட்டுக்கே இந்த டெஸ்ட் போட்டியில் நிறைந்த வெற்றிகள் கிடைத்துப் பெரிய வெள்ளிக் கோப்பையும் கிட்டிவிட்டது.

கடைசியில் இந்திய மல் யுத்தப் பயிற்சியாளர் சார்ஜெண்ட் கில்லுக்கும் தேசிய வெற்றி வீரர் மால்வாவுக்கும் 'ப்ரீஸ்டைல்' மல் யுத்தப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியை வைத்ததற்குக் காரணமே சாஸ்திரிய முறைப்படி நடக்கும் மல்யுத்தப் போட்டியின் பெருமையை விளக்கத்தானோ என்னவோ?

'கிங்காங்—தாரா சிங் சண்டையில் 'வெறும் நாடகமன்றோ நடக்குது' என்று உண்மையை வெட்ட வெளிச்சமாக்கி விட்டனர். இந்தப் போட்டியில் கலந்து கொண்ட மால்வாவும் கில்லும். 'நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன். நீ அழுற மாதிரி அழு!' - அப்படியே நாடகம் தத்ரூபமாயிருந்தது. ரிபரியையும் சேர்த்து அமுக்கிக் கொண்டு அவர்கள் போட்ட மல்யுத்தம் அனைவரையும் நகைக்க வைத்தது. சாஸ்திரிய மல்யுத்த கோஷ்டியினர் என்ன செய்தார்களோ, ஏது செய்தார்களோ தெரியாது! அமெரிக்க ப்ரீஸ்டைல் மற்போருக்குச் சமாதி கட்டும் பாணியில் இந்த மல்யுத்தப் போட்டி நடைபெற்றது. கிங்காங் — தாரா சிங் முதலியோரை அரங்கில் ஏற்றாமலே அவர்கள் முதுகுக்கு மெத்தைகாட்டிவிட்டனர் இந்த அமெச்சூர் மல்யுத்தக் கோஷ்டியினர்.

''சாஸ்திரிய மல்யுத்தப் போட்டிக்கும், ப்ரீஸ்டைல் மல்யுத்தப் போட்டிக்கும் என்ன வித்தியாசம்?'' என்று கேட்டார் மல்யுத்தப் பிரியர் ஒருவர்.

''உண்மையான கர்நாடக சங்கீதத்துக்கும் போலி டப்பா சங்கீதத்துக்குமுள்ள வித்தியாசம்தான்'' என்று அடித்துச் சொன்னார் ஒரு கிரிடிக். அதில் தவறொன்றுமில்லையல்லவா?

மல்யுத்தம் பாரத நாட்டில் 'பாரதம்' தோன்றிய காலத்துக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. பீமனும், துரியோதனனும், கடோத்கசனும் ஜராசந்தனும் மாபெரும் மல்யுத்த வீரர்கள் என்று நம் இதிகாசங்கள் கூறுகின்றன. அந்தப் பாரம்பரியத்தைப் போற்றிக் காப்போமாக!

— பி. எஸ். மணி

'க்யூ'வுக்கு முன்னால்....?



பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் I

ஊர்	தேதி	நேரம்	தங்கும் இடம்
தாராபுரம்	1	காலை 8-30— 9-30	முருகன் மெடிகல் ஸ்டோர்ஸ், சர்ச்ரோடு
பழனி	1	காலை 10-30—11-30	ஜெயா பார்மஸி
உடுமலைப்பேட்டை	1	மாலை 3-00— 4-00	ராஜேந்திரா அண்டு கோ., கடை வீதி
பொள்ளாச்சி	1	மாலை 5-00— 6-00	தி எம்பயர் பார்மஸி
பாலக்காடு	2	காலை 9—11	K. H. பரசுராம், கல்தான்பேட்டை.
,,	2	மாலை 3—5	
கோயமுத்தூர்	3	காலை 9—11	காசிநாத் அண்டு கோ.,
,,	3	மாலை 2—4	(முனிசிபல் ஆபீஸ் எதிர்புறம்)
மேட்டுப்பாளையம்	3	மாலை 5-00— 6-00	தி மேட்டுப்பாளையம் மெடிகல் ஸ்டோர்ஸ்
சத்தியமங்கலம்	4	காலை 8-00— 9-00	ஸ்டார் பிரஸ், கடை வீதி
கோபி	4	காலை 10-00—11-00	வாஸன் அண்டு கோ., கச்சேரி வீதி.
பவானி	4	மாலை 2-00— 3-00	M. L. செட்டியார் & சன்ஸ், கடை வீதி
மேட்டூர் அணை	4	மாலை 4-30— 5-30	Govt. ஸர்வெண்ட்ஸ் கோ. ஆபரேடிக் ஸ்டோர்ஸ்
ஈரோடு	5	காலை 9-00—11-00	ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ்
திருப்பூர்	5	மாலை 4-00— 5-30	P. R. மணியம் ஸ்டோர்ஸ், பல்லடம்ரோடு
திருச்சி	6	காலை 11-00 to மாலை 6-00	திருச்சி ஆயுர்வேதிக் யூனியன், சின்னக் கடைத் தெரு
தஞ்சாவூர்	7	காலை 7-00— 9-00	Dr. S. வெங்கடராஜன் வைத்யசாலை, சகா நாயக்கன் தெரு
கும்பகோணம்	7 17,27	காலை 10-00 to மாலை 5-00	ஸ்ரீ சக்திவிலாஸ வைத்யசாலை, பிராஞ்சு, 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு
சீர்காழி	8	காலை 7-00— 8-00	பிரம்ம வித்யா ஆயுர்வேத வைத்யசாலை, ரயில்வே ஸ்டேஷன் ரோடு
மாயூரம்	8	காலை 9-00—11-00	ஸ்ரீ வெங்கடேசா மெடிகல் ஹால், பட்டமங்கலம் தெரு.
நன்னிலம்	8	மாலை 2-00— 3-00	தன்வந்தரி மெடிகல் ஹால், மேற்கு அக்ரஹாரம்
நாகப்பட்டணம்	8	மாலை 5-00— 6-30	நாகை மெடிகல் ஸ்டோர்ஸ், கடைவீதி
திருவாரூர்	9	காலை 7-30— 9-30	தன்வந்தரி மெடிகல் ஹால், கமலாலயம் மேல் கரை
விஜயபுரம்	9	காலை 10-00—11-00	சகுந்தலா பார்மஸி, நாகை ரோடு
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2-00— 3-30	ஸ்ரீ T. V. சந்திரசேகரம் பிள்ளை, கடைவீதி
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30— 6-30	கோபால விலாஸ், பெரிய தெரு
புதுக்கோட்டை	10	காலை 8-00—10-00	லக்ஷ்மி டிஸ்பென்ஸரி, கீழ ராஜ வீதி
பொன்னமராவதி	10	காலை 11-30—12-30	SP. S. சுப்ரமணிய செட்டியார், மருந்துக்கடை, புதுப்பட்டி
தேவகோட்டை	10	மாலை 2-30— 3-30	ஸ்ரீ சோமசுந்தரம் மெடிகல் ஸ்டோர்ஸ், ஆர்ச்சு ரோடு
காரைக்குடி	10	மாலை 4-30— 6-00	ஸ்ரீ ரமண ஆயுர்வேத வைத்யசாலை மகர் நோம்பு அக்ரஹாரம்
பரமக்குடி	11	காலை 8-00—10-00	ராஜன் மெடிகல் ஹால்,
ராமனாதபுரம்	11	மாலை 3-30— 4-30	ராஜன் மெடிகல் ஹால்
சிவகெங்கை	11	காலை 8-30—10-00	சௌரி அண்டு கோ., கடை வீதி
மதுரை	11	காலை 11— 12-30	T. N. சொக்கலிங்கம் பிள்ளை சன்ஸ்
,,	11	மாலை 3— 6-00	வடக்கு சித்திரை வீதி

இதன் தொடர்ச்சியை 14-6-64 கல்கியில் பார்க்கவும்.

குறிப்பு : ஆயுர்வேத முறைப்படி எல்லா வியாதிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலை, கரூர், (போன் 87) திருச்சி ஜில்லா

நீரோட்டம்

பதினாறாம் அத்தியாயம்

மறுநாள் அத்தை எழுந்திருக்கவே இல்லை. படுக்கையோடு கிடந்தாள். கீதாவோ ஒன்றுமே நடக்காதவள் போல் காப்பியைத் தயாரித்து அத்தையைக் கட்டாயப்படுத்திக் குடிக்க வைத்தாள். மூர்த்தியிடம் அவள் காப்பியைக் கொடுத்த போது, ''வேண்டாம் கீதா, எனக்குப் பிடிக்கவில்லை'' என்று கூறிவிட்டான்.

''மூர்த்தி! காப்பியைக் குடித்தால் சற்றுத் தெம்பாக இருக்கும். நடந்ததை நினைத்து வருந்துவதில் பயனில்லை. இனி எப்படி இருக்க வேண்டுமென்பதை யோசிக்க வேண்டும்.''

மூர்த்தி காப்பியைக் குடிக்கும் போது கீதா பெட்டியிலிருந்த பணத்தை எடுத்து வந்தாள். அதை அவன் அருகில் வைத்து, ''இந்தாருங்கள். இந்தப் பணத்தின் மூலம் கடனை அடைத்து விடுங்கள்'' என்றாள். மூர்த்தி ஆச்சரியத்துடன் அவளை நோக்கினான்.

''கீதா! பணத்தைக் கொடுக்காதே'' என்று அத்தை கூக்குரலிட்டாள். கீதா அத்தையின் கூக்குரலைப் பொருட்படுத்தவில்லை. சிறிது நேர மனப் போராட்டத்துக்குப் பிறகு மூர்த்தி பணத்தை எடுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

கீதா அத்தைக்கு விளக்கம் கூறிக் கொண்டிருந்தாள். ''அத்தை! மூர்த்தியின் போக்கை என்னிடமே மறைக்கப் பார்த்தாயே! அதிசயம் தான்..... மாமாவும் நீயும் அவர் மனத்தை மாற்ற முடியாமல் திணறியிருக்கிறீர்கள் என்பது இப்போது தான் புரிகிறது. நீ தாய். உன் மகனைப் பற்றி மற்றவர்களிடம் கூறுவதை விரும்பவில்லை. அத்தை! பயப்படாதே! உன் இரகசியத்தை வெளியிடாமல் காப்பாற்ற நான் முயற்சி செய்வேன்...ஆனால் இனி அதற்கு அவசியம் இருக்காது என்று நினைக்கிறேன். தீய வழியில் இறங்கி இருப்பதால் மூர்த்திக்குக் கடன் பளு அதிகமாகி விட்டிருக்கிறது. அதன் காரணமாகவே பெட்டியைத் திறக்கும் நீச வேலையில் அவர் இறங்கியிருக்கிறார். ஆனால் இரவு நான் கூறிய வார்த்தைகளைக் கேட்டுவிட்டு அவர் படுத்த போது அவர் உடல் நடுக்கத்தை நான் கவனித்தேன். இனி அவர் நல்ல வழியில் திரும்பி விடுவார் என்றே நினைக்கிறேன்....''

''அத்தை ஏளனமாகச் சிரித்தாள். ''கீதா! நீ நினைப்பது எவ்வளவு தவறாக இருக்கும் என்பதை நீ புரிந்து கொண்டு விடுவாய். ஒன்று மட்டும் நீ அறிந்து கொள். இந்தப் பணம் அவன் நன்மைக்கு வழிகோலுவது சந்தேகம். ஆனால் தீமைக்கு வழி காட்டுவது நிச்சயம்.... அந்தப் பணத்துடன் இன்று உன்னை ஊருக்கு அனுப்பி விடுவதாக இருந்தேன். ஆனால் பறி கொடுத்து விட்டு நிற்கிறாய் நீ.....'' என்று அத்தை பிரலாபித்தாள்.

நன்மை, தீமை விஷயத்தில் அத்தை கூறியது உண்மை என்பதைக் கீதா அன்றிரவே புரிந்து கொண்டு விட்டாள். மூர்த்தி தள்ளாடித் தள்ளாடி வீடு வந்தான். ''கடனை அடைத்து விட்டீர்களா?'' என்று கீதா கேட்ட கேள்வியே அவனுக்குப் புரியவில்லை. அவன் தன் போக்கில் பேசினான், ஆடினான், கூத்தடித்தான்.

அத்தை எவ்வளவு தடுத்தும் கேளாமல் கீதா ஒரு முடிவுக்கு வந்து விட்டாள். தையல் டீச்சரின் சிபாரிசு மூலம் 'மாதவ் ஏற்றுமதி இறக்குமதி' கம்பெனியில் அமர்ந்து விட்டாள். அன்று தான் கம்பெனி வாசலில் அவள் தியாகுவைச் சந்தித்தாள்.

மகனின் குணத்தை இவ்விதம் மூடி மறைத்தவள் தியாகுவை வீட்டுக்கு அழைத்து வந்த போது என்ன கூறி விடுவாளோ எனப் பயந்தாள் கீதா. தன் வீடு, தன் குடும்பம் என அவள் எப்படிக் கூறிவிட முடியும்? கீதாவின் சிபாரிசில் கீதாவின் ஆபீஸிலேயே காஷியர் வேலைக்குத் தியாகு டிபாசிட் பணம் கட்ட வழி தெரியாது நின்றபோது அத்தையே முன் நின்று மகனுக்குத் தெரியாமல் வைத்திருந்த பணத்தை எடுத்துக் கொடுத்தாள். அத்தையின் மனம் தியாகுவிடம் பதிந்துவிட்டதற்குத் தியாகுவின் நற்குணம்தான் காரணம் என்று கூறவேண்டும். அவர்கள் வீட்டில் இருந்தவரை மூர்த்தியைப் பற்றி அவள் ஒன்றும் கேட்கவில்லை. மூர்த்தியும் அவனிடம் நெருங்கவில்லை. வேலை

கிடைத்ததும் 'ஸதர்ன் அவென்யூ'வில் தனியாகப் போய் விட்டான் தியாகு.

முதல் சம்பளம் வாங்கியதும் தியாகு சம்பளத்தில் பாதியைக் கீதாவிடம் கொடுத்ததும் அவள் திகைத்தாள். அவனே அவர்கள் வீட்டில் இவ்வளவு நாட்கள் சாப்பிட்டதற்காக அதைப் பெற்றுக் கொள்ள வற்புறுத்தினான்.


''வேண்டாம் தியாகு! எனக்கு இப்பொழுது இந்தப் பணம் அவசியமில்லை.''

''உன் அவசியத்தைப் பற்றி எனக்குத் தெரியும் கீதா. மூர்த்தியின் காரணமாக உங்கள் இல்லம் எவ்வளவு அவல நிலையில் இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும்.''

கீதா திகைத்தாள். அத்தையும் அவளும் 'மூர்த்தி ஏதோ படிக்கிறான்' என்று கூறி வந்தபோது, தியாகுவே எல்லாம் தெரிந்தது போல், பேசுகிறானே!

''என்ன !சொல்கிறீர்கள்?''

''எனக்கு எல்லாம் தெரியும் கீதா. நீங்கள் என்னிடம் மறைக்கப்பார்த்தீர்கள். ஆனால் நான் ஆண்



மகன். சத்புத்திரன் தன்வீட்டில் எப்படிப் பழகுவான் என்பது எனக்குத் தெரியும். தகாத இடங்களிலும் நான் மூர்த்தியைப் பார்க்கும்படி நேரிட்டு விட்டது.''

'' நீங்கள் கெட்டிக்காரர்தான். ஆனால் வந்த புதிதில் எனக்கு மூர்த்தியின் போக்கே புரிபடவில்லை.''

'' கெட்டிக்காரத்தனம் காரணமில்லை. நான் என்னையே ஏமாற்றிக் கொள்ள வில்லை. ஆனால் நீயோ மூர்த்தியைக் கண்டது முதல் அவனிடம் அன்பு செலுத்த முற்பட்டு விட்டாய். அந்த அன்பே உன்னை ஏமாற்றப் பார்க்கிறது. மூர்த்தி நல்லவன், நல்லவன் என்று உருப் போடுகிறது......''

கீதா தியாகுவை ஏறிட்டு நோக்கினாள். பிறகு தலை குனிந்து, ''ஆமாம், தியாகு! மூர்த்தியின் குணம் தெரிந்த பிறகும் அவரை என்னால் வெறுக்கவே முடியவில்லை'' என்றாள் மெல்லியகுரலில்.

''அதை அப்படியே காப்பாற்றிவா. இது போன்றவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும் என்றால், அந்த நற்குணம் தனிப்பட்ட மகத்துவம் வாய்ந்தது. கீதா. உனக்கு அந்த நற்குணம் நீடித்து நின்று அதில் நீ வெற்றி பெறவே நான் வேண்டுகிறேன்.... ஆனால் ஒன்று மட்டும் நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். ஒவ்வொரு முறை கண்மூடித்தனமான தாய்ப் பாசம் குழந்தைகளைக் கெடுத்து விடுவது போல் உன் அன்பின் காரணமாக மூர்த்திக்கு நீ அடிக்கடி பண உதவி செய்வது நல்லதல்ல. அந்தப் பணம் தீய வழியில் செல்ல அவனுக்கு மேலும் உதவும்..... நீ எனக்குப் பண உதவி செய்திருப்பவள். அப்படியிருக்கும் போது நான் இதுபோல் சொல்வதும் பிசகுதான்....''

கீதா இடையே குறுக்கிட்டாள். ''இல்லை, தியாகு! நீங்கள் கூறுவதை நான் புரிந்து கொள்கிறேன். அன்புப் பிணைப்பில் ஊறிக் கிடக்கும் மனத்தைக் கல்லாக ஆக்கிக்கொள்ள நான் முயற்சி செய்கிறேன்.....''

கீதா தன் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டாள். தியாகு எவ்வளவு கூறியும் அவன் கொடுத்த பணத்தை மட்டும் அவள் ஏற்க மறுத்து விட்டாள். டிபாசிட் பணத்தை மட்டும் தான் கொடுக்கும்போது அவள் கண்டிப்பாகப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனத் தியாகு கேட்டுக் கொண்டான்.

வீடு திரும்பிய போது தியாகுவின் குணத்தின் மேன்மையை வியந்தபடி கீதா சென்றாள். இவ்வளவு அறிந்து வைத்துள்ளவன் இந்நாள் வரை வாய்திறந்து ஒரு வார்த்தை கூறவில்லை... நியோவிடம் மனத்தைப் பறி கொடுத்த அவளை ஏசவில்லை. அதற்குப் பதில் அவளது அன்பில் அவளை ஊன்றி நிற்கச் சொல்கிறானே!

மாதங்களைக் கடந்து வருடங்கள் முன்னேறின.

வழக்கம் போலவே கீதாவும், தியாகுவும் ஆபீசில் விலகியே இருந்தனர். ஆனால் அடிக்கடி கீதாவின் வீட்டுக்குச் சென்று வந்தான் தியாகு. அவர்கள் குடும்ப நிலவரத்தைத் தியாகு அறிந்து விட்டவன் என்று அறிந்தபிறகு அத்தை அவனிடம் மேலும் ஒன்றும் மறைக்க வில்லை. அவனைத் தன் சொந்த மகனாகப் பாவித்து அவனிடம் தன்மனக் குறையைக் கூறவும் ஆரம்பித்து விட்டாள். மூர்த்தியை நல்வழியில் திருப்ப அவன் உதவியை நாடினாள். ஆயினும் மூர்த்தியை நல்வழியில் திருப்பும் முயற்சியில் தியாகுவினால் வெற்றி காண முடியவில்லை. அதன் மூலம் கீதாவுக்கும் அவள் அத்தைக்கும் ஆனந்தம் தர முடியவில்லை. அவர்கள் குடும்பத்தைப் பற்றி ஒருவரிடமும் கூறப் போவதில்லை என்ற உறுதிமொழி ஒன்றுதான் அவனால் தர முடிந்தது.

பண்புமிக்க கீதாவின் உள்ளத்தில் வீற்றிருப்பவன் பண்பற்ற நீசன் என வெளியே பறைசாற்றி அவளுக்கு மனத் துயர் அளிக்கமாட்டான் அவன்; எந்தத் தாய் தன் மகனின் கீழ்ப்போக்கான நிலையை விவரித்து உலகின் கண் அவனது மதிப்பைக் குறைக்க விரும்பாதவளாய்த் தமிழர் வாழாத இடமாகத் தனி இடத்தில் குடியேறி விட்டிருப்பவர்களிடமே ரகசியமாக வைக்க விரும்பினாளோ அந்தத் தாயின் மகனைப் பற்றி உலகோரிடம் கூறி அந்தத் தாயின் பாச நீரைச் சகதியாக்க மாட்டான், தியாகு..... இது உறுதி...

இந்த மன உறுதியும், வாக்குத் தத்தமும் தன் வாழ்விலேயே பல கஷ்டங்களை ஏற்படுத்தும் என அவன் அச்சமயம் நினைத்துப் பார்க்கவேயில்லை....

வேலை காயமானதும் லீவு எடுத்துச் சென்ற தியாகுவுக்கு விவாகம் என்று அறிந்த கீதா குதூகலம் கொண்டாள். அவன் கல்கத்தா திரும்பிய பிறகே நல்ல வெகுமதி அளிக்கவேண்டுமென நினைத்து வாழ்த்துத் தந்தியோ, பரிசோ அனுப்பவில்லை. ஆயினும் அவள் எதிர்பாராமலே அவனுக்கு ஓர் அவசரத் தபாலும் அனுப்பும்படி நேரிட்டு விட்டது.

தியாகுவின் கலியாணப் பத்திரிகை கிடைத்ததிலிருந்தே அத்தை சற்று மனத் துயருடன் காணப்பட்டாள். பிறகு சில

நாட்கள் கழித்து அவள் வாய் விட்டே கூறிவிட்டாள். ''கீதா! தியாகு உன்னை மணந்து நீங்கள் இருவரும் சந்தோஷமாக இருந்திருக்கலாம். ஆனால் தியாகு இப்படிச் செய்து விட்டான்.''

கீதா சடக்கெனத் தலையைத் தூக்கி அத்தையை நோக்கினாள். ''அத்தை! என்ன சொல்கிறாய் நீ? தியாகுவை நான் மணப்பதா? இவ்வளவு நாட்கள் என்னுடன் பழகியும் என் மனம் உனக்குப் புரியவில்லையா?''

அத்தை உணர்ச்சி வேகத்தில் துடிதுடித்து நின்று விட்டாள். அப்படியானால் அவள் ஊகித்தது சரிதானா? தீயோன் என அறிந்தும் மூர்த்தியை விரும்புகிறாளே இவள், கடவுள் இவளுக்கு நல்வழி காட்டுவானா?.... கீதா கூறிய அவ்வார்த்தைகள் அத்தைக்குத் தன் வாழ்வில் முதன் முதலாகக் கிடைத்த இன்ப வாழ்வாகக் காணப்பட்டது. அவள் மகனையும் நேசிக்க உலகில் ஒருத்தி இருக்கிறாள்..... எல்லையற்ற களிப்புடன் கீதாவை அணைத்துக்கொண்டாள். உணர்ச்சிக் கண்ணீர் கண்கள் வழியே பெருகியது.

அப்பொழுதுதான் வீட்டில் நுழைந்தான் மூர்த்தி. அத்தை அவனை நோக்கினாள். ''மூர்த்தி! கேளடா, கேள். இந்த அசட்டுப் பெண் உன்னைத்தான் காதலிக்கிறாளாம். மணந்தால் உன்னைத்தான் மணப்பாளாம்....''

மூர்த்தி ஆச்சரியத்துடன் கீதாவை நோக்கினான். அவன் மனத்தில் என்றும் காணாத குறுகுறுப்பு ஏற்பட்டது. கீதா லஜ்ஜையுடன் சிரம் தாழ்த்தினாள்.

''மூர்த்தி! எனக்காக வேண்டாம். இந்த அபலைப் பெண்ணுக்காக ஒரு விருப்பம் கேளடா. தாய் தந்தையற்றவள். உன் குணம் தெரிந்தும் உன்னை நம்புகிறாள். உன்னை மணந்தால் அவள் சுகமாக வாழ வேண்டாமா? இந்த அழகுப் பெண் ஒரு நீசனை மணந்தாள் என்று உலகத்திடையே இவளுக்கு அபவாதம் உண்டாவதை நீ விரும்புவாயாடா? நீயே நினைத்துப் பார். உனக்காக அவள் உழைத்துச் சம்பாதித்துச் சோறு போட்டு உனக்குப் பணமும் தருகிறாள். நிலத்தை விற்றுக் கரியாக்கினாள். இவ்வளவு செய்த பிறகும் மஞ்சள் கயிற்றுக்கு உன் முன்னே கழுத்தை நீட்டத் தயாராக இருக்கிறாள். மூர்த்தி, அவள் மனத்தைப் பாழாக்கி விடாதே...... மூர்த்தி..... மூர்த்தி..''

''அம்மா!'' மூர்த்தியால் பேசவே முடியவில்லை. அவன் மனம் ஏதோ சுழலில் சிக்கிச் சிக்கித் தவிப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தலையில்

திரைத் துணுக்குகள்...

பொதுவாக இப்போதெல்லாம் வெளியாகும் ஆங்கிலப் படங்கள் அனைத்திலுமே ஆரம்பத்தில் நடிகர் நடிகைகள் டைரக்டர், தயாரிப்பாளர், காமிரா மேன் முதலியோரது பெயர்களைத் திரையில் காண்பிக்கும்போது புதுப் புது 'டெக்னிக்'குகளைக் கையாளுகிறார்கள். உதாரணமாகக் 'கால் மீ பவானா' என்ற படத்தில் சில ஆப்பிரிக்கக் குரங்குகள் இந்த ஆரம்ப கட்டத்தில் படாத பாடு படுத்துகின்றன. ஹிட்ச்காக்கின் பறவைகள் என்ற படத்தில் திரையில் விநாடி நேரம் தெளிவாகத் தோன்றும் எழுத்துக்கள் அடுத்த விநாடியே பறவைகளால் கொத்திப் போடப்பட்டது போல் பொடியாகி விழுவதைப் பார்த்தோம். The Thrill of it all என்கிற படத்தில் கதாநாயகியின் உள்ளக் கிளர்ச்சியை, சிலிர்ப்பை — வானில் பூத்துச் சொரியும் வாண வேடிக்கைகளின் வண்ணக் காட்சியில் பார்த்தோம். இதனாலெல்லாம் எடுத்த எடுப்பிலேயே படம் களை கட்டிவிடுகிறது. திரைக் கதையின் மையக் கருத்துக்கு ஏற்ப அமையும் வகையில் நூதன தலைப்புக்களைத் தயாரித்துக் கொடுக்க வென்றே ஸ்டுடியோக்கள், தனிக் கம்பெனிகளாக இயங்குகின்றன அமெரிக்காவிலே.

அமெரிக்கத் திரை உலகில் பாடல் எழுதுவதில் புகழ் பெற்றவர் இர்விங் பெர்லின். ஒரு சமயம் இவரை ஒரு சங்கீதப் படத்துக்குப் பாடல் எழுதச் சொன்னதும், இர்விங் லாபத்தில் ஒரு சதவிகிதத்தைக் கேட்டார். இதன் பயனாக அந்தப் படத்துக்கு எழுதிய ஐந்து பாட்டுக்களுக்காக அவருக்குக் கிடைத்த தொகை 70,000 டாலர்கள்! 1942-ல் 'இது ராணுவம்' என்ற சங்கீதப் படத்தைத் தயாரித்தார். இதில் கிடைத்த லாபம் 2,500,000 டாலர்கள். இதை அப்படியே தேசியப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கிவிட்டார் இர்விங் பெர்லின்.

இத்தனை புகழ் பெற்ற சங்கீதக்காரருக்குச் சங்கீதத்தின் இலக்கணம் தெரியாது. 'நோட்ஸ்' என்று சொல்லப்படும் மேலைநாட்டுச் சங்கீதக் குறிகளை எழுதத் தெரியாது! உள்ளத்தில் பொங்கி எழும் உணர்ச்சி அலைகளுக்கு ஒலி உருவம் கொடுத்து வாயால் இசைப்பார். இவரது காரியதரிசி இவர் உண்டாக்கும் இந்த இசை ஒலிக்கு வடிவம் கொடுத்து எழுதுவார்! இவரது முதல் பாடலுக்குக் கிடைத்த தொகை ஒரு ஷில்லிங்கும் நாலு பென்ஸும்; மூன்று வருஷம் கழித்து இவர் பாடல் ஒன்றின் விலை 40,000 டாலர்கள்!

கைவைத்து அவன் குனிந்து விட்டான். முகத்தில் வேதனை சுழியிட்டது.

அத்தை, மகனை ஊடுருவி நோக்கினாள். அவள் மனத்தில் ஒரு சிறு களிப்பு ஏற்பட்டது. அதையே அவளால் தாங்க முடியவில்லை. வருமா, வருமா என ஏங்கித் தவித்த களிப்பு. அக்களிப்பு அருகில் வந்த போது அவளால் தாங்க முடியவில்லை. அக்களிப்பு நெஞ்சு வரை ஏறி மனத்தை நிரப்பி அடைத்து விட்டு மூச்சை முட்டச் செய்து அதே நிமிடத்தில் அவளை இவ்வுலகிலிருந்தே பிரித்து விட்டது.

''அத்தை!'' என்று கீதா பிரலாபித்த அதே நேரத்தில் மூர்த்தியும் முதன் முறையாக நெஞ்சு துடிக்க, ''அம்மா!'' என்று அலறிக் கதறினான்.

கீதாவுக்கு அந்நேரத்தில் ஒன்றும் புரியவில்லை. தியாகுவுக்கு அத்தை இறந்தது குறித்துத் தந்தி கொடுத்து விட்டாள். அந்தத் தந்தி தியாகுவும் சுசீலாவும் சினிமாவுக்குப் போகப் புறப்படும் நேரத்தில் போய்ச் சேர அதன் காரணமாகச் சிறு சலனம் ஏற்படும் என அவள் அறிந்திருக்கவில்லை.

அன்று இரவு முழுவதும் என்றும் காணாத விதமாக மூர்த்தி பிரலாபித்தான். தான் செய்த தவற்றையெல்லாம் கீதாவிடம் வாய் விட்டுக் கூறினான். பெற்றோர்களுக்குக் கொடுத்து விட்ட துன்பத்தைக் கூறி வருந்தினான்.

அத்தை இறந்து விட்ட துயரை மறைத்து மூர்த்தி இனி நல்வழி திரும்புவான் என்ற நம்பிக்கை, குதூகலம் கீதாவின் மனத்தில் மேலோங்கி நின்றன. தியாகுவுக்கு வீணாகத் தந்தி கொடுத்தோமே என வருந்தினாள்.

ஆயினும் மறு நாள்.....

பொழுது விடிந்த போதே பேரதிர்ச்சி காத்து நின்றது. ஏழு, எட்டு நாட்களுக்கு முன்பு நடந்து விட்ட ஒரு கள்ளக் கடத்தல் ஒன்றின் காரணமாக மூர்த்தியின் வீடு தேடி வந்து அவனைப் போலீஸார் கைது செய்து விட்டனர். கீதா துடி துடித்தாள். வழக்கில் அவன் நிரபராதி என நிரூபித்து விட்டால், அவனை விட்டு விடுவதாகப் போலீஸார் கூறினர்.

மூர்த்தி கீதாவை நோக்கினான். ''இந்தக் குற்றத்தில் எனக்குச் சம்பந்தமில்லை கீதா. ஆனால் என் தீச் செயலுக்கு நான் தண்டனை அடையவே விரும்புகிறேன்.'' — தொங்கிய தலையுடன் அவன் போலீஸாரைப் பின்பற்றிச் சென்றான்.

உலகில் தான் தன்னந் தனியாக நடுக் கடலில் தவிப்பதாகக் கீதா உணர்ந்தாள். விம்மித் தவித்த நெஞ்சுக்குத் தியாகு ஒருவனே கலங்கரை விளக்காகத் தோன்றினான். உடனே எல்லாவற்றையும் விவரமாக அவசரத் தபாலில் எழுதி விட்டாள். யசோதை செய்திருந்த ஏற்பாட்டைக் குலைத்து அந்தக் கடிதம் தியாகுவைச் சுசீலாவுடன் சென்னையிலிருந்து புறப்படச் செய்து விட்டது.

கீதா விவரித்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் தியாகுவை யோசனையில் ஆழ்த்தியது. தாயின் திடீர் மரணமும், கீதாவின் அன்பு மனமும் மூர்த்தியின் மனத்தில் நல்ல விதையை விதைத்திருந்தன. ஆயின் புழு அரிப்பது போல் அந்த விதையை மேலோங்க விடாமல் போலீஸார் தடுத்து விடுவார்களோ எனப் பயந்தான்.

அத்தை அளித்திருந்த டிபாஸிட் பணத்தை அவன் திருப்ப நினைத்துச் சேர்த்து வைத்திருந்தான். அப்பணத்தில் ஜாமீனில் மூர்த்தியை விடுவித்தான். ஆனால் மூர்த்தியின் போக்குத்தான் விசித்திரமாக இருந்தது. எதிர் வழக்காட அவன் விரும்பவில்லை.

''தியாகு! நான் உண்மையாகக் கூறுகிறேன். எவ்வளவோ தீச் செயல்கள் புரிந்து விட்ட போதும் நான் பெண்களை மட்டும் ஒரு போதும் நெருங்கியதில்லை. அதனால் கீதாவை மணக்க நான் தகுதியுள்ளவன்தான். ஆனால் தீச்செயல் புரிந்து விட்ட இக்கைகள் கல்லுடைத்துத் துன்புற வேண்டும். அப்பொழுது தான் இனியாவது கீதாவை அரவணைக்கும் பண்பைப் பெறும்; கெடுதல்களையே அனுபவித்த இந்த மனம் கைதி நிலையில் கொடுமைகளை அனுபவித்துத் தவிக்க வேண்டும். அப்பொழுதுதான் இனி கீதாவிடம் கல் நெஞ்சுடன் இருக்காது. ஆகாதனவற்றைப் பருகிய இந்த வாய் கூழும் மோரும் குடித்துக் கசப்படைய வேண்டும். அப்பொழுது தான் சிறை மீண்ட பிறகு எனக்குக் கீதா கொடுக்கும் அமுதத்தைச் சுவைக்கும் பண்பு.....''

கீதா அவன் வாயைப் பொத்தினாள். பிறகு விசித்து விசித்து அழுதாள்.

வழக்கு மாதக் கணக்கில் இழுத்தது. மூர்த்தி எவ்வளவு கூறியும் கேளாமல் கீதாவும் தியாகுவும் வக்கீல் வைத்து எதிர் வழக்காடினர். முழு விடுதலை கிடைக்காவிடினும் தண்டனைக் காலம் குறைந்தது. இந்த வழக்கு காரணமாகவே தியாகு பல நாள் கீதாவின் வீட்டில் இரவு வெகு நேரம் வரை இருக்க நேரிட்டது. **(தொடரும்)**

படம் பிடிக்கும் போதினிலே

கல்லில்லாத அரிசி, கலப்படம் இல்லாத நெய், கலாட்டா இல்லாத கட்சிக் கூட்டம், ஆகியவைகளைப் பார்த்தாலும் பார்க்கலாம்—நடனம் இல்லாத தமிழ்ப் படத்தைப் பார்க்க முடியாது! கதாநாயகி பரீட்சையில் தேறி விட்டால் ஓர் ஆட்டம், கதாநாயகிக்குக் கதாநாயகனிடமிருந்து கடிதம் வந்து விட்டால் ஓர் ஆட்டம், கதாநாயகி நந்தவனத்துக்குப் போனால் ஓர் ஆட்டம், பூப்பறித்தால் ஓர் ஆட்டம்—இப்படியெல்லாம் நிஜ வாழ்க்கையில் எந்தக் குடும்பப் பெண்ணும் ஆடுவதாகத் தெரியவில்லை! இம்மாதிரி எடுத்ததற்கெல்லாம் காலையும், கையையும் தூக்கிக் கொண்டு எல்லா நடிகைகளும் ஆடுவதால் நடனக் கலையின் மதிப்புக்குப் பங்கம் ஏற்படுவதோடு, நாரீமணிகளின் நாணத்துக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. முன்பெல்லாம் சாஸ்திரோக்தமான பரத நாட்டியத்தைப் பழைய தமிழ்ப் படங்களில் கண்டு மகிழ முடிந்தது. இப்பொழுது வரும் நம் தமிழ்ப் படங்களில் நடனங்களை நினைத்தாலே நடுக்கம் ஏற்படுகிறது.



தமிழ்ப் படங்களில் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பு சாஸ்திரோக்தமான பரதநாட்டியத்தைப் புகுத்திய பெருமை வழுவூர் ராமையா பிள்ளை அவர்களையே சாரும். 1937ம் ஆண்டு வெளியான ''ஜோதி ராமலிங்கம்'' படத்தில் முதன்முதலில் பரதநாட்டியத்தை அரங்கேற்றினார். பிறகு, ''மாயா மச்சீந்திரா'', ''தக்ஷ யக்ஞம்'', ''கண்ணகி'' (பி. யூ. சின்னப்பா, கண்ணாம்பா நடித்துப் புகழ்பெற்ற படம்) முதலிய படங்களில் அவர் பயிற்சியளித்த நடனப் பெண்மணிகள் நடனம் ஆடினர். அவர் பயிற்சியளித்தவர்களில் குமாரி கமலாவை முதலாவதாகக் குறிப்பிட வேண்டும்.

''சாஸ்திரோக்தமான பரதநாட்டியத்தில் வல்லுநரான தாங்கள் எப்படிச் சினிமாவில் நடன டைரக்டரானீர்கள்?'' என்று கேட்டேன்.


''அப்பொழுது சினிமாப் படங்கள் இவ்வளவு கெட்டுப் போகவில்லை. 'சிவகவி', பழைய 'ஸ்ரீவள்ளி', 'நாம் இருவர்' ஆகிய படங்களில் என் டைரக்ஷனில்தான் நடனக்காட்சிகள் தயாராயின. நல்ல பெயரும் கிடைத்தது. பரதக் கலையைப் பரப்பும் நல்லதொரு வாய்ப்பை எண்ணித்தான் சினிமாவில் நடனப் பயிற்சி அளிக்க இசைந்தேன். ஆனால் இப்பொழுது படங்களில் வரும் நடன நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது புராதனமான பரதக் கலைக்கு, 'சாஸ்திரோக்த சம்பிரதாய சுத்த பரத நாட்டியம்' என்று தலைப்புப்போடத் தோன்றுகிறது. இப்பொழுது தமிழ்ப் படங்களில் வரும் நடனங்களில் பாராட்டும்படி ஒன்று கூட அமையா விட்டாலும் நடனப் பயிற்சியாளர்களின் பெயர் வரிசை வளர்ந்து கொண்டே போகிறது!'' என்றார் சிரித்துக் கொண்டே.

''சம்பிரதாய முறை தவறாத பரத நாட்டியத்தைப் போட்டுப் படம் எடுத்து வெற்றிபெற முடியும் என்று திரு ராமையாபிள்ளை நம்புகிறார்.

'வழுவூரார் க்ளாஸிகல் பரத நாட்டிய ஆர்ட் சென்டர்' என்று ஒரு நடனப் பள்ளிக்கூடம் ஆரம்பித்திருக்கிறார். சுத்த பரத நாட்டியம்: கற்பிக்கப்படும் என்பதைக் குறிப்பிடுவதற்காகவே ''க்ளாஸிகல் பரத நாட்டியம்'' என்று போட்டிருப்பதாகச் சொன்னார்.

''நெய்யில் கலப்படம் அதிகம் இருப்பதால் 'வெண்ணெய் காய்ச்சிய நெய்' என்று கலப்படம் இல்லாத நல்ல நெய்யைக் குறிப்பிடவேண்டியிருக்கிறது. அதே போலத்தான் இதுவும்!'' என்றார் திரு ராமையாப்பிள்ளை. அவர் சொல்வது முற்றிலும் உண்மைதானே? — **விஜயம்**




நாசுக்கான சித்திரத்
தையல் வேலையின் சிங்காரம்
ஹகோபா
ஃபேன்சி கார்ப்பொரேஷன் லிட்.,
16, அப்போலோ தெரு, பம்பாய்-1



கல்யாணம் பலவிதம்

அனுசூயா

'கல்யாணம்', 'விவாகம்', 'மணம்' என்கிற வார்த்தைகள் என்ன அர்த்தத்தைக் கொண்டு ஏற்பட்டனவோ தெரியவில்லை. அந்தக் கல்யாணத்தைச் செய்து கொள்கிறார்கள். விவாகமோ ஜம்மென்று நடக்கிறது. மணத்தைப் புரிந்து கொள்கிறார்கள். கலியாணம் என்றால், 'கலி ஆரம்பமாகிறது' என்று சிலர் வேடிக்கையாகச் சொல்வதுண்டு. அந்த வார்த்தைகளின் உண்மை அர்த்தம் என்னவாயிருந்தாலும், அவை யெல்லாம் ஒரே ஒரு காரியத்தைத்தான் பிடிவாதமாகச் செய்து கொண்டு வருகின்றன. ஒரு பெண்ணைப் பிடித்துக் கொண்டு போய் ஒரு பிள்ளையினிடமும் ஒரு மாமியினிடமும் ஒப்படைத்து விடுகின்றன!

இப்படி ஒப்படைக்கும் வேலை நமது தேசத்திலேயே பல ராஜ்யங்களில் பலவிதமாக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டுக் கலியாணங்களைப் பற்றி நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இன்னும் கொஞ்ச நாள் போனால் வைதிகர்கள், பிளாஸ்டிக் நுகத்தடி, பிளாஸ்டிக் அம்மி, பிளாஸ்டிக் தர்ப்பை முதலியவற்றை யெல்லாம் தயாராக வைத்திருப்பார்கள். ஒரு விஷயம் மட்டும் எனக்குப் புலப்படவில்லை. பட்டப் பகலில், நல்ல சூரிய வெளிச்சத்தில் பெண்ணுக்கு வானத்தில் உள்ள அருந்ததியைக் காட்டுகிறார்களே, அது அவள் கண்ணில் படுகிறதா என்பதுதான். அது போகட்டும். அதே போன்று கலியாணப் பிள்ளையையும் ஏக பத்தினி விரதனான ஸ்ரீ ராமனைப் பார்க்கச் சொன்னால் என்னவோ ?

❁ குடகில், முகூர்த்தத்தின் போது பிள்ளையையும், பெண்ணையும் முக்காலிகள் மீது உட்கார்ந்து கொள்ளச் செய்கிறார்கள். மந்திரங்களைச் சொல்லிய வண்ணம் பிள்ளை எழுந்திருந்து பெண்ணின் கையைப் பிடித்து எழுந்திருக்கச் செய்கிறான். அவள் கையைப் பிடிப்பதுதான் கலியாணத்தின் முக்கியமான அம்சம்.

பிள்ளை, தன் மனைவியைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லு முன், அவர் வீட்டுப் புரோகிதர் மூன்று கூழாங்கற்களைப் பெண் வீட்டுப் புரோகிதரிடம் கொடுப்பார். அவற்றை அவர் பெண்ணின் புடவையில் முடிச்சுப் போடுவார்.

புருஷன் சொத்தில் அவளுக்குப் பங்கு உண்டு என்பதைக் குறிக்க இப்படிச் செய்கிறார்களாம். கணவன் வீட்டுக்கு வந்ததும், பெண் ஒரு குடத்தை எடுத்துக் கொண்டு போய்க் கிணற்றில் தண்ணீர் மொண்டு கொண்டு வந்து சமையலறைக்குள் செல்வாளாம். இது அவள் அதிகாரபூர்வமாக வீட்டு வேலைப் பொறுப்பை ஏற்பதைக் குறிக்கும்.

❁ உத்தரப் பிரதேசத்தில் கலியாணத்துக்கு முதல் நாள் பெண் ஒரு பழைய புடவையைக் கட்டிக் கொண்டு கலியாண மேடையில் உட்கார்ந்திருப்பாள். விவாகமான ஸ்திரீகள் ஏழு பேர் குச்சிகளை எண்ணெயில் தோய்த்துக் கொண்டு அவற்றினால் பெண்ணின் கால்கள், முழங்கால்கள், தோள் பட்டை இவற்றைத் தொடுவார்கள்.

முகூர்த்த நாளன்று பெண்ணுக்கு ஸ்நானம் செய்வித்துக் கையில் நிறைய வளையல்களை அணியச் செய்வார்கள். அவளுடைய தோழிப் பெண்களும் வளையல்கள் நிறையப் போட்டுக் கொள்வார்கள்.

பெண்ணின் தந்தை, மற்ற சீதன சாமான்களோடு ஒரு மெத்தையும் கொடுத்திருப்பார். மாலையில் படுக்கை யறையில் விவாகம்செய்து கொண்டு விட்ட பெண்ணையும் பிள்ளையையும் அதன் மீது உட்காரச் செய்வார்கள். பிறகு மற்ற கணவன், மனைவிமார் ஜோடி ஜோடியாகப் படுக்கையைச் சுற்றிப் பிரதட்சிணமாகச் செல்வார்கள். அப்போது அவர்கள் ஆசீர்வாதம் செய்துகொண்டே போவார்கள்.

❁ ராஜஸ்தானில் மணப் பிள்ளை ஒரு குதிரையின் மீதேறித்தான் பெண்வீட்டுக்குச் செல்வது வழக்கம். அதுவும் பெண் குதிரை. அவன் இடுப்பில் ஒரு பக்கத்திலிருந்து ஒரு பட்டாக் கத்தி தொங்கிக் கொண்டிருக்கும். பழைய காலத்தில் கன்னிகைகளைத் தூக்கிச் சென்று போய்க் கல்யாணம் செய்து கொண்டதைக் குறிக்கும் வழக்கம் இது.

❁ அஸ்ஸாமில் முகூர்த்த தினத்தன்று காலை மணமகளின் தாயார் பெண்ணின் இரண்டு கன்னங்களிலும் வெற்றிலையைத் தேய்ப்பாள். அதே போன்று பிள்ளையின் தாயாரும் தன் பிள்ளையின் கன்னங்களில் தேய்த்து விடுவாள்.

மண மக்கள் அணியும் மலர் மாலைகள் ஒவ்வொன்றிலும் கணக்காக 101 பூக்கள் இருக்கும். முகூர்த்தம் நடக்கும் இடத்தில் 101 வட்டங்கள் உள்ள மத்திய வட்டத்துக்குள் பிரம்மா இருப்பதாக ஐதிகம்.





✽ வங்காளத்தில் விவாக தினத்துக்கு முதல்நாள் பிள்ளை வீட்டில் அவனுக்குத் தனிப் பட்ட விருந்து நடத்துவார்கள். இதற்குப் பிரம்மசாரிப் போஜனம் என்று பெயர். அதே போன்று பெண் வீட்டிலும் அவளுக்குக் கன்னிகா போஜனம் நடக்கும். விவாகமாவதற்கு முந்தைய கடைசிச் சாப்பாடு அது.

அன்றே காலஞ் சென்ற பெரியவர்கள் ஞாபகார்த்தமாகச் சடங்குகள் நடத்துவார்கள்.

✽ காஷ்மீரி 'பண்டிதர்கள்' வீட்டுக் கலியாணங்களில் ஹோமம், வேத பாராயணம் எல்லாம் அமர்க்களப்படும். ஹோம அக்னியைச் சுற்றிலும் ஏழு நாணயங்கள் வரிசையாக வைத்திருப்பார்கள். தம்பதிகள் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு அந்த நாணயங்கள் மீது காலை வைத்து நடந்து செல்வார்கள்.

விவாகமான பிறகு இருவரும் ஒரே தட்டில் விருந்து உணவு எடுத்துச் சாப்பிடுவார்கள். பிறகு மணமகன் தன் வீட்டுக்கு மனைவியை அழைத்துக் கொண்டு செல்வான்.

ஆனால், அந்த வீட்டில் தாராளமாக நுழைந்துவிட முடியாது. மணமகனது சகோதரிகள் கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு 'பணம் கொடுத்தால்தான் உன்னை விடுவேன்' என்பார்கள். பணமோ, அல்லது சாமான்களோ இனாம் கொடுத்து விட்டு மணமகன் தன் மனைவியை வீட்டுக்குள் அழைத்துச் செல்வான். அங்கே அவர்கள் இருவரும் மறுபடியும் ஒரே தட்டிலிருந்து சாப்பிடுவார்கள்.

காஷ்மீரிகள் கலியாணத்தில் மற்றெந்தப் பிரதேசத்திலும் பின்பற்றப் படாத விந்தையான வழக்கம் ஒன்று உண்டு. விவாகத்தின் போது மணப் பெண்ணை அவள் தந்தையோ தாயாரோ தூக்கி ஒரு ஜன்னல் வழியாக, அப்பால் நிற்கும் பிள்ளைவீட்டுக்காரரிடம் கொடுப்பார்கள். ஜன்னலுக்குக் கம்பிகள் இராது. பெண், தன் பெற்றோர்களின் அதிகாரத்திலிருந்தும் விடுபட்டு விடுவதை இந்தச் சம்பிரதாயம் குறிக்கிறதாம்.

✽ சீக்கியர்கள் நல்ல நாள், நல்ல நட்சத்திரம், நல்ல வேளை இதெல்லாம் பார்ப்பது வழக்கமில்லை. பெண் வீட்டுக்காரர்களுக்கும், பிள்ளை வீட்டுக்காரர்களுக்கும் என்று சௌகரியப்படுகிறதோ அன்றைய தினம் முகூர்த்தத்தை வைத்துக் கொள்வார்கள். அநேகமாக, பௌர்ணமி, அல்லது அவர்களது மதாசாரியர்களின் பிறந்த தினமன்று விவாகங்கள் நடக்கும்.

மணப் பிள்ளை ஒரு பெண் குதிரை மீதேறி, மணமகள் வீட்டுக்கு வருவான். ''தயவு செய்து இறங்குங்கள்'' என்று மாமனார் கேட்டுக் கொள்வதற்கிணங்க அவன் இறங்கி விடுவான்.

விவாகம் நடப்பதற்கு மூன்று தினங்கள் முன்னிருந்தே 'கிரந்த சாகிப்' என்ற சீக்கிய வேதத்தைப் படித்து வர ஏற்பாடு செய்திருப்பார்கள். அந்தப் பாராயணம் முற்றுப் பெற இருக்கும் சமயம் கலியாணச் சடங்குகள் நடைபெறும்.

✽ பர்மியக் கலியாணங்கள் உலகத்தில் நடக்கும் மற்றெல்லாவற்றினின்றும் அடிப்படையான அம்சத்தில் மாறுபட்டது. மணப் பெண் கணவனிடம் அன்பு கொண்டு, அவனைக் கௌரவித்து, அவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக வாக்குறுதி அளிப்பதில்லை. அதே போல் மணமகனும் அவளைப் பராமரித்துக் காப்பாற்றி வரும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதில்லை.

அவர்கள் கலியாணங்களில் மத சம்பந்தமான சடங்குகள் எதுவும் நடைபெறுவதில்லை. புத்த மதக் குருமார்களான பொங்கிகள் உலகப் பற்றைத் துறந்து விட்டவர்களாதலால் திருமணம் சம்பந்தப்பட்ட எதிலும், கலந்து கொள்வதற்கில்லை. சமூகத் தலைவர்களுள் ஒருவர் கலியாண வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். பெண், பிள்ளைக்கு இடது பக்கத்தில் அமர்ந்திருப்பாள். அவர் மண மக்களின் பாட்டனார், பாட்டி, தந்தை தாயார் இவர்களைப் பற்றிய வரலாறுகளைக் கூறுவார். பிறகு மணமகன், மணமகள் இருவருடைய குணாதிசயங்களையும் வர்ணிப்பார். பிறகு ஒரு விதச் செடியின் இலைகளை அவ்விருவருக்கும் கொடுப்பார். அவர்கள் அதைக் கையில் பிடித்துக் கொண்டு ஆறு முறை தலை குனிந்து வணக்கம் செய்வார்கள். அதில் முதல் வணக்கம் புத்தர் பெருமானுக்கு. இரண்டாவது அவரது போதனைகளுக்கு. மூன்றாவது பொங்கிகளுக்கு; நான்காவது பெற்றோர்களுக்கு; ஐந்தாவது உபாத்தியாயர்களுக்கும் பெரியோர்களுக்கும்; ஆறாவது வணக்கம் விவாகத்துக்கு விஜயம் செய்திருக்கும் விருந்தினர்களுக்காகும்.

கடைசியாக, பரஸ்பரம், அன்புடனும் இன்பகரமாகவும் வாழ்க்கை நடத்தி வந்த பழுத்த வயோதிகத் தம்பதிகள் மணமக்களின் கைகளைச் சேர்த்துப் பிடித்து ஒரு தங்கக் கிண்ணத்தில் வைத்துத் தண்ணீரை விடுவார்கள். இதுதான் கலியாணம் ஆகி விட்டதைக் குறிக்கும். பிறகு தலைமை வகித்தவர், 'ஆங்பையா ஆங் பையா! ஆங்பையா!' என்று மூன்று முறை உரக்க உற்சாகத்துடன் கூறுவார்கள். இதற்குக் கலியாணம் பூர்த்தியாகி விட்டது என்று அர்த்தம்.

அறிவுக் கனலே, அருட் புனலே!

69

ரா. கணபதி

வங்காளத்தைக் காண ஸ்வாமிஜி எவ்வளவு ஆவல் கொண்டிருந்தார், அவரைக் காண வங்காளம் எவ்வளவு ஆவல் கொண்டிருந்தது என்பதை நாம் அளவிட்டுச் சொல்வதற்கில்லை. சாதாரணமாகவே வங்காளிகளின் உணர்ச்சிக்குக் கேட்க வேண்டியதில்லை. தாங்கள் அறிந்திராத தவப் புதல்வர் ஒருவர் தரணி முழுவதும் தாயகத்தின் தத்துவப் பெருமையை நிலைநாட்டித் திரும்பி வருகிறார் என்பதில் வங்காளம் உற்சாகமாகப் பொங்கிக் கொண்டிருந்தது. கல்கத்தா ஸ்வாமிஜிக்கு அளித்த வரவேற்பின் இயல்பைச் சொல்வது சாத்தியமல்ல வாதலால் சொல்லாமலே விடவேண்டியதாகிறது.

ராமனைக் கண்ட பரதன் போல் குருபாயிக்கள் ஸ்வாமிஜியை மீண்டும் சந்தித்தனர்.

ஸ்வாமிஜியைக் காண மக்கள் ஓயாமல் திரளாக வந்தனர். பகல் வேளைகளை ஸியால் தோட்ட மாளிகையிலும், இரவுகளை அலம்பஜாரில் அப்போது இருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திலும் செலவிட்டார் ஸ்வாமிஜி.

ஸ்வாமிஜி கல்கத்தாவுக்கு வந்த ஒரு சில தினங்களிலேயே பரமஹம்ஸரின் அவதார தினம் நிகழ்ந்தது. வழக்கம் போல் தக்ஷிணேச்வரத்தில் கொண்டாடப்பட்ட ஜயந்தி விழாவில் இவ்வாண்டு ஸ்வாமிஜி கலந்துகொண்டதால் மாபெரும் மக்கள் திரள் பவதாரிணி ஆலயத்தில் கூடிற்று.

தக்ஷிணேச்வரத்துக்கு வந்த ஸ்வாமிஜி தேவி பவதாரிணியின் சந்நிதியில் பிரவேசித்தார். அப்போது அவர் உள்ளத்தில் என்னவெல்லாம் எண்ணங்கள் எழும்பியிருக்குமோ? பவதாரிணியை நம்பாத தினங்கள், அவளை அவர் நம்புமாறு குருபிரான் செய்த தினம், பிறகு பவதாரிணியை அன்றி வேறெதையும் அவர் நம்பாத தினங்கள், அதற்குப் பிற்பாடு பவதாரிணி தவிர வேறெதுவுமே கிடையாது—காண்பன எல்லாம் அவளே — எனக் கண்டு உலக சேவையை உலக நாயகியின் சேவையாக அவர் நம்பத் தொடங்கிய தினங்கள், அந்த நம்பிக்கையை நடப்பாக்கி நானிலமெங்கும் பரப்ப நாயகி நல்லருள் புரிந்த தினங்கள் இவை யெல்லாவற்றின் நினைவுகளும் அவரது நெஞ்சினை நிறைத்தன.

அடியற்ற மரம்போல் அம்பாளின் அடியிணைகளில் பணிந்தார் ஸ்வாமிஜி.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தவத்தையும், ஞானத்தையும், யோகத்தையும், பக்தியையும், எளிமையையும், தர்மத்தையும், சத்தியத்தையும் அநுதினமும் பரப்பிய அறையை உணர்ச்சிமயமாகச் சென்றடைந்தார் ஸ்வாமிஜி.

முதன் முதலில் அந்த அறையில் மேற்கு வாயில் வழியாகத்தான் ஸ்வாமிஜி பிரவேசித்தார். இன்று மேற்கு நாடுகளை எல்லாம் மேலான வேதாந்த சாரத்தில் ஈடுபடுத்தி விட்டு, மீண்டும் வந்திருக்கிறார்!

பாரதத்தின் மத மறுமலர்ச்சிக்குக் காசியான தக்ஷிணேச்வரத்துப் பஞ்சவடியை அடைந்தார் ஸ்வாமிஜி. அங்கு பார்த்த பல முகங்கள் ஆண்டுகளின் அடிச்சுவட்டில் மாறிக் காட்சியளித்தன. இந்தக் காட்சியிலேயே ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம் புத்துயிர் பெற்றது.

கல்கத்தாவில் ஸ்வாமிஜி தமது மகத்தான சொற் பெருக்குகளை நிகழ்த்துகிறார். இவற்றைச் சொற்பெருக்கு என்பது அவ்வளவு பொருத்தமாகப் படவில்லை. 'கருத்துப் பெருக்கு' என்றே சொல்வது யுக்தம்.

மேல் நாடு சென்று வந்த ஸ்வாமிஜியைப் பற்றி ஒரு சிறிது ஐயம் கொண்டிருந்தவர்களும் இவ்வுரைகளைக் கேட்டபின், அவர் சநாதன தர்மத்தைத் திரிக்காமல் கூறியே மேனாட்டினரை அதனில் ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

வங்காளம் விழித்துக் கொள்ளத் தொடங்கியது.



வங்காளம் மட்டும்தானா?

பாரத மாதா தனது உடல் முழுவதையும் அசைத்துக்கொண்டு துயில் எழலானாள்.

எதற்காக ஸ்வாமிஜியின் அவதாரம் நிகழ்ந்ததோ அது பழுக்கத் தொடங்கி விட்டது. ஆனால் அதனை ஒரு நிகழ்ச்சியாக வைத்து எழுத்தில் விவரிப்பது முடியாத காரியம். பூ எப்படிச் சிறிது சிறிதாகப் பழமாகிறது என்பதை எப்படி விளக்க முடியும்? மனிதனின் பிராணாதாரமான மூச்சுக் காற்றை எப்படிக் கண்ணுக்குக் காட்டிக் கொடுக்க முடியாதோ அவ்வாறே இந்தச் சரித்திரத்தின் பிராணனைப் போன்ற பாரத மறுமலர்ச்சியையும் எழுத்தில் வடித்துக் காட்ட முடியவில்லை.

மறுமலர்ச்சி எப்படி நடைபெற்றது என்று விளக்க முடியாவிட்டாலும் மறுமலர்ச்சி நடைபெற்றது என்பதை மட்டும் அடித்துச் சொல்லலாம். இல்லாவிடில் இன்று பாரத நாடு முழுவதும் கிறிஸ்துவ சமயம் அல்லவா பரவியிருக்கும்? அல்லது கிறிஸ்துவம், பௌத்தம், இஸ்லாம் இவை கலந்த சீர்திருத்த சமயங்களல்லவோ பரவி வளர்ந்திருக்கும்? அல்லது எந்த விதமான சமய உணர்வுமற்று நாஸ்திக லோகாயத நாடாக அல்லவா இந்தப் பொன்னாடு மாறியிருக்கும்? படித்தவர்களெல்லாம் ஹிந்து மதத்தின் சில சடங்குகளையும், பழக்க வழக்கங்களையும் வெறுத்துக் கிறிஸ்தவர்களாக மாறிய காலம்--அல்லது மத உணர்வுக்கே முழுக்குப் போட்ட காலம்—அது. படிக்காதவர்களையோ பணத்தைக் காட்டி மதம் மாற்றி வந்தனர் பாதிரிமார். இந்த நிலைமையில் நாட்டுக்கு ஸ்வாமிஜி சிகிச்சை செய்து உயிர்த் துடிப்பு அளித்தார் என்பதற்குப் பாரதம் இன்றளவும் பாரதமாகவே இருப்பதே சான்று.

ஸ்வாமிஜி கூறியதையெல்லாம் மக்கள் புரிந்து கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. புரிந்து கொண்டதையும் அநுஷ்டித்தார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் படித்தவர்களில் பெரும்பாலோர் ஓர் உண்மையை நன்றாகப் புரிந்துகொண்டார்கள். 'கிறிஸ்துவப் பிரசாரகர்கள் கூறுவது போல் கட்டுக் கதைகளும், மூடப் பழக்கங்களும் மட்டும் கொண்டதல்ல ஹிந்து மதம். மற்ற மதங்களில் இல்லாத உன்னத உண்மைகள் அதில் உள்ளன. மேல் நாட்டில் அதற்குக் கிடைத்த பேராதரவே இதற்கு அத்தாட்சி' என்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்டார்கள். மேல் நாட்டினரை ஹிந்து மதத்தால் ஆட்கொண்டால்தான் நம் நாட்டு மேதாவிகள் தமது சமயத்தில் ஈடுபடுவார்கள் என ஸ்வாமிஜி எண்ணியது முற்றிலும் மெய்யாயிற்று.

ஜாதி முறைகளின் காரணமாகச் சமூகத்தில் சிறுமைக்கு ஆளானவர்கள் அந்தச் சிறுமை இல்லாத கிறிஸ்துவ மதத்துக்கு மாறினதில் ஆச்சரியமில்லை. இதனை ஸ்வாமிஜி ஒப்பற்ற முறையில் தடுத்து நிறுத்தினார். ஜாதி முறைகளைத் தகர்க்க வேண்டுமென்பது போல் எதுவுமே கூறாமல் இந்த அற்புதத்தை அவர் செய்தார். ஏற்றத் தாழ்வு உணர்ச்சி இல்லாமலே, அவரவரும் தம் தொழிலால் நாம் பெரியவர்கள் என்ற கருத்தின்படி ஜாதி தர்மத்தை அநுஷ்டித்த புராதன காலத்தை ஸ்வாமிஜி போற்றினார். பிறகு ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கி, ஜாதி முறையினால் கடமையைவிட அதிகமாகச் சலுகைகளைப் பெற்றவர்களைக் கண்டித்தார். ஆனால் நவ பாரதத்தில் பண்டைய நியதிப்படி ஜாதி முறைகளைத் தொழில் பிரிவினையாகப் புனர் நிர்மாணிக்க வேண்டுமென்றோ, அல்லது வேண்டாமென்றோ எதுவுமே அவர் கூறவில்லை.

எப்படியாயினும் ஜாதியை முன்வைத்து ஒருவர் சலுகை பெறுவதையோ, வேறொருவர் சிறுமை பெறுவதையோ அவர் கண்டித்தார்; இதொன்றே மற்ற எந்தச் சீர்திருத்த இயக்கமும் செய்ய முடியாத அற்புதத்தைச் செய்தது. மிகவும் நயமாகக் கையாள வேண்டிய ஒரு மலர் போன்றது சமூகம். அதனைப் பிய்த்துப் பிய்த்துப் பார்த்தனர் மற்ற சீர்திருத்தவாதிகள். ஸ்வாமிஜி நாசூக்காகக் கையாண்டு அதிலுள்ள மாசுகளைத் தட்டி எடுத்தார்.

பாமர மக்கள் ஸ்வாமிஜியின் உபதேசங்களை நேரிடையாகக் கேட்டுப் புரிந்து கொண்டு பிற மதம் தழுவாமல் இருந்தனர் என்று சொல்வதற்கில்லை. ஆனால் இந்நாட்டின் படிப்பாளிகள் விழித்துக்கொண்டதை எதிராளிகள் புரிந்து கொண்டனர். தாங்கள் முன்போல் பாரத தர்மத்தைப் பற்றி அவதூறும், அபவாதமும் சொன்னால் ஒரு பெரும் படை தங்களை எதிர்க்கும் என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர். இதனால் மத மாற்றத் தீவிரம் தானே நலிவுற்றது. பரமஹம்ஸரும், ஸ்வாமிஜியும் எதற்காக அவதரித்தனரோ அது பூர்த்தியாகத் தொடங்கியது.

இளைஞர்கள்தானே எதிர் காலத்துக்குப் பாலமாக முடியும்? எனவே அன்று பரமஹம்ஸ தேவர் செய்தது போலவே இன்று ஸ்வாமிஜியும் தமது சக்தியை யெல்லாம் இளைஞர் குழாத்தின் இரத்தக் குழாய்களில் பாய்ச்சி அவர்களை எழுச்சி கொள்ளச் செய்வதில் முனைந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண பகவானைப் போலவே, அவர்களிடம் வறட்டு வேதாந்தம் பேசாமல், மனிதப் பாங்குடன் பழகி அவர்களை ஈர்த்தார். மனித சேவையே தமது மதத்தின் மையக் கருத்து என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறினார். 'ஏழையர் யாவரும் சிவபெருமானே; தரித்திரர் யாவரும் நாராயணனே' என்று இயம்பினார். ஸ்ரீ ருத்ரத்தில் வேதம் இப்படித்தான் 'யாவும் சிவபெருமானே' என்கிறது. அதே வேதம், நாம் காண்பதும் கேட்பதுமான எல்லாவற்றின் உள்ளும் புறமும் நாராயணனே உள்ளான் என்கிறது. ஆக ஸ்வாமிஜி மனித சேவையை மதமாகக் கூறியது நமது வேதத்துக்கே ஏற்றதுதான். எனினும் இது பலருக்குப் புரியவில்லை.

மனித சேவை பற்றி ஹிந்து மதாபிமானிகளுக்கு இருந்த தப்பபிப்பிராயத்துக்கு இதோ ஓர் உதாரணம்:

கோரக்ஷண சங்கத் தலைவர் ஒருவர் ஸ்வாமிஜியைச் சந்தித்தார். தமது சங்கம் பசு மாடுகளின் பராமரிப்புக்குச் செய்யும் சேவைகளை அவர் ஸ்வாமிஜிக்கு எடுத்துக் கூறினார்.

''சரி, மத்திய இந்தியாவில் பயங்கரமான பஞ்சம் ஏற்பட்டு ஒன்பது லட்சம் மக்கள் மடிந்திருப்பதாகச் சர்க்கார் அறிக்கை விட்டிருக்கிறதே! அவர்களுக்கு உங்கள் சங்கம் ஏதேனும் உதவி செய்துள்ளதா?'' என்று வினவினார் ஸ்வாமிஜி.

''இல்லை. இது போன்ற காரியங்களுக்கு நாங்கள் உதவுவதில்லை. கோமாதாவை ரட்சிப்பதொன்றுதான் எங்கள் லட்சியம். பஞ்சம் ஏற்பட்டு மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால் அது அவர்களுடைய கர்மம். தாங்கள் செய்த பாபத்துக்கு அவர்கள் அநுபவிக்கத் தானே வேண்டும்?'' என்றார் சங்கப் பிரசாரகர் சிறிதும் நெஞ்சீரம் இல்லாமல்.

ஸ்வாமிஜிக்கு எரிச்சல் வந்தது. ''இந்தக் கர்ம நியதி உங்கள் சங்கத்தின் லட்சியத்துக்கும்தானே பொருந்தும்? பசுக்கள் கசாப்புக் கடைக்காரனிடம் சிக்கிக் கொள்கின்றன என்றால் அதற்குக் காரணம் அவற்றின் கர்மம்தான் என்று ஏன் சொல்லக் கூடாது?'' என்றார்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நமது சாஸ்திரங்கள் 'பசு நமது தாய்; அதை ரட்சிக்க வேண்டும்' என்கிறது. அதன்படி பணி செய்கிறோம்'' என்றார் கோரட்சகர்.

ஸ்வாமிஜி சிரித்தார்.

''ஆமாம், ஆமாம்; பசு நமது தாய்தான். அது எனக்குப் பிரத்தியக்ஷமாகத் தெரிகிறது. மாட்டைப் போன்ற ஒரு விலங்கின்றி வேறு யார் நம்மை நிகர்த்த புத்திசாலிப்பிள்ளைகளைப் பெற்றிருக்க முடியும்?'' என்று கேட்டார்.

ஆத்ம மோக்ஷத்தைவிட சமூக சேவையே சாதுக்களின் லட்சியம் என்பதை குருபாயிக்களின் மனத்தில் பதிவு செய்வது அவ்வளவு எளிதாக இல்லை. அவர்கள் பாரமார்த்திக தியானத்துக்காகத்தான் வீடு வாசலைத் துறந்து குருமஹராஜை அண்டியிருந்தார்களேயன்றி மக்களுக்குச் சேவை புரிவதற்காக அல்ல. ராமகிருஷ்ண பகவான் சமூக சேவையைப் பிரதானமாகச் சொல்லவில்லை என்றே குருபாயிக்கள் கருதினர். ஒருவர் வியக்தமாகவே சொல்லி விட்டார். உடனே ஸ்வாமிஜியின் ஆத்மா கனன்று, வடவாக்கினியான வாசகங்கள் அவரது நாவிலிருந்து புறப்பட்டன.

''ஜன சேவை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மதமில்லை என உங்களுக்கு எப்படித் தெரியும்? அந்தமில்லாத எண்ணப் பெருக்கினை உடைய குருநாதரை உங்களது சிறிய எல்லைக்குள் அடைக்கவா பார்க்கிறீர்கள்? நான் இந்த எல்லைகளைத் தகர்த்தெறிந்து அவரது எண்ணங்களை உலக முழுவதும் வாரித் தெளிப்பேன்'' என்றார்.

தொடர்ந்து, ''குருமஹராஜுடைய ஆழங்காணமுடியாத உள்ளத்தை யாரும் அளவிட முடியாது. அவரது நயனங்களின் ஓர் அருள் நோக்கு தொடிப் போதில் நூறாயிரம் விவேகாநந்தர்களைச் சிருஷ்டித்துவிடும்! அப்படியிருந்தும் ஏன் ஒருவன் வழியே அவர் செயல்பட எண்ணம் கொண்டார் எனில், என்னைத் தமது கருவியாகத் தேர்வு செய்தார் எனில், நான் அவரது திரு உள்ளக் கருத்துக்கு வணங்குவதன்றி வேறென்ன செய்ய முடியும்?'' என்றார்.

பரமஹம்ஸர் எப்படித் தம்மைப் பவதாரிணியிடம் பூரணமாக ஒப்புக் கொடுத்துக் கொண்டு தமக்கெனச் சிந்தனையும் செயலும் அற்றிருந்தாரோ அதேபோல் பரமஹம்ஸரின் முழு எல்லையையும் புரிந்து கொண்டு அதில் கரைந்திருந்தார் ஸ்வாமி விவேகாநந்தர். எனவே அவர் தற்போது சமூக சேவை பற்றிச் சிந்தித்தார் எனில் அதுவும் குருநாதர் தூண்டி வைத்த சித்தமே எனக் கருதினார்.

ராமகிருஷ்ணர் — விவேகாநந்தர் என்று இரட்டையாக அவதாரம் நிகழ்ந்ததன் பொருளே இதில்தான் இருக்கிறது. ஸ்ரீராமகிருஷ்ணரே தமது அநுபவங்களை உலகுக்கு விளக்கியிருக்கலாம்; அல்லது உலகுக்கு விளக்கமளித்த ஸ்ரீ விவேகாநந்தரே அவற்றை அநுபவித்திருக்கலாம். இவ்வாறு இன்றி அநுபவங்களை ஒருவர் நீண்ட நெடுங்கால சாதனைகளால் பெற்றார். பிறகு அவற்றை இன்னொருவருக்கு வெகு லகுவாக அளித்தார். அந்த இன்னொருவர் அவற்றைப் பிரசாரம் செய்தார். அப்படியானால் ஓர் அவதார புருஷர் போதாமல் இரண்டு பேர் தேவைப்பட்டனர் என்று பொருளா? இப்படிக் கூறுவது அவதாரத்தையே குறைத்துச் சொல்வதற்குச் சமம் அல்லவா? எனவே, நாம். ராமகிருஷ்ண-விவேகாநந்தர்களை இரண்டு தனி அவதாரங்களாகக் கருதக் கூடாது. இருவரும் சேர்ந்தே



குட்டிக்கதை

ஒருவர் ஒரு ஹோட்டலில் போய்த் தங்கும்படி நேர்ந்தது. அந்த ஹோட்டல் முதலாளியின் பெயர் சசீந்திர விலாஸ் சுந்தரமூர்த்தி. அவர் ஒரு விடுகதை போட்டார் வந்தவரிடம்.

'என் தாயாருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அது என் தம்பியுமல்ல, என் தங்கையுமல்ல; அது யார்?' என்றார். ஹோட்டலில் தங்கவந்தவர் ''சாரி! உங்க குடும்பத்தைப் பற்றி எனக்குத் தெரியாது'' என்று சொன்னார். உடனே முதலாளி, 'சரி, நான் சொல்றேன். அது நான்தான்' என்றார். 'பேஷ், பேஷ்! இதை நான் மறக்க முடியாது. இதை நான் யாரிடமேனும் சொல்ல வேண்டும்' என்றார்.

அதன்படி அவர் வேறு ஊருக்குப் போனபோது அங்கு ஒருவரிடம் இதே விடுகதையைச் சொன்னார்.

'என் தாயாருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அது என் தம்பியுமல்ல, என் தங்கையுமல்ல. அது யார்?' என்றார்.

'தெரியவில்லையே' என்றார் மற்றவர்.

'அட ராமா, இது தெரியவில்லையா? அது சசீந்திர விலாஸ் சுந்தரமூர்த்தி சார்!'' என்றார் விடுகதை போட்டவர்.

ஓர் அவதாரம்தான்; சக்தியும் சிவமும் போல அவ்விருவரும். ராமகிருஷ்ணர் பூத உடலை நீத்தார் எனினும் அதன்பின் ஸ்வாமிஜியின் உள்ளத்திலிருந்து சிந்தித்தார், பேசினார், செயல் புரிந்தார். எனவே இப்போது ஸ்வாமிஜி மக்கள் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் எனில் அதுவும் பரம ஹம்ஸர் அவரை அவ்வாறு ஈடுபடுத்தியதால்தான் என்றே கூறலாம்.

காலத்தின் தேவைதான் இப்படி இருவர் சேர்ந்து ஓர் அவதாரமாக ஏற்படக் காரணமாயிருந்தது. அறிவாராய்ச்சியில் முன்னேறிய நிகழ் காலத்தில், நவீனக் கல்வி பெறாத ஒருவர் மூலம் ஆத்மிகத்தைப் பரப்பி, அறிவைவிட அநுபவமே முக்கியம் என்பதை மெய்ப்பிக்க வேண்டியிருந்தது. இதனாலேயே எளியவரில் எளியவராக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவதரித்தார். ஆனால் நவீனக் கல்வி பெறாத இவர் எப்படி அகில உலகுக்கும் தமது அநுபவத்தை விளக்க முடியும்? அதற்காகத்தான் இன்னொருவரும் வேண்டியிருந்தார். ஸ்வாமிஜியின் அவதாரம் இதற்காகவே நிகழ்ந்தது.

மக்களுக்குச் சமூக ரீதியிலும் சமய ரீதியிலும் பணி புரிவதே சாதுக்களின் கடமை என்ற தமது கொள்கைக்குக் குருமஹராஜின் ஒப்புதல் நிச்சயமாக உண்டு என்பதைச் சில உதாரணங்களால் விளக்கினார் ஸ்வாமிஜி.

'கடவுளைக் காணக் கண்களை மூடிக்கொள்ள வேண்டியதில்லை. கண்ணைத் திறந்துகொண்டே கடவுளுடன் சேர்ந்திரு' என்று ஒரு முறை தம்மை குரு பணித்ததை நினைவுகொண்டார். கண்ணுக்கு முன் தெரியும் மாந்தரைத் தெய்வமாக எண்ணிச் சேவை செய்வதுதான் இதன் பொருள் என்று நிச்சயம் கொண்டார்.

''மதம் என்பது வயிறு காய்ந்தவர்களுக்கு ஏற்பட்டதல்ல'' என்று குருநாதர் வியக்தமாகக் கூறியிருக்கிறாரே! மக்களுக்குத் தத்துவங்களை மட்டும் தந்தால் போதாது; முதலில் அவர்களுக்கு உணவும் உடையும் இருக்கையும் அளிக்க வேண்டும் என்ற ஆக்ஞைதானே இது? 'மக்களுக்காக உன் மோக்ஷத்தைத் தியாகம் செய்' என்று பரமஹம்ஸர் ஆணையிட்டபோது சமயத்தோடு இணைந்த சமூகத் தொண்டுக்குத்தானே அவர் ஸ்வாமிஜியைப் பணித்தார்?

பிறிதொரு சமயத்தில் இவ்விஷயமாக மீண்டும் மயங்கிய சீடர்களிடம் ஆவேசமாகப் பேசினார் ஸ்வாமிஜி.

''என்னைவிட நீங்களெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நன்றாக உணர்ந்திருப்பதாக நினைக்கிறீர்களா? ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி ஏதோ அற்பமாகத் தெரிந்து கொண்டு, அதுவே முற்றுமாம் என்று எண்ணி உபதேசம் செய்ய வந்துவிட்டீர்கள்! எட்டிப் போங்கள்! உங்களுடைய ராமகிருஷ்ணரைப் பற்றி இங்கு யாருக்கு அக்கறை? உங்களுடைய பக்தியும் முக்தியும் இங்கு யாருக்குப் பொருட்டு? உங்களுடைய சாஸ்திரங்கள் என்ன சொல்கின்றன என்பதைப் பற்றி யார் கவலைப்பட்டார்கள்? என்னுடைய நாட்டு மக்களை உயர்த்துவதற்காக நான் ஆயிரம் முறை வேண்டுமானாலும் நரகத்துக்குச் செல்லத் தயார். நான் ராமகிருஷ்ணருடைய ஊழியன் அல்ல; நான் யாருடைய ஊழியனும் அல்ல. தனது முக்தியைப் பற்றி எண்ணாமல் பிறருக்கு உதவி புரிந்து பணி செய்பவனுக்கே நான் பணியாளன்.''

தம்மைப் பரமஹம்ஸரின் ஜன்ம ஜன்மாந்தரத்து அடிமை என்று சொல்லிக் கொண்ட ஸ்வாமிஜியா இப்படிப் பேசினார் என்று அதிசயிக்காதீர்கள். பேச்சு இங்கு முக்கியமல்ல. அந்தப் பேச்சுக்குக் காரணமான மனிதாபிமானத்தை என்னென்பது!

ஆவேசப் பேச்சும் எவ்வளவுக்குத்தான் உணர்வுகளுக்கு உருவம் தர முடியும்? மொழிகள் தடைப்பட்டன. விழிகள் தடையறாமல் பொழியத் தொடங்கின; விரிந்து பரந்த ஸ்வாமிஜியின் முகமண்டலத்தில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. மின்னல் கூட்டமொன்று இடம் பெயர்வது போல ஸ்வாமிஜி தமது அறைக்கு ஓடினார்.

குருபாயிக்கள் விக்கித்துப் போனார்கள்; வேதனைப்பட்டார்கள்; வெட்கியும் போயினர். சில நிமிஷங்களுக்குப் பின் அவர்களில் சிலர் ஸ்வாமிஜியின் அறைக்குத் தயக்கத்துடன் சென்றனர்.

சாந்தியே ஓர் உருவமெடுத்து வந்து தவம் புரிவது போல் ஸ்வாமிஜி அங்கு தியான நிலையில் அமர்ந்திருந்தார். ஓர் ஆட்டம் ஓர் அசைவு கிடையாது. பாதி திறந்திருந்த நயனங்களிலிருந்து மட்டும் நீர் வழிந்து கொண்டிருந்தது. ஆனால் அதுவும் துக்கத்தில் அதிர்ந்து குபு குபு என்று பெருக வில்லை. அமைதியாக, ஒரு சீராகவே சுருதியுடன் இழைந்த சங்கீதக் கார்வையாக வழிந்து கொண்டிருந்தது.

இப்படியே ஒரு மணிக் காலம் பரப் பிரம்மத்தின் கருணைக் கருப்பஞ் சாற்றில் ஆழ்ந்திருந்தார் ஸ்வாமிஜி.

சட்டென்று சமாதி கலைந்தது. சுறுசுறுப்புடன் எழுந்திருந்து சென்று முகத்தைக் கழுவிக் கொண்டார். நண்பர்களைப் பேரன்புடன் மிருதுவாகப் பார்த்தார். தேறுதல் அருளியாகப் பேசத் தொடங்கினார்.

''ஒருவனுக்கு உண்மையான பக்தி உண்டாகும் போது அவனது இதயமும் நரம்புகளும் பஞ்சாக நைந்து விடுகின்றன. ஒரு புஷ்பத்தின் ஸ்பரிசத்தைக் கூட அப்போது தாங்க முடியாமல் போகிறது. இப்போதெல்லாம் என்னால் கதைப் புத்தகங்கள் கூடப் படிக்க முடிய வில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? உணர்ச்சி வசப்படாமல் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றி எண்ணவோ பேசவோ என்னால் இப்போது இயல வில்லை. என்னில் பக்தி ஊறுவதை அடக்கிவைக்க நான் முயன்று முயன்று பார்க்கிறேன். ஞானத்தினால் என்னைக் கட்டி வைத்துக்கொள்ள முயல்கிறேன். ஏனென்றால் என்னால் தாய் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய பணி இன்னும் பூர்த்தியாகவில்லை; நான் உலகுக்கு அளிக்க வேண்டிய உபதேசம் பூரணமாக வில்லை....ஆமாம், நான் இன்னும் வேலை செய்தாக வேண்டியிருக்கிறது! நான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அடிமை. அவர் தமது பணியை நான் செய்ய

வேண்டும் என்று எனக்காக விட்டுக் கொடுத் திருக்கிறார்! அதை நான் செய்து முடிக்குமள வும் அவர் எனக்கு ஓய்வு தரமாட்டார்! அவரைப் பற்றி நான் எப்படிப் பேச முடியும்? ஆஹா, அவர் என் மேல் வைத்திருந்த அன்பு ?........''

'எனக்கு ராமகிருஷ்ணரைப் பற்றிக் கவலை யில்லை' என்று சற்று முன் உணர்ச்சிவாய்ப் பட்டுக் கூறிய அதே ஸ்வாமிஜிதான் இப் போது தமது இதய அந்தரங்கத்தைத் திறந்து விட்டார்.

மழை பெய்த பின் தூசி தும்புகள் எல்லாம் பூமியில் படிந்து சூரிய ஒளி ஸ்வச்சமாக வீசு வது போல் ஸ்வாமிஜியின் உணர்ச்சிப் பொழி வில் குருபாயிக்களின் சம்சயங்கள் எல்லாம் விலகி அன்பொளி மட்டும் பிரகாசித்தது.

இச்சம்பவம் நிகழ்ந்து சிறிதே காலத்துக்குப் பிறகு குருபாயிக்கள் அற்புதமான முறையில் சமூகப் பணியில் ஈடுபட்டனர். இதற்குச் சான்று கூறி ஸ்வாமிஜி மேரிஹேலுக்கு எழுதிய கடிதத்தில், ''என்னுடைய வேலை முடிந்து விட்டது. மிகவும் அதிகமானால் என் வாழ்வில் இன்னும் மூன்று நான்கு வருஷங்களே மீதி. என்னுடைய கருவி நிறமாக இயங்குகிறது என்பதை நான் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் குலத்தின் — அல்லது குறைந்தபட்சம் இந்திய மக்களின் — நன்மைக் காகவேனும் ஒரு நெம்புகோலை நான் செயல் படுத்தி விட்டேன். அதனை எந்தச் சக்தியும் தடுத்து நிறுத்த முடியாது என்று நிச்சயம் பெற்றவுடன், நான் துயிலச் செல்வேன்.''

நிரந்தரமாகத் துயிலவா? அல்ல. குற்றம் உள்ளவரையில் போலீஸும் உண்டு என்று பரமஹம்ஸர் சொல்லியிருக்கிறாரே! அதே கருத்தை விழுமிய உணர்ச்சியோடு ஸ்வாமிஜி விரித்துரைக்கிறார்.

''நான் மீண்டும் மீண்டும் பிறப்பேனாக! ஆயிரமாயிரம் இன்னல்களை அநுபவிப்பேனாக! உண்மையில் இருக்கும் ஒரே கடவுளை, நான் நம்புகிற ஒரே கடவுளை, எல்லா ஜீவர்களின் கூட்டுத் தொகையுமான கடவுளை வழிபடுவ தற்காக நான் மீண்டும் மீண்டும் பிறந்து ஆயிரமாயிரம் இன்னல்களை அநுபவிப்பேனாக' தீயோனான என் கடவுளை, துக்க முற்ற என் கடவுளை, உலகெல்லாம் ஏழைகளாக நிற்கும் என் கடவுளை—அவனை வழிபட நான் திரும்பத் திரும்ப ஜனனமெடுப்பேனாக!''

கடும் உழைப்பு காரணமாக ஸ்வாமிஜியின் உடல் நலம் குன்றத் தொடங்கியது. சிறிது காலம் டார்ஜீலிங்கில் தங்கி விட்டுக் கல்கத்தா வுக்கு மீண்டும் வந்து சேர்ந்தார். இளைஞர் பலர் மடத்தில் சேர ஆர்வமாக வந்தனர். ஸ்வாமிஜி மடத்திலிருந்து பிரிந்திருந்த பத் தாண்டுகளில் அங்கு வந்து சேர்ந்திருந்த நாலு இளைஞர்கள் — இது வரை பிரம்மசாரி களாக இருந்து வந்தவர்கள் — இப்போது சந்நியாசம் பெற விரும்பினர். அந்த நால்வ ரில் ஒருவர் பூர்வத்தில் நடத்தை தவறி விட்டதாகக் கூறி, அவருக்குத் துறவளிப்பதை மற்ற குருபாயிகள் ஆட்சேபித்தனர்.

ஸ்வாமிஜி பொங்கி எழுந்தார். ''இது என்ன பிதற்றல்! நாமே பாபிகளிடமிருந்து விலகினால் அவர்களை யார்தான் காப்பார்? நம்மை வந்தடைந்த ஒருவரை நாம் அவ்வளவு பெரும் இருத்த முடியாது என்றால் நாம் காஷாயம் தரித்து உலக சேவை என்று புறப் படுவதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டார்.

ஸ்வாமிஜி தமது சிஷ்யர்களைத் தேர்ந் தெடுப்பதில் போதிய கண்டிப்பு காட்டுவ தில்லை என குருபாயிக்கள் பல முறை நினைத்த துண்டு. ஒரு சமயம் ஸ்வாமிஜி 'குபு குபு' என்று ரத்தம் பாயும் திருமுகத்துடன் அவர் களிடம் சொன்னார்: ''எனக்கா மனித இயல்புகளை மதிப்பிடத் தெரியவில்லை என்று நினைக்கிறீர்கள்? இப்போது மக்கள் என்னவா யிருக்கிறார்கள் என்பதோடு முற்பிறவிகளில் அவர்கள் என்னவாயிருந்தார்கள் என்பதை யும் நான் அறிவேன்; இனி மேல் அவர்கள் என்னவாகப் போகிறார்கள் என்பதும் எனக் குத் தெரியும். இந்தத் துர்ப்பாக்கிய ஜீவன்கள் எத்தனையோ கதவுகளை இடித்திருக்கிறார்கள். அந்தக் கதவுகள் ஏதும் அவர்களுக்காகத் திறக்கப்படவில்லை. அவர்கள் விரட்டியடிக்கப்

பட்டார்கள். இப்போது அவர்கள் என்னை நம்பி வந்திருக்கிறார்கள். நானும் அவர்களை ஏற்க மறுத்தால் அவர்களுக்குப் புகலிடம் ஏது?'' என்றார்.

'களிம்பு தோய் செம்பினை' இயல்புகளையும் 'பத்து மாற்றுத் தங்கமாக்கியே பணி கொள்ள' அறிந்திருந்தார் ஆத்மிக ரஸவாதியான ஸ்வாமிஜி.

இளைஞர்களுக்குத் துறவு அளிப்பதற்கு முதல் நாள் ஸ்வாமிஜி தியாகத்தின் மாண்புகளைப் பற்றி விரித்துக் கூறினார். ''பிறரின் பொருட்டு சுய வாழ்வைத் தியாகம் புரிவதற்காக, ஆகாயத்தைக் கதறலால் பிளக்கும் ஆயிரமாயிரம் ஜீவர்களின் துயரத்தைத்தீர்ப்பதற்காக, கைம் பெண்ணின் கண்ணீரைத் துடைப்பதற்காக, மகனை இழந்த தாயின் இதயத்துக்கு ஆறுதல் அளிப்பதற்காக, அறியாதவர்களும் அடிமைப்பட்டவர்களும் வாழ்க்கைப் போராட்டத்தில் சுய பலத்தில் நிற்க உதவுவதற்காக, எவ்வித வேறுபாடும் பாராமல் சாஸ்திர உபதேசங்களைச் சகலருக்கும் பரப்புவதற்காக, மக்களின் லௌகிக—ஆத்மிக நலன்களுக்குப் பாடுபடுவதற்காக, ஞான தீபத்தின் ஒளியைப் பரப்பி எல்லா இதயங்களிலும் உறங்கும் பரம் பொருள் என்ற சிம்மத்தை எழுப்புவதற்காக — இவை யெல்லாவற்றையும் செய்யவே சந்நியாசியானவன் உலகில் பிறக்கிறான்'' என்றார்.

''எனக்கு இவ்வளவு நாள் நாடு சூட்டிய பாராட்டை விட இந்த நாலு பேர் துறவு கொண்டதையே பெரிதாகக் கருதுகிறேன்'' என்றார் ஸ்வாமிஜி. துறவிகள் சங்கத்தை ஸ்திரமாக ஸ்தாபிக்கவும் உறுதி பூண்டார்.

அந்த உறுதி செயலான தினமே 1897ம் ஆண்டு மே மாதம் முதல் தேதி. தர்மப் பயிருக்கு வித்தூன்றிய நாள் அது. அன்று ராமகிருஷ்ண பக்தர் யாவரும் பலராம் பாபுவின் இல்லத்தில் ஒன்று சேர்ந்தனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம் என்ற பண்புப் பண்ணை அன்றே பிறந்தது. ஆதி சங்கரரின் ஜீவிய சரிதத்தில் மட ஸ்தாபனத்துக்கு எவ்வளவு முக்கியத்துவமுண்டோ அதேபோல், ஸ்வாமி விவேகாநந்தர் வாழ்விலும் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்க—மட ஸ்தாபனம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கண்ணாலும் கண்டிராத வரப்போகிற தலைமுறைகளிடம் கருணை கொண்டு அவர்களுக்காக ஒரு நிறுவனம் அமைப்பதை விடப் பெரிய தொண்டும் உண்டா?

ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் காரியக்கிரமங்கள் எல்லோராலும் விவாதிக்கப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேறின. சமயப் பணியிலேயே மக்களின் கல்வி, உடல்நலம் முதலியவற்றையும் இணைத்து சமூக சேவைகளையும் பிணைத்துத் தருவதே சங்கத்தின் தனிப்பெருமையாயிற்று.

ஸ்வாமிஜி சங்கத்தின் பொதுத் தலைவரானார். எனினும் அவர் பெயரளவிலேயே தலைமை செலுத்த எண்ணியதால் ஸ்வாமிஜி பிரம்மாநந்தரைத் தலைவராக்கினார். பணியே உருவான ராகாலாக இருந்து ராமகிருஷ்ணரால் புத்திரராக மதிக்கப்பட்ட பிரம்மாநந்தரைவிட ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் முதல் தலைவராக இருக்க வேறு யாருக்குத் தகுதி உண்டு?



''ஏன் சார்! அந்த மனுஷன் ஏகமாகப் பணத்தைச் சாப்பிட்டு விட்டாராமே!''

''வேறு என்ன சார் பண்றது! பண்டங்கள் விற்கிற விலையில் வேறு எதை யேனும் சாப்பிடும்படியாவா இருக்கு?''

ஆரம்பத்தில் சமூக நலத் திட்டங்கள், வேதாந்தப் பிரசாரம் இரண்டையுமே சங்கம் கவனித்து வந்தது. காலக்கிரமத்தில், ஆத்மிகப் பணி சமூக நலப் பணி இவை ஒவ்வொன்றும் மிகவும் விரிவு பெற்றதால் 1909-ம் ஆண்டில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம் என்றும் இரண்டு பிரிவுகள் தோன்றின. இரண்டும் தனித்தனி உறுப்புக்கள் எனினும் இரண்டின் நிர்வாகக் குழுவும் ஒன்றேதான். ஆத்மிகத்தையும், சமூகத்தையும் தனித் தனியாகப் பிரித்துவிடக் கூடாது என்பதுதானே குருநாதனின் ஆக்ஞை?

இப்படித் தமது வாழ்வில் முக்கியம் பொருந்தியதொரு ஸ்தாபனத்தை நிறுவிய ஸ்வாமிஜி தாமே அதன் தலைவராக இருந்து அதிகாரம் செலுத்தாததுதான் அதிசயம். மகான்களுக்குத்தான் அப்படிச் சமயம் பார்த்து விலகத் தெரியும்!

ஸ்வாமிஜி எப்படித் தலைவருக்கு அடங்கிய அங்கத்தினராக நடந்து கொண்டார் என்பதைக் கூறும் ஒரு நெஞ்சுருக்கும் நிகழ்ச்சியுண்டு.

அமெரிக்காவில் ஸ்வாமிஜி திரட்டியிருந்த அவ்வளவு நிதியத்தையும் அவர் ஸ்வாமி பிரம்மாநந்தரிடம் ஒப்படைத்தார்.

சில நிமிஷங்கள் கழித்து ஸ்வாமிஜி கல்கத்தாப் பட்டணத்துக்குப் போக வேண்டியிருந்தது. சிஷ்யரொருவரை அழைத்து ஸ்வாமிஜி. ''கங்கையைப் படகில் கடக்க வேண்டியிருக்கிறதே. பிரம்மாநந்தரிடம் போய்ச் சில்லறை வாங்கிக் கொண்டு வா; அதற்கும் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்'' என்றார்.

சந்நியாசம் என்பது அதுதான்! (தொடரும்)



பொறுப்பு

— லக்ஷ்மி சுப்பிரமணியம் —

அன்று வேலை முடியும்போது மணி ஆறு ஆகி விட்டது. காரியாலயத்தில் பெரும்பாலோர் போய் விட்டார்கள். பணத்தை எண்ணிக் கணக்குகளை முடித்துக் கொண்டிருந்த காஷியர் மறு நாள் காலையில் கையெழுத்தாக வேண்டிய நகல்களை டைப் செய்து கொண்டிருந்த 'டைப்பிஸ்ட்', இரவு ஷிப்டுக்காக வந்திருந்த கூர்க்கா, இப்படிச் சிலரே தென்பட்டார்கள்; அங்கங்கே தெளித்ததைப் போல.

ரகுநாதன் அறையின் ஜன்னல் கதவைத் திறந்து விட்டான். கடற்காற்று குளிர்ந்து வீசிற்று. கீழே சாலையில் பொம்மை வண்டிகளாக ஓடிக் கொண்டிருந்த பஸ், கார்களின் வரிசை. பச்சையும் சிவப்புமாக மினுக்கிய சந்திப்பு விளக்குகள். கடகடவென்று ஓடி மறையும் மின் வண்டி. எதிரே மணிக் கூண்டில் கடிகார முள் தெறித்தாற் போல் நகர்ந்து கொண்டிருந்தது.

போன் மணி அடித்தது. யாராவது நண்பர்களாக இருக்கும், அல்லது அவன் மனைவி சரோஜாவாக இருக்கும். காரியாலயத்து வேலை நேரம் முடிந்து விட்டது. அலுவலாக யாரும் போன் செய்ய நியாயமில்லை.

"ஹலோ, யார் பேசுகிறது? நீதானு சரோ? என்ன வேண்டும்?"

"நீங்கள் இன்னும் கிளம்ப வில்லையா? அப்போது இன்றைக்கு லேட், நிச்சயமாக. வருகிற போது ராமுவுக்குக் கிரைப்வாட்டர் பாட்டில் ஒன்று வாங்கிக் கொண்டுவாருங்கள். பால் பவுடர்கூட ஆகிவிட்டது..... ஒரு பவுண்டு டின்தான்..... கிடைத்தால் வாங்கி வாருங்கள். அப்புறம்......ஜயத்துக்கு ஏதோ ஸ்டாம்பு கொண்டு வருகிறேன் என்று சொன்னீர்களாமே. ஒரு கணக்கு நோட்டுப் புத்தகமும் வேண்டும் என்கிறாள்......"

"லிஸ்டில் இன்னும் என்ன பாக்கி சரோ?" என்றான் ரகு எரிச்சலை அடக்கிக் கொண்டு.

"கொஞ்சம் இருங்கள். இங்கேதான் குறித்து வைத்திருக்கிறேன்...... அவ்வளவு தான்...... இல்லை......ஒரு பவுண்டு காப்பி பவுடர்...... அவ்வளவுதான்."

"நான்தான் மூன்று மணிக்கு வீட்டுக்கு ஆள் அனுப்பி வைத்தேனே? என்ன செய்தாயாம்? அவனிடம் இதையெல்லாம் வாங்கிக் கொண்டு வரச் சொல்லி யிருக்கக் கூடாது? எத்தனை தடவை சொல்லி இருக்கிறேன்? 'ஒரு காகிதத்தில் குறித்துச் சுவரில் ஓர் அட்டையில் 'குத்தித் தொங்க விட்டு வை; ஆள் வருகிற போது வாங்கிக் கொண்டு வரச் சொல்லு என்று! எவ்வளவு சொன்னாலும் —"

"தப்புத்தான் விடுங்கள். இதெல்லாம் அவன் வந்து போன பிறகுதான் தெரிந்தது. நானே சாயங்காலம் போய் வாங்கிக் கொண்டு வந்திருப்பேன். இன்றைக்கு வேலைக்காரி வரவில்லை. காரியம் சரியாக இருந்தது. வரும் போது நீங்கள் மறக்காமல்—"

"சரி. சரி. வேறு ஒன்றும் இல்லையே?" என்று அலுத்துக் கொண்டான் ரகு.

"கொஞ்சம் இருங்கள். ஜயம் உங்களுடன் போனில் பேச வேண்டுமாம். இதோ பேசேன், ஜயம். சீக்கிரம் — அப்பாவுக்கு வேலை இருக்கிறது....."

"அப்பாவ்" என்று குழந்தைக் குரல் கேட்டது.

"என்னம்மா, என்ன வேணும்?"

"கணக்கு நோட்டுக். அப்புறம் ஸ்டாம்ப்."

"ஸ்டாம்பா?"

"ஆமாம். ஆபீஸிலே பழைய கவரிலிருந்து கொண்டு வரேன் என்று சொன்னியே!"

"நாளைக்கு. இன்றைக்கு நேரம் ஆகி விட்டது."

"இன்னிக்குப்பா..... இன்னிக்குக் கொஞ்சம்..... நாளைக்கு நிறைய."

"சரி, சரி. பார்க்கிறேன். இன்றைக்கு எத்தனை அடி வாங்கினாய்?"

"ரெண்டு."

"என்ன விஷமம் பண்ணினாய்?"

"சோப்புத் துண்டைத் தொட்டிக்குள்ளே போட்டுட்டேன்."

"அப்புறம்?"

"அப்புறம் ஒன்றும் இல்லை. அதுக்கேதான் ரெண்டு."

"ஹஹ்ஹா!.... ராமு என்ன பண்ணுகிறான்?"

அவன் கேட்டு முடிக்குமுன் அவன் மனைவி உரத்த குரலில் குழந்தையைக் கூப்பிடுவது கேட்டது. அவள் இவ்வளவு தூரம் பொறுமை இல்லாமல் இருக்க வேண்டாம். என்ன ஆயிற்று அப்படி?

""ஜயம் பேசினது போதும்...... போனைக் கீழே வை. அப்பாவைத் தொந்தரவு பண்ணாதே...... உங்களைத்தான்.... அவ்வளவு தான்—""

""என்ன ஆயிற்று அங்கே?""


""ஒன்று மில்லை. ராமு மேஜை மேல் ஏறி ரேடியோவைத் திருப்பி விட்டு விட்டான். வரவர விஷமம் தாங்க முடியவில்லை!""

""சரி, சரி..... நான் வரக் கொஞ்ச நேரம் ஆகும்...... நீங்கள் சாப்பிட்டு விடுங்கள்.""

மேலே பேச்சுக்குக் காத்திருக்காமல் ரகு போனைக் கீழே வைத்துவிட்டான். 'டங்' என்று மணி ஒலித்து அடங்கியதும் அந்த அமைதி சூழ்ந்த அறையில் ஒலி அலைகள் எழுந்து பரவின ஓரிரு நிமிஷங்களுக்கு. அவன் மனத்திலும் ஓர் உளைச்சல். மின் விசிறியைப் போட்டு விட்டு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். படிகளில் காஷியரும் டைபிஸ்டும் பேசிக் கொண்டே இறங்கிப் போகும் சத்தம் கேட்டது. ஆபீஸ் காலி. அவன் மட்டும் தனியாக உட்கார்ந்துகொண்டிருந்தான். எதற்காக? என்ன செய்யப் போகிறான் அப்போது?

வேலை எதுவும் இல்லை; அவ்வளவு நேரத்துக்கு மேல் செய்ய. கருத்தும் பதியாது அந்த நேரத்தில்; எந்த வேலையிலும். பக்கத்தில் இருந்த கடிகாரம்; மின் விசையில் இயங்கிய முள்; மினுக்கிய படி நகர்ந்து கொண்டிருந்தது. நேரம் மட்டுமல்ல; காலமும் எவ்வளவு விரைவில் ஓடி விட்டது? அவன் படித்துப் பட்டம் பெற்று, அங்கே வேலைக்கு வந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இரண்டு பதவி உயர்வு. இப்போது தான் புதிதாக வேலை கற்றுக் கொண்டது போல் இருக்கிறது!

அந்தக் கிளை அலுவலகத்தில் மானேஜருக்கு அடுத்த பதவி அவனுடையது அப்போது. யாரையும் இணக்க வைத்து விடும் மென்மையான பேச்சு, கனிந்த சுபாவம், புன்னகை மறையாத முகம், கண்டிப்புத்தெரியாமல் தட்டிக் கொடுத்து வேலை வாங்கும் திறமை, எதையும் நிலையிலிருந்தே சட்டென்று சொல்லிவிடக் கூடிய ஞாபகசக்தி—எல்லாம் அவனைப் படிப்படியாக முன்னேற வழி காட்டின. பாராட்டு மட்டும் இல்லாமல் பதவி உயர்வும், சம்பளக் கூடுதலும், அவனுக்கு ஊக்கம் தந்து வேலையில் சுவாரசியத்தைத் தூண்டி நின்றன. வீட்டில்தான் அவனுக்கு அந்த உற்சாகம் இல்லை. சரோஜா அவனுக்கு



மணமாகுமுன் தெரிந்த பெண் அல்ல. உறவினர்கள் அல்ல அவனுடைய பெற்றோர்கள். அவன் திருமணம், ஏதோ ஒரு சந்திப்பில், பழக்கத்தில், உணர்ச்சிகளின் கனிவில் விளைந்ததும் அல்ல. அவனுடைய பெற்றோர்கள் தேர்ந்தெடுத்த பெண்தான் அவன் மனைவி. அவனுக்கும் குறை சொல்ல ஒன்றும் இல்லை. கல்லூரிப் படிப்பு; எடுப்பான தோற்றம்; சாதுரியமான பேச்சு: சரளமாகப் பழகும் சுபாவம்: வீட்டு வேலைகளைச் சீராகக் கவனித்துக் கொள்ளும் திறமை.

வேறு என்ன வேண்டும்? அவன் வேறு என்ன விரும்பி இருக்க முடியும்?

அவனுக்குச் சங்கீதத்தில் ஒரு பிரமை. படிக்கும் போதே விடுமுறை நாட்களின் மாலை வேலைகளில் கச்சேரிக்குப் போய் விடுவான். நுணுக்கங்களை, நுட்பமான நிரவல்களை நயமான திருப்பங்களை அனுபவித்துக் கேட்டு நெகிழ்ந்து உட்கார்ந்திருப்பான். அந்த அனுபவம் வீட்டிலும் கிடைத்திருந்தால் அவனுக்குத் திருப்தியாக இருந்திருக்கக் கூடும். ஆனால் சரோஜாவுக்குப் பாடத் தெரியாது. அதை அறிந்தபோது அவனுக்குச் சற்று ஏமாற்றந்தான்.

பழகப் பழக மெருகு அழிந்து விடுவதைப் போல, அவள் மென்மையான சுபாவமும்கூட வர வரக் கடினமாகி விட்டது. இரண்டு குழந்தைகள் ஆகி விட்டன. ஒரு குறைப் பிரசவம் வேறு. வெட வெட வென்று இருந்த உடல் தளர்ந்து இலேசான பருமன் கண்டு விட்டதைப் போல, அமைதியும் கனிவும் நிறைந்த பேச்சிலும் கடுமை புகுந்துகொண்டு விட்டது. கத்தியால் வழித்து விட்டதைப் போல, அமைதியும் கனிவும் நிறைந்த பேச்சிலும் கடுமை புகுந்து கொண்டு விட்டது.

அவன் உணர்ச்சிகளை அவன் சொல்லாமலே புரிந்து கொண்டு விடுவாள் சரோ. அவற்றை எதிர்பார்த்து அவள் பழகும் விதம், ஒதுங்கிக் கொள்ளும் இங்கிதம், அவன் தணிந்த பிறகு அவனை மெதுவாக விசாரிக்கும் சாமர்த்தியம், இவைகளை அவன் தனியே வியந்து பாராட்டுவதுண்டு. சில சமயம் அவன் ருசிகளைக்கூட அனுமானித்து அவள் சமையலில் காட்டும் அக்கறை, அன்று அவன் எதை விரும்பக்கூடும் என்று தெரிந்து கொண்டதைப் போன்ற ஏற்பாடுகள், அவனை மனத்துக்குள் மெச்சிக் கொள்ளச் செய்யும்.

ஆனால் அந்தச் சரோ இல்லை. அவள் இப்போதெல்லாம் எத்தனையோ தடவைகள் அவனுக்கு அலுத்து வரும் போது அவளும் இங்கிதம் தெரியாமல் நடந்து கொண்டு அவனுக்கு எரிச்சலை மூட்டி இருக்கிறாள். அவன் அமைதியை நாடும் போது குழந்தைகளிடம் 'சள்' என்று விழுந்து, அடித்து, அவர்கள் கூச்சலில் அவன் பொறுமை இழந்துபோகும்படி செய்திருக்கிறாள். குழந்தைகளிடம் பொறுமை இழந்து அவள் கூச்சல் போடும் போது 'இந்தக் குரலின் மென்மையிலா நான் மயங்கினேன்?' என்று அவன் நினைப்பதுண்டு. சில சமயம் அவன் பேசுவதைப் புரிந்து கொள்ளாமல் பிடிவாதமாகத் தன் கட்சியையே அவள் பேசும் போது 'முன்பெல்லாம் இவள் என்னை உணர்ந்து கொண்ட விதம்! அந்த நளினம் எங்கே மறைந்து போயிற்று இப்போது?'—என்று எண்ணிக் கொள்வான். இரவு சாப்பாட்டுக்குப்பின் கச்சேரியை அனுபவிக்க அவன் ரேடியோவின் முன் உட்காரும் போது அவள் சட்டென்று வந்து, 'நாளைக்கு ஜயத்துக்குப் பரீட்சை. நான் ஒரு மணி நேரமாவது பாடம் சொல்லிக் கொடுத்தாக வேண்டும். அப்புறம் எனக்கு ஒழியாது' என்று அப்போதுதான் திறந்த ரேடியோவைப் பட்டென்று மூடிவிடுவாள்.

வீட்டு வேலை அதிகமாகி விட்டது. அவனுக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் அவைகளைச் சமாளிக்கும் திறமை அவளுக்கு இருக்குமென்று அவன் நம்பினான். எத்தனையோ வீடுகளில் பெண்கள் வேலைக்குப் போய்க் கொண்டு, வீட்டு வேலைகளையும் பொறுமையாகச் செய்வதை அவன் பார்த்திருக்கிறான். சில குடும்பங்களில் தாய்க்கும் குழந்தைகளுக்கும் இருந்த கனிவான உறவை, குழந்தைகளை அவர்கள் வளர்க்கும் அருமையை, கணவனும் மனைவியும் பகிர்ந்து அனுபவிக்கும் முரணில்லாத உணர்ச்சிகளை, அவன் காண்பதுண்டு. அப்போதெல்லாம் அவன் மனத்தில் தன்னையறியாமல் ஒரு பொறாமை உணர்ச்சி எழும். எதையோ இழந்து நிற்பதைப் போன்ற சூனியம் மனத்தைச் சூழ்ந்து கொள்ளும்.

ஒரு தடவை அவளுடைய தகப்பனார் ஊரிலிருந்து அவளைப் பார்க்க வந்திருந்தார். திரும்பிப் போகும் போது ஜயத்தையும் அழைத்துக் கொண்டு போனார். ஜயத்துக்குப் பதினைந்து நாட்கள் பள்ளிக்கூடத்தில் விடுமுறை. அதனால் அவள் தடுக்கவில்லை: டாக்ஸியில் அவள் உட்கார்ந்து கொண்டதும் ஸரோ அவளைப் பார்த்துச் சொன்னாள்.

"ஊரில் படுத்தாமல் சமர்த்தாக இருக்கணும். என் அப்பாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்."

"ஆகட்டும். நீயும் என் அப்பாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்!" என்று குறும்பாகப் பதில் சொன்னாள் ஜயம். குழந்தை சொன்னதே ஆனாலும் எவ்வளவு உண்மையான வார்த்தை அது என்று அவனால் நினைத்துக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

மணி ஏழு அடித்தது. அவன் எழுந்திருந்தான். கைப் பையின் கிளிப்புகளைப் போட ஆரம்பித்தான். அதற்காகவே காத்துக் கொண்டிருந்தவனைப் போலக் கூர்க்கா கதவைத் திறந்து வழி விட்டான். அவன் வெளியே வந்ததும் விளக்கை அணைத்து, மின் விசிறியை நிறுத்தி விட்டு, அவன் கைப்பையை வாங்கிக் கொண்டு படிகளில் இறங்கிப் பின் நடந்தான். வாசலுக்கு வந்ததும் பையைக் கொடுத்து விட்டு ஒரு 'ஸல்யூட்' அடித்து நின்று கொண்டான்.

பஸ்ஸுக்கு 'க்யூ' காத்துக் கொண்டிருந்தது. நடை பாதை நிறையச் சில்லறைக் கடைகள். பிளாஸ்டிக் சாமான்கள். சேப்டி பின், கத்திரிக்கோல், ரிப்பன் வியாபாரம். துண்டுத் துணிக் குவியல்கள். பழைய புத்தகக் கடை. இன்னும் என்னென்னவோ!

கொஞ்ச தூரம் நடந்து ஷாப்பிற்குள் ஏறினான். போனில் கேட்டதைச் சரியாக நினைவில் வைத்துக் கொள்ள வில்லை; குறித்துக் கொள்ளவும் இல்லை. சரோ அவைகளைக் குறித்து வைத்துக் கொள்வதில்லை என்று சொன்ன நினைவு வந்தது. தனக்குள்ளேயே சிரித்து மழுப்பிக் கொண்டான். நினைவுக்கு வந்தவைகளை வாங்கிக் கொண்டு, தனக்கு வேண்டியிருந்த இரண்டொரு பொருள்களையும் வாங்கிக் கொண்டபோது, கையில் ஒரு சிறு மூட்டையே சேர்ந்து விட்டது.

''இப்போதுதான் போகிறீர்களா ஸார்?'' அவன் குரல் கேட்டுத் திரும்பினான். ஆபீஸ் ஸ்டெனோ உமா நின்று கொண்டிருந்தாள். அவள் கையிலும் சிறிதும் பெரிதுமாய்ப் பொட்டலங்கள்.

''ஆமாம். நீங்களும் இன்னும் போகவில்லையா ?''

''இல்லே. கொஞ்சம் சாமான்கள் வாங்க வேண்டியிருந்தது. வழியில் என் கூடப் படித்த தோழி ஒருத்தியைப் பார்த்தேன். பேசிக் கொண்டிருந்து விட்டேன்.'' இன்று வீடு திரும்ப நேரமாகி விடும். அம்மா நிச்சயம் கவலைப்படப் போகிறாள்.

''நீங்கள் நுங்கம்பாக்கம் போக வேண்டும் இல்லையா? வாருங்கள், ஒரு டாக்ஸியில் போய் விடலாம். உங்களை இறக்கி விட்டு நான் அப்படியே கோடம்பாக்கம் போய்விடுவேன்.''

''எதற்கு ஸார்?''

''இருக்கட்டும். கைநிறையச் சாமான்கள் வேறு. நானே டாக்ஸியில் போவதாகத்தான் இருந்தேன்'' என்று கூறியவன் அந்தப் பக்கம் வந்த டாக்ஸியைக் கையைநீட்டி நிறுத்தினான். இருவரும் ஏறிக் கொண்டதும் டாக்ஸி கிளம்பிற்று.

''என்னென்ன வாங்கினீர்கள்?''

''குழந்தைகளுக்கு வேண்டியவை. அவருக்கு வேண்டியதும்தான். சொன்னாலும் வாங்கிக் கொண்டு வர அவருக்கு நினைவிருப்ப தில்லை'' என்று சிரித்துக் கொண்டாள்.

அவனுக்கு வியப்பாக இருந்தது. ஏறக்குறைய சரோவின் வயதுதான் இருக்கும் உமாவுக்கு. அவர்களைப் போலவே அவளுக்கும் ஒரு குடும்பம். வீட்டுக் காரியங்களைக் கவனித்துக் கொள்ளத் தாயார் உடனிருந்தாலும், பொறுப்புக்களை அவளே எப்படியோ ஏற்றுக் கொள்கிறாள். காரியாலயத்து வேலையையும் பார்த்துக் கொள்கிறாள். முகம் சுளிக்காமல், பதற்றம் இல்லாமல், அமைதியாக எப்படித் தன்னா முடிகிறது இந்தப் பெண்ணால்? ஒருகணம் சரோவையும் மனத்தில் நினைத்து— உமாவோடு அவளையும் எடை போடாமல் இருக்க முடியவில்லை அவனால்.

''நீங்களே எப்படியோ எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளுகிறீர்கள் போலிருக்கிறது'' என்றான்.

''அப்படி இல்லே. இது ஓர் அவசியமாகி விட்டது. என் பங்கை நான் செய்தாக வேண்டியிருக்கிறது'' என்று அவள் சிரித்துக் கொண்டாள். கொஞ்சம் பெருமை தெரிந்தது பார்வையில்.

''வேலைக்கு வந்து போக வேண்டிய அவசியத்தைச் சொல்கிறீர்களா?''


''அதுவுந்தான் — ஆனால் ஒரு விதத்தில் அதுதான் எனக்கு ஒரு மாறுதல்.''

''என்ன? எப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று நிமிர்ந்தான்.

''ஆமாம். மணமாவதற்கு முன் நான் வேலையில்தான் இருந்தேன். மணமானதும் வேலையை விட்டு விட்டேன். குடும்பப் பொறுப்புகள் எப்படியெல்லாம் இருக்குமோ என்று...... இரண்டு குழந்தைகள் ஆயிற்று. காலையிலிருந்து இரவு படுக்கப் போகும் வரை ஓயாமல் ஒழியாமல் இயந்திரம் போல வேலை செய்தாலும் எல்லாவற்றையும் திருப்தியாக முடிக்க முடிவதில்லை. ஏதோ ஒன்று விட்டுப் போய் விடும். அல்லது அவர் வந்து 'இதை ஏன் இப்படிச் செய்தாய்?' என்று கேட்கிற மாதிரி ஆகி விடும். குழந்தைகளும் சீக்கிரத்தில் ஒத்துப் போவதில்லை. அவர் திரும்பி வந்ததும் எனக்கு அவரிடமிருந்து என்ன பேச்சு வரக் காத்திருக்கிறதோ என்று தோன்றும்.''

மனத்துள் இலேசாக ஒரு விசித்திரம் எழுவது போல இருந்தது ரகுவுக்கு. அது வரை அவன் கண்டது உருவத்தின் ஒரு புறம். அப்போது அவன் காட்டிக் கொண்டு வருவது

அவருக்கு அகப்பட்டது!



அதன் மறுபுறம்? அவள் சிந்தனையைத் தூண்டுவது போல ஒரு பேச்சு:

''ஏன் அப்படி?'' என்று அவளைப் பேசத் தூண்டுவதைப் போலக் கேட்டான்.

''ஆமாம். நீங்களே சொல்லுங்கள்.— நீங்கள் எப்படியோ தெரியாது சார் — எத்தனை கணவர்கள் வீட்டுக்குப் போனதும் நாள் முழுவதும் மனைவி செய்திருக்கிற வேலைகளை மெச்சிப் பாராட்டி விடுகிறார்கள்? எதைச் செய்ய வில்லை என்றுதானே தேடிக் கண்டு பிடித்துக் குற்றம் சொல்கிறார்கள்? குழந்தைகளை நாள் முழுவதும் மனைவி கவனித்துக் கொள்வது தெரிவதில்லை. அவர்களுக்கு முன்பு ஒரு நிமிஷம் பொறுமை இழந்து விடுவதுதானே கண்ணில் பட்டு எரிந்து விழச் சொல்லுகிறது?''

எது நியாயம்? அவன் நினைத்துத் தனக்குள்ளே தேடிக் கொண்டிருந்ததா? அல்லது உமா அப்போது சொல்லிக் காட்டுவதா? யாருக்கு யோசித்துப் பார்க்கப் பொறுமை இல்லை? அவள் மேலே சொல்லிக் கொண்டு போனாள்.

''பெண்களும் படிக்கிறார்கள் ஆண்களைப் போல. ஆனால் நீங்கள் உங்கள் படிப்புக்கு ஏற்றபடி, உங்கள் பிரியத்துக்குத் தகுந்தபடி வேலையைத் தேடிக் கொள்கிறீர்கள். டாக்டராக, என்ஜினீயராக, மானேஜராக, எப்படியோ — ஆனால் பெண்கள் என்ன படித்துத் தான் என்ன ஸார்? கடைசியில் ஓர் உத்தியோகம்தானே அவர்களுக்குக் கிடைக்கிறது. வீட்டுப் பொறுப்பு எல்லாவற்றையும் சுமக்கிறோம். அதில் பதவி உயர்வு உண்டா? வேலையைச் செய்ததற்காக ஒரு பாராட்டு உண்டா? ஒரு சமயம் கடுமையாக இருந்தாலும் ஒரு சமயம் சம்பள உயர்வு கொடுத்துக் கொள்கிற அதிகாரியாக, கணவனிடம் எதிர் பார்க்க முடிகிறதா? எவ்வளவு சிரமப்பட்டாலும், சாமர்த்தியமாக நடந்து கொண்டாலும், 'இது உன் கடமை. நீ செய்து விட்டுப் போகிறாய்' என்று நினைத்து ஒதுக்கி விடுவதற்கு மேல் என்ன 'சபாஷ்' கிடைக்கிறது மனைவிகளுக்கு?''

ரகு வாய் விட்டுச் சிரித்தான். ''நீங்கள் இவ்வளவு தூரம் பேசுவீர்கள் என்று எனக்கு இது வரை தெரியாது. எழுத்தில்தான் உங்கள் வேகம் என்று நினைத்திருந்தேன்.''

பொங்கிய பாலில் நீர் தெளித்ததைப் போல அவள் சட்டென்று அடங்கினாள் ''ரொம்பப் பேசி விட்டேன். இல்லையா?'' என்று கேட்டுக் கொண்டு.

''அப்படி இல்லை, ரொம்பத் தெரிந்து கொண்டேன், உங்களிடம் இன்றைக்கு.''

''பார்த்தீர்களா? பரிகாசம் செய்கிறீர்கள். இருக்கட்டும் ஸார்!'' என்று அவள் இறங்கத் தயாரானாள். நுங்கம்பாக்கம் வந்து விட்டது. ''நேரமாகி விட்டது. அம்மா தவித்துக் கொண்டிருப்பாள்...... குழந்தைகள் தேடும். அவர் திரும்பி விட்டிருப்பார்'' என்று சொல்லிக் கொண்டாள். மனைவியின் பொறுப்பு, தன்னை உணரும் தவிப்பு, அவனுக்குத் தெரிந்தது அந்தக் கண நேர மாறுதலில்.

அவள் இறங்கிக் கொண்டாள்: டாக்ஸி நகர்ந்தது.

அவன் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். மனம் யோசனையில் ஆழ்ந்தது. தனக்குள் சரோவின் குரல் கேட்பதுபோல் இருந்தது: குழந்தைகளைப் பார்த்து அதட்டும், அவர்கள் விஷமத்தைக் கண்டிக்கும், பாடம் சொல்லிக் கொடுக்கும்போது சீறும், தொந்தரவு கொடுக்கும் போது நொந்து குமுறும் குரல், அவன் செவிகளில் மூன்பு விழுந்த இதயங்கள் பேசும் இனிய குரல்தான் அது. குரல் மாறவில்லை. பின் மாறியது எது?

இப்போதும் அவள் அவனிடம்தான் பேசுகிறாள். குழந்தைகளிடம் கூச்சல் போடவில்லை. அவனிடம் முறையிடும் குரல்தான் அது. ''என் பக்கம் திரும்புங்கள். என்னைக் கொஞ்சம் பார்த்து நான் சொல்வதையும் கொஞ்சம் காதில் போட்டுக் கொள்ளுங்கள்'' என்பதைப் போல. அதை அவனிடம் நயமாக மென்மையாகப் பகிர்ந்துகொள்ள வழி இல்லை. அவன் கவனத்தை அப்படி அவளால் திருப்ப முடியவில்லை. அதுவா உண்மை?

உமா தன் தாயிடம் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டு விட்டாள். வேலை முடிந்து வீட்டுக்குப் போனதும், மாறுதலுக்காகக் குழந்தைகளோடு விளையாடும் அவள் கணவனைப் போல அவளும் விளையாட முடியும்; அவர்களோடு இழுத்துப் பிடித்துக் கொண்டு நிற்கும் வேலையைத் தன் தாயிடம் விட்டு விட்டு. அவளால் அப்படிச் செய்ய முடிந்தது. சரோவினால்? அவனுடைய அனுதாபமும் அக்கறையும் அவளுக்கு உதவ முடியுமா? ஏன் முடியாது?

டாக்ஸி நின்றது. சில்லறையைக் கொடுத்து விட்டுச் சாமான்களோடு இறங்கினான். மாடி போர்ஷனில் விளக்கு எரிந்தது. ஸரோ விளக்கைப் போடுகிறாள். படி இறங்கி வருவாள்; அவனை எதிர்பார்த்து. அவன் கையிலிருந்து அந்தச் சாமான்களை வாங்கிக் கொள்வதற்கு; சுமையைப் பகிர்ந்துகொள்ள; ஏன்? எதையுமே.

குழந்தைகள் தூங்கி யிருப்பார்கள். நேரமாகி விட்டது. இனி தூங்கப் போகும் வரை அவர்களிடையேதான் பேச்சு. அவள் மட்டும் பேச வேண்டியதில்லை அன்று. அவனுக்கும் அவளிடம் பேச விஷயம் இருக்கிறது.

சரோ வாசலில் வந்து நின்றாள். அந்தப் பொட்டலங்களுக்காகக் கை நீட்டிக்கொண்டு.

''நீ சாப்பிட வில்லை?''

''நீ தூங்கி விடவில்லை என்றுகூடக் கேட்பீர்கள்போல இருக்கிறதே? நீங்கள் வராமல் நான் எப்படிச் சாப்பிடுகிறதாம்?'' என்று சிரித்தாள். அவன் நெஞ்சை நனைப்பது போல இருந்தது அது. உள்ளே நுழைந்ததும் கால் செருப்பை உதறிக் கொண்டே சொன்னான். ''அப்படியானால் நான் காலைக் கழுவிக் கொண்டு வருகிறேன். இருவருக்குமே தட்டைப் போடு. ஒன்றாகச் சாப்பிடுவோம்.''

அவள் சட்டென்று நிமிர்ந்தாள். முகம் வியப்பில் ஒளி விட்டது. ஆனால் என்னவென்று கேட்க வில்லை. அவனைப் புரிந்து கொள்ள முடியும் அவளால்.



சிரிக்கவும் சிந்திக்கவும்



வக்கீல்கள் அணிந்து வரும் கறுப்பு கௌன் சட்டை முதலியவற்றுக்கு ஆபத்து வரவிருக்கிறது. டில்லி ராஜ்ய சபையில் வக்கீல்கள் திருத்த மசோதா விவாதிக்கப் பட்ட போது, கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தின ரான ஸ்ரீ பூபேஷ் குப்தா, "வக்கீல் கறுப்புக் கோட்டும் கௌனும் அணிவது சுதந்திர இந்தியாவுக்கு ஏற்றதல்ல. நீதிபதிகளைப் பார்த்து 'மை லார்டு' என்று சொல்வதும் அடிமைத் தனத்தைக் குறிக்கும். ஆகையால் அவை ஒழிக!" என்றார்.

கௌன் தரிக்கும் வழக்கம் வெள்ளைக்காரன் நம் மீது சுமத்தியதல்ல. நாமாக ஏற்றுக் கொண்டது. ஸர் பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்கள் தமது பிரசங்கமொன்றில் "அந்தக் காலத்தில் வக்கீல்கள் சாதாரணக் கோட்டு மட்டுமே அணிந்து வந்தார்கள். அந்நிய பாரிஸ்டர்கள் மட்டுமே கறுப்புக் கௌன் அணிந்து கொண்டார்கள். இந்த உடை வித்தியாசம் தங்களை மட்டமானவர் களாகக் கருதச் செய்கிறது என்று அவர்கள் நினைத்தார்கள். சில சமயம் கோர்ட்டுகளில் வழக்குகள் நடந்து கொண்டிருக்கும் போது சாதாரண உடையுடன் வரும் வக்கீல்களைக் காவலாளிகள் உள்ளே விடுவதில்லை. மற்றவர் களுக்கும், அவர்களுக்கும் வித்தியாசம் தெரியாததால்....! ஆகவே தாங்களும் கறுப்புக் கௌன் அணிந்து வர அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்று உள்ளூர் வக் கீல்கள் மனுச் செய்து கொண்டு, கிளர்ச்சி செய்து அந்த உரிமையைப் பெற்றனர்" என்று பொருள்படக் கூறியிருக்கிறார்.

வக்கீல்கள் கௌன் உடை தரிப்பதற்கு எத்தனையோ விதிகள் உண்டு. பான்ட்ஸ் தரித்துக் காலில் பூட்ஸ்கள் அணிய வேண்டும். கழுத்துப் பக்கம் பொத்தான்கள் இல்லாம லிருந்தால் கறுப்பு 'டை' அணிய வேண்டும். கிராப் செய்து கொள்ளத் தலையில்லா விட் டால் தலைப்பாகை தரித்துக் கொள்ள வேண் டும். 'பாண்டு' என்று கழுத்துப் பட்டை அணிந்து கொள்ள வேண்டும்.

'டை'களை வங்காளிகள் 'கண்ட லங்கோடி' என்று சொல்வார்கள். கழுத்திலணியும் லங்கோடு என்று அர்த்தம். கழுத்துப் பட்டையிலிருந்து வேறு இரண்டு பட் டைகள் தொங்கிக் கொண்டிருக்கும். ஆட்டின் கழுத்திலிருந்து விரல் போன்ற இரண்டு பாகங்கள் தொங்கிக் கொண் டிருக்குமே அது மாதிரி.



" ஆட்டின் கழுத்தில் அதர்
கிடந்த அற்றே....."

என்று திருமூலர் குறிப்பிட்டது இந்தக் 'கழுத்து' பட்டையைப் பற்றித்தான் போலும்! வடமொழியில் இதை 'அஜா கள ஸ்தம்' என்பார்கள்.

நாளடைவில் கௌன் ஆடை அணிவது சம்பந்தமான சம்பிரதாய விதிகளை வக்கீல்கள் சௌகரியத்துக்கேற்ப மாற்றிக் கொண்டு வரலானார்கள்.

ஒரு சமயம் நீதிபதி ஜாக்ஸன் கோர்ட் டுக்கு வந்த ஒரு வக்கீல் காலில் வெண்மை யான டென்னிஸ் பூட்ஸ்கள் தரித்திருந்தார். அதைக் கவனித்த நீதிபதி, "தாங்கள் டென் னிஸ் பூட்ஸ்கள் போட்டுக் கொண்டிருப் பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அது விஷயத்தில் சம்பிரதாயம் என்ன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்" என்று நாசூக்காக விசாரித்தாராம். வக்கீல் பதில் சொல்லத் தோன்றாமல் மௌனமாக வெளி யேறி விட்டார். கௌன் அணியும் போது ஏற்பட்ட மற்ற மாறுதல்கள்:

பஞ்ச கச்சமும், மூலைக் கச்சமும் காலில் பூட்ஸும்.

பஞ்ச கச்சமும், மூலைக் கச்சமும் காலில் செருப்பும்.

பான்ட்ஸும், காலில் செருப்பும்.

மலையாளப் பிரதேசத்தில் வக்கீல்கள் சிலர் சமீப காலம் வரை இடுப்பில் தட்டுச் சுற்றுக் கட்டிக் கொண்டு மேலே கௌன் தரித்து வந்தார்கள்.

வக்கீல்களை அவர்களது குமாஸ்தாக்களி னின்றும், கட்சிக்காரர்களினின்றும் பிரித்துக் காட்ட ஏதாவது ஓர் அடையாளம் அவ சியமே ?

கழுத்தில் ஒரு கறுப்புப் பட்டையை அணிந்து கொள்ளச் செய்யலாம்.

கறுப்புக் கல் கடுக்கன் போட்டுக் கொள் ளும் பிரத்தியேக உரிமையை அவர்களுக்கு அளிக்கலாம்!

ஃ ஃ ஃ

அரசியல் வட்டாரங்களில் 'இரண்டு' என்ற வார்த்தை இப்போது அதிகம் அடி பட்டுக் கொண்டிருக்கிறது.

"இன்னும் இரண்டு வருஷ காலத்துக்குள் இலஞ்ச ஊழலை ஒழித்து விடுவேன். இல்லா விட்டால் பதவியிலிருந்து விலகி விடுவேன்" என்று உள்நாட்டு மந்திரி ஸ்ரீ நந்தா தினமும் ஒரு முறை கூறிப் பயமுறுத்தி வருகிறார்.

"இன்னும் இரண்டு வருஷ காலத் துக்குள் விலைவாசிகள் உயர்வைக் கட்டுப் படுத்தி விடுவோம்" என்று மந்திரிகள் கூறுகிறார்கள்.

"இன்னும் இரண்டு ஆண்டுக்குள் உணவுத் தானியங்கள் உற்பத்தி அதி



''இவர்கள் எலெக்ட்ரிக் ரயில் வண்டியில் அடைந்து அடைந்து பிரயாணம் செய்து பழக்கப்பட்டவர்கள் போலிருக்கு. வண்டியை விட்டுக் கீழே இறங்கிய பிறகுங்கூட....!''

கரித்தாக வேண்டும்'' என்று தேபர்ஜி கூறுகிறார்.

''இன்னும் இரண்டு மாதத்துக்குள் இலஞ்ச ஊழலை ஒழித்து விடுவேன்'' என்று காஷ்மீரில் ஸ்ரீ ஸாதிக் சொல்கிறார்.

எல்லாரும் இந்த 'இரண்டு' என்ற எண்ணை ஏன் பலமாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் அப்படி என்ன விசேஷமிருக்கிறது ?

இந்தியக் குடியரசில் இரண்டு தேசிய கீதங்கள் உண்டு. இரண்டு பேரைக் கலியாணம் செய்து கொள்வது சட்டப்படி தடை செய்யப்பட்டிருக்கிறது. பழைய சென்னை, பம்பாய், அஸ்ஸாம், பஞ்சாப், வங்காளம் எல்லாம் இரண்டு இரண்டாகப் பிரிக்கப்பட்டன. நூறுரூபாய் கரன்ஸி நோட்டை இரண்டு நோட்டுகளாகக் குட்டி போடச் செய்து கொடுக்கிறேனென்று யாராவது சொன்னால் அதை நம்பி ஏமாறும் படித்த மடையர்கள் இருக்கிறார்கள். இரண்டு என்ற எண்ணின் தனி விசேஷமென்ன வென்றால் அதை அதே எண்ணுடன் கூட்டினாலும், பெருக்கினாலும் ஒரே விடைதான் வரும்.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு தேர்தல் வருகிறதே. அதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் இந்தக் காலக் கணக்கை எல்லாரும் சொல்லி வருகிறார்களா?

அமெரிக்காவில் உள்ள டெக்ஸாஸிலிருந்து 'நியூஸ்', 'ரோஸ்ட்' என்று இரண்டு பத்திரிகைகள் வெளியாகி வந்தன. 'நியூஸ்' பத்திரிகை, ஸுப்ரீம் கோர்ட்டுகளில் நடைபெறும் முக்கியமான வழக்குகளைப் பற்றிய விவரங்களை மிகவும் சிரமப்பட்டுச் சேகரித்து வெளியிடும். ஆனால் மறு நாள் காலை அந்த விவரங்கள் 'ரோஸ்ட்' பத்திரிகையிலும் வெளி வந்திருக்கும். அது அப்படியே திருடிப் போட்டு விடும். ஒரு நாள் நியூஸ் பத்திரிகையில் ஒரு வழக்கைப் பற்றிய ரிப்போர்ட்டில் கடைசிப் பாரா பின்வருமாறு இருந்தது: ''நாம் தீர்மானித்துள்ள சட்ட விஷயம் சர்வ சாதாரணமானது. அதை இப்போது யாராவது ஆட்சேபிக்கிறார்கள் என்று நாம் ஆச்சரிய மடையாமலிருக்க முடியவில்லை.

ம்றுனி ருட்போ ப்டிருத் ட்ஸ்ரோ னதறு.

மறு நாள் காலை இந்த விஷயம் ரோஸ்ட் பத்திரிகையிலும் அப்படியே வெளி வந்திருந்தது. கடைசி வரி ஏதோ லத்தீன் வசனத்தைக் குறிக்கிறது என்று அது நினைத்திருந்தது. அந்த வரியைத் தலை கீழாகப் படித்துப் பாருங்கள்.

தேசத் தலைவர்கள், பிரதம மந்திரிகள் முதலியவர்கள் ஏதாவது மகாநாட்டுக்குப் போகும்போது அவர்களைப் பற்றிய மிக சர்வ சாதாரண விஷயங்களையும், அவர்களது காரியதரிசிகள் ரிப்போர்ட்டர்களிடம் தெரிவிப்பதுண்டு. இதைப் பரிகசித்து ஆர்ட் புச்வால்ட், ஒரு கட்டுரை எழுதியிருந்தார்: அதன் சில பகுதிகள் வருமாறு:

காரியதரிசி: ஜனாதிபதி (ஐஸன்ஹோவர்) 11.06க்குப் படுக்கச் சென்று விட்டார்.

கேள்வி: அவர் தூங்கச் செல்ல வேண்டுமென்று யோசனை கூறியது யார்?

க: ஜனாதிபதிக்கே அந்த யோசனை தோன்றிற்று. அவர் களைத்துப் போயிருந்ததால் தூங்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

கே: ஷெர்மன், ஆடம், டாக்டர், ஸ்னைடர இவர்கள் யாராவது அவர் தூங்க வேண்டுமென்று யோசனை கூறினார்களா?

''எனக்குத் தெரிந்த வரையில் அது ஜனாதிபதியின் சொந்த யோசனை.''

''அவர் தூங்கச் செல்லுமுன் யாருடனாவது பேசினாரா?''

''அரசாங்கக் காரியதரிசியுடன் பேசினார்.''

''அவரிடம் என்ன சொன்னார்?''

''நல் வரவு பாஸ்டர் (டல்லஸ்)'' என்றார்.

''காரியதரிசி என்ன பதிலளித்தார்?''

''நல்வரவு, மிஸ்டர் ஜனாதிபதி'' என்றார்.

''ஜனாதிபதி இப்போது என்ன கனவுகண்டு கொண்டிருப்பார் என்று சொல்ல முடியுமா?''

''தெரியாது. அவர் தாம் கனவு காண்பதைப் பற்றி என்னிடம் தெரிவிப்பதில்லை..''

''படுக்கையில் எத்தனை போர்வைகள் இருக்கின்றன?''

''மூன்று. ஆனால் அவை எல்லாவற்றையும் அவர் உபயோகிக்கிறாரா என்று நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை.''

''ஒன்றைத் தூக்கக் கலக்கத்தில் உதைத்துக் கீழே தள்ளி யிருப்பார்.''

''இருக்கலாம். இல்லாமலிருக்கலாம்.''

சம்பாஷணை இந்த முறையில் நடைபெற்றுக் கொண்டே போகிறது. இது கிண்டல் ஹாஸ்யம், அதுவும் அதை மிகைப்படுத்திக் கூறும் ரகத்தைச் சேர்ந்தது.

இந்தக் கட்டுரை பத்திரிகையில் வெளியான போது கட்டுரையைப் படித்த ஜனாதிபதியின் காரியதரிசி மிஸ்டர் ஜேம்ஸ் ஹாகார்ட்டி கோபம் கொண்டார். ''புச்வால்ட் எழுதியிருப்பது முற்றும் பொய். என்னைப் பத்திரிகைக்காரர்கள் யாரும் பேட்டி காணவில்லை. நான் இப்படி யெல்லாம் பதிலளிக்கவுமில்லை'' என்று மறுப்பு விடுத்தார்.

குண்டு மல்லிகை

மற்றவர்கள் முன்னிலையில் டாக்டர் ஜகந்நாதன் தன்னை பேபி என்று அறிமுகப்படுத்தியது வசந்திக்கு மன வருத்தத்தை யளித்தது. அவர்களிடமிருந்து தனித்து வந்ததும், ''மற்றவர்கள் முன்னிலையில் என்னை பேபி என்று ஏன் கூப்பிட்டீர்கள்?'' என்று கேட்டாள்.

''மற்றவர்கள் பொறாமைப்படட்டும் அல்லது ஒன்றும் புரியாமல் விழிக்கட்டும். அப்போதுதான் நாம் மறக்க முடியாத பாத்திரங்களாக மற்றவர்கள் மனத்தில் கொலு வீற்றிருப்போம்!'' என்றார் ஜகந்நாதன்.

''ரொம்ப அழகாயிருக்கு! நம்மையே கதாபாத்திரங்களாக்குகிறீர்களா?'' என்று வசந்தி கடிந்து கொண்டாள்.



ஜகந்நாதன் குஷியாகச் சீட்டியடித்துக்கொண்டே தம்முடைய அறைக்குள் நுழைந்து தம் கைக் குழந்தை போல் தாம் தூக்கி வைத்துக் கொண்டிருந்த குப்பைக் கூடையை மெல்ல இறக்கி அங்கிருந்த கட்டிலில் படுக்க வைத்தார்.

வசந்தி தயங்கியபடி அறை வாசலிலேயே நின்று கொண்டு உள்ளே ஊடுருவிப் பார்த்தாள்.

அந்த அறை மிக விசாலமானதாகவும், அழகாகவும், அலங்காரமாகவும் விளங்கியது. அங்குள்ள மேஜை நாற்காலிகள், அலமாரிகள், இரட்டைக் கட்டில்கள் முதலானவை புது நாகரிகத்தை விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன. ஷவர்பாத் வசதிகளுடன் ஒரு குளியலறையும் அதற்கு ஒட்டியாணம் போல் ஒட்டிக் கொண்டிருந்தது. புதுமணத் தம்பதிகளாக இருந்தால் அந்த அறையை விட்டு அகலாமல் குறைந்தபட்சம் ஒரு மாதமாவது அதில் குடித்தனம் நடத்த வேண்டும் என்று தோன்றும்.

வசந்தி குழம்பினாள். அறைக்கு வெளியே வராந்தாவில் இருந்தபடியே கதை எழுதலாம் என்று சொல்ல அவள் நினைத்தாள்.

அதை ஜகந்நாதன் புரிந்து கொண்டாரோ என்னவோ, சட்டென்று வசந்தியை நோக்கிப் புன்முறுவலுடன் உரத்த குரலில், ''பேபி, உள்ளே வா! நெளிந்துகொண்டு ஏன் அங்கேயே நிற்கிறாய்?'' என்று கூப்பிட்டார்.

அரு. ராமநாதன்

அந்தச் சமயம் பக்கத்தறையிலிருந்து ஒரு யுவதி வெளியே எட்டிப் பார்த்து வசந்தியை அடையாளம் புரிந்து கொண்டதும், ''ஏய், வசந்தி! நீயா?'' என்று அதிசயப்போடு கூச்சலிட்டாள்.

வசந்தி அந்தப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காமல் விருட்டென்று ஜகந்நாதனின் அறைக்குள் புகுந்து விட்டாள்.

ஆனால் பக்கத்து அறை யுவதி அவளை இலேசில் விடவில்லை. வசந்தியின் அறை முன்னாலேயே அவள் ஓடி வந்து நின்று, திறந்திருந்த அறைக் கதவின் மீது நாகரிகமாக லொட்டு லொட்டென்று தன் விரலால் தட்டி, ''வாடியம்மா! என்னோடும் கொஞ்சம் பேசி விட்டுப் போடியம்மா!'' என்று ராகம் பாட ஆரம்பித்து விட்டாள்.



அந்த யுவதி சில வருஷங்களுக்கு முன்னால் வசந்தி படித்த அதே ஹைஸ்கூலில் அவளுடைய வகுப்புத் தோழியாகவிளங்கியவள். அந்தக் காலத்தில் இருவரும் பிராண சிநேகிதிகளாக எதையும் மனம் விட்டுப் பேசிக் கொள்வார்கள். 'நீதான் ரொம்ப அழகுடி' என்று ஒருவருக்கொருவர் சொல்லிப் பரவசப்படுவார்கள். அவ்வளவு தூரம் அவர்களுக்கிடையே சிநேகிதம் முற்றியிருந்தது. இடைக்காலத்தில் அந்தச் சிநேகிதி எங்கோ மறைந்து விட்டாள்.

இப்போது அந்தச் சிநேகிதியைப் பார்த்ததும் பழைய உற்சாகமெல்லாம் பொங்கி யெழுந்து புரள வேண்டியதுதான் நியாயம்! ஆனால் எதிர்பாராத நேரத்தில், விரும்பத் தகாத சூழ்நிலையில் அந்தச் சிநேகிதியைப் பார்த்ததும் வசந்திக்கு உடம்பெல்லாம் உதறலெடுத்தது. அவளுடைய தைரியமெல்லாம் எங்கோ பறந்து போய் விட்டது. என்ன செய்வது, என்ன சொல்வது என்றே அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு கணம் குழம்பியபடி அசைவற்று நின்ற வசந்தி சட்டென்று ஏதோ ஒன்றை யோசித்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, பழைய தைரியத்தையும் புன்முறுவலையும் வரவழைத்துக் கொண்டு, மெல்ல அறையிலிருந்து வெளியே வந்து அந்தச் சிநேகிதியை உற்றுப் பார்த்து ''ஆ, லலிதா! நீயா?'' என்று அப்போதுதான் அடையாளம் கண்டு பிடித்தவள் போல் பாவனை

செய்து ஓடிச் சென்று, ''உன்னைப் பார்த்து எத்தனை காலமாச்சுடி!'' என்று அவளை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டாள்.

''வாடி, வசந்தி!'' என்று லலிதா அவளைத் தன்னுடைய அறைக்குள் பரபரவென்று இழுத்துக் கொண்டு ஓடினாள்.

இந்தக் காட்சியைத் தம் அறைக்குள்ளிருந்தபடியே கவனித்துக் கொண்டிருந்த ஜகந்நாதன் தம் மனத்துக்குள் சிரித்துக் கொண்டார். பிறகு அவர் மெல்லத் தம் மேல் சட்டையைக்கழற்றி கோட் ஸ்டாண்டில் மாட்டி விட்டு, அறையின் மின்சார விசிறியைப் போட்டார். நாவல் எழுதுவதற்குத் தேவையான உபகரணங்களையெல்லாம் அமைதியாக எடுத்து மேஜையின் மீது அழகுறப் பரப்பி வைத்தார். பிறகு கட்டிலில் படுத்திருந்த கைக் குழந்தையை (குப்பைக் கூடையை) மெல்லத் தூக்கி மேஜை அருகில் தம் காலடிப் பக்கமே வைத்துக் கொண்டார். பிறகு அவர் வசந்தியின் வருகையை எதிர்நோக்கி நாற்காலியில் சிவயோகி போல் உட்கார்ந்து தபஸ் செய்யலானார்.

வசந்தி சிறிது நேரத்தில் பரபரப்புடன் திரும்பி வந்தாள். ஏதோ எதிர்பாராத போர்க்களத்திலிருந்து எப்படியோ சமாளித்துக் கொண்டு தலை தப்பியவள் போலவே அவள் வியர்த்து விறுவிறுக்க அறைக்குள் நுழைந்து ஜகந்நாதனின் எதிரில் உள்ள நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்து ஒரு பெருமூச்சு விட்டாள். மெழுகு போன்ற அவளுடைய மிருதுவான கையின் மேற்புறம் வியர்வையால் நனைந்து நைலான் ரவிக்கையின் ரோஜா நிறம் அதில் அழுங்கிப் போயிருந்தது.

அவளை டாக்டர் ஜகந்நாதன் தமாஷாகப் புன்முறுவலுடன் நோக்கி, ''என்ன பேபி? உன் சிநேகிதி இவ்வளவு சீக்கிரமாக உன்னை விட்டு விட்டாளா? அவளோடு நீ ஏதாவது—சண்டை போட்டுக் கொண்டு வந்தாயா?'' என்று கேட்டார்.

வசந்தி பதில் சொல்லாமல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு உர்ரென்று உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு அழ வேண்டும் போல் இருந்தது. அதை யொட்டி அவளுக்கு ஜகந்நாதன் மேல் கோபம் கோபமாகவும் வந்தது.

அதை ஜகந்நாதன் பொருட்படுத்தாதவர் போல், நாவல் எழுதத் தொடங்கும் வேகத்தில், ''என்ன பேபி நம்முடைய காரியத்தைக் கவனிக்கலாமா?'' என்று ஒரு புன்முறுவலுடன் கேட்டுவிட்டு, ''நாவலுக்குப்ளாட்..'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

அதற்குள் வசந்தி சட்டென்று துள்ளி யெழுந்து அவருடைய வாயைப் பொத்தாத குறையாக அவரருகில் — பாய்ந்து நின்று, ''உஷ்! மெல்லப் பேசுங்கள்!'' என்று பதறினாள்.

''ஏன் பக்கத்தறையில் இருக்கும் உன் சிநேகிதி ஒட்டுக் கேட்பாளா? நம் கதையை அவள் தெரிந்து கொண்டு விடுவாள் என்று பயப்படுகிறாயா?''

ஆம் என்பது போல் தலையாட்டிய வசந்தி, ''நாம் இந்த ஒட்டலுக்கு வந்திருக்கவே கூடாது!'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு மெல்லிய குரலில் தன் கோபத்தை வெளியிட்டாள்.

''ஏன், உன் சிநேகிதி இங்கே நமக்கு இடையூறாக இருப்பாள் என்று நினைக்கிறாயா?''

''அவள் என்னிடம் என்னவெல்லாம் கேட்டாள் தெரியுமா?''

''அப்படி யென்ன பெரிசாக அவள் கேட்டு விட முடியும்?''

''அவர் யாருடி என்று கேட்டாள்!''

''என்னையா?''

''ஆமாம்!'' என்று வசந்தி அழாத குறையாகத் தலையாட்டினாள்.

டாக்டர் ஜகந்நாதன் பதறியவராக ''நான்தான் டாக்டர் ஜகந்நாதன் பிரபல நாவலாசிரியர்! நாம் இருவரும் சேர்ந்து ஒரு நாவல் எழுதப் போகிறோம் என்றெல்லாம் அவளிடம் விளம்பரப்படுத்தி விட்டாயா?'' என்று கேட்டு விட்டு, ''அவள் வேறு இங்கு வந்து நாவல் எழுதுகிறேன் என்று உட்கார்ந்து விடப் போகிறாள்! அல்லது நோயாளியாக வந்து என்னிடம் கையையும் வாயையும் காட்டி நமக்குத் தலைவலியை உண்டாக்கிவிடப் போகிறாள்!'' என்று அலுத்துக் கொண்டார்.

''நான் அப்படி யெல்லாம் சொல்வேனா? நீங்கள் யார் என்ற உண்மையையோ, நாம் எதற்காக இங்கே வந்திருக்கிறோம் என்ற விஷயத்தையோ, நான் அவளிடம் சொல்லவேயில்லை!''

''அப்போ எனக்கும் உனக்கும் என்ன உறவென்று கேட்டிருப்பாளே?''

''அவள் வாய் திறந்து கேட்கவில்லை! அவளே நமக்குள் உறவு உண்டாக்கி விட்டாள்!''

''என்ன உறவு? உன்னோடு வந்திருக்கிற ஆள் யாருடி, உன் அப்பாவா?' என்று கேட்டாளா?''

''இல்லை, என் தாத்தாவா என்று கேட்டாள்!'' என்று வெடுக்கென்று

கொதிப்புடன் பொருமிய வசந்தி, ''உங்களை என் அப்பா என்று சொல்லிக் கொள்ளலாம் என்றாலோ நமக்குள் அவ்வளவாக வயது வித்தியாசம் இல்லையே'' என்று வருத்தப்பட்டாள்.

''என்னை உன் பிரண்ட் என்று சொல்லிக்கொண்டாயா?''

''ரொம்ப அழகாயிருக்கு! என் பாய் பிரண்டை (ஆண் சிநேகிதனை) ஓட்டலுக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொன்னால் என்னைப் பற்றி அவள் என்னவென்று நினைத்துக் கொள்வாள்?''

''பின்னே உனக்கு நான் என்ன சொந்தமென்று சிநேகிதிகள் இருவரும் தீர்மானம் பண்ணினீர்கள்?''

''எனக்கு நீங்கள்... நீங்கள்...!''

''ம்; சொல்லு!''

''நீங்கள் எனக்கு ஹஸ்பெண்டா (கணவனு) என்று அவள் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டாள்!''

ஜகந்நாதன் திடுக்கிட்டவர் போல், ''அதற்கு நீ என்ன பதில் சொன்னாய்?'' 'ஆமடி. அவருக்கு நான் 'ஒய்ப்'டி'- (மனைவியடி) என்று நீ நெளிந்து கொண்டே சொன்னாயா?'' என்று பரபரப்புடன் கேட்டார்.

''ஆமாம்!'' என்று சொன்ன வசந்தி நாணத்தால் முகமெல்லாம் சிவக்க மெல்லத் தலை குனிந்து கொண்டாள். உண்மையிலேயே ஜகந்நாதனுக்கு மனைவியாக விளங்க முடியுமென்றால் அவளுடைய உள்ளமெல்லாம் பரவசமடையும் என்பதையே அது உணர்த்தியது.

ஜகந்நாதனோ ''என்னை உன் ஹஸ்பெண்ட் என்று எப்படி நீ சொல்லிக் கொள்ளலாம்?'' என்று கோபத்தோடு குதித்தார்.

''அப்படிச் சொல்லிராவிட்டால் என் மானமே போயிருக்கும்! என்னைப் பற்றி லலிதா நல்ல விதமாக நினைத்திருப்பதால்தான் 'அவர் உன் ஹஸ்பெண்டாடி' என்று கௌரவமாகக் கேட்டாள்! வேறொருத்தியாக இருந்தால் எப்படியெல்லாமோ நினைத்திருப்பாள்! அது நம்மிருவருக்கும் மகா கேவலமில்லையா?''

''அதற்காக உன் சிநேகிதியின் கண் முன்னால் நம்மிருவரையும் கணவன் மனைவியாக ஆக்கிவிட்டாயோ?''

''ஆமாம். இந்தத் தர்மசங்கடமான நேரத்தில் வேறு வழியொன்றும் எனக்குத் தோன்றவில்லை!''

''அதெப்படி என்னை ஒரு ஹஸ்பெண்டாக்கலாம்? நான் கல்யாணப் பந்தமே கூடாதென்ற கொள்கை உடையவன்!

வெட்டிக்குப் போட்டி

காஷ்மீர் மந்திரிகளின் இல்லங்களிலிருந்து லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள மேஜை 'நாற்காலி' சோபா முதலியன காணுமற்போய்விட்டனவாம்.

'காஷ்மீர் மந்திரிகள் காஷ்மீரத்தையே கோட்டைவிடத் தயாராயிருக்கும் போது நாற்காலி சோபா எம்மாத்திரம்' என்கிறார் ஒருவர்.

ஃ ஃ ஃ

பிரம்மசாரிகள் சங்கத்தைத் திறந்து வைக்கக் காமராஜ் அழைக்கப்படுவார்.

— ஜம்மு செய்தி

பிரம்மசாரிணிகள் சங்கத்தைத் திறந்து வைக்க யார் அழைக்கப்படுவோர்?

ஃ ஃ ஃ

''காமராஜ் திட்டம் வெற்றியா என்ற கேள்விக்குக் காமராஜ்தான் பதில் சொல்ல முடியும்'' என்று ஸ்ரீமதி இந்திரா காந்தி கூறியதைப் படித்துவிட்டு எங்கள் ஊர் மாம்பழ வியாபாரி, யாராகிலும் ''இந்த மாம்பழம் புளிக்குமா?'' என்று கேட்டால் இனி, ''இந்த மாம்பழம்தான் பதில் சொல்ல முடியுமே தவிர, என்னால் முடியாது'' என்று சொல்லப் போவதாக அறிவிக்கிறார்.



கல்யாணம் போன்ற சம்பிரதாயத் தளைகளில் சிக்கி உழலாமல் சுதந்திரப் பறவையாகச் சஞ்சரிக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணம் உள்ளவன்! இது உனக்குத் தெரியும்!'' என்று ஜகந்நாதன் குமுறினார்.

''அது எனக்கு நன்றாகவே தெரியும். இருந்தாலும் எதிர்பாராத இந்தச் சூழ்நிலையைச் சமாளிப்பதற்கு நீங்கள் கொஞ்ச நேரம் என் கணவரைப் போல நடிக்க வேண்டும். பிளீஸ்! எனக்காக!'' என்று வசந்தி கெஞ்சி அழாத குறையாக விம்மினாள்.

''பேஷ்! பேஷ்! நாடகம், சினிமாக்களில்தான் கதாநாயகன் தந்திரமாகக் கதாநாயகியை ஓட்டலுக்கு இழுத்துக்கொண்டு வந்து அவளைத் தன் மனைவியைப் போல் நடிக்கச் சொல்லி கடைசியில் அதையே ஊர்ஜிதம் செய்துவிடுவான். இப்போது கதாநாயகியே ஒருவனைப் பிடித்துக் கொண்டு அவனைத் தன் கணவனாக நடிக்கச்

சொல்கிறாளா? ரொம்பப் பிரமாதம்! நம் கதைக்கு வேறு பிளாட்டே தேவையில்லை!" என்று ஜகந்நாதன் முனகினார் உறுமுவது போல.

"என் நிலைமையும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்!" என்ற வசந்தியின் கண்களில் நீர் துளித்தது. "என் சிநேகிதியின் கண்களுக்கு நீங்கள் என் கணவராக நடந்து கொண்டால் போதும்!" என்று தழதழக்கும் குரலில் மிகவும் பரிதாபமாகக் கேட்டுக் கொண்டாள்.

"நான் ஒரு மடையனாகக் கூட நடிக்க முடியும். ஆனால் ஒருத்திக்கு மணவாளனாக நடிப்பதென்பது எனக்கு மகா கஷ்டம்!"



"பக்கத்து வீட்டு பங்கஜமும் அடுத்தவீட்டு அலமேலுவும் பிறந்த வீடு போயிருக்கிறார்கள். நானும் ஒரு பெண்தானே? எனக்கும் அந்த ஆசை இருக்காதா? கொஞ்ச நாளைக்கு, நீங்க வெளியூரில் போய்த் தங்கிவிட்டு வாருங்களேன்!"

"ப்ளீஸ்! எனக்காக....!"

"ம்! நமக்குக் குழந்தை குட்டி வேறு இருக்கிறதென்று உன் சிநேகிதியிடம் சொல்லியிருக்கிறாயா? ஏனென்றால் குழந்தை உள்ள கணவனின் நடிப்பு ஆயுட் கைதி போல் இருக்க வேண்டும்! குழந்தை இல்லாத கணவனின் நடிப்பு கோமாளிபோல் இருக்க வேண்டும்!"

"போன மாதம்தான் நமக்குக் கல்யாணம் ஆயிற்று என்று சொல்லியிருக்கிறேன்!" என்று நாணத்தோடு தலைகுனிந்து கொண்டே ஒரு புன்முறுவலோடு சொன்ன வசந்தி "அவளுக்கு இன்விடேஷன் கூட (திருமண அழைப்புக்கூட) அனுப்பவில்லை என்று குறைப்பட்டுக்கொண்டாள்!" என்றாள்.

"ஓ! நாமிருவரும் புது மணத் தம்பதிகளா! பலே! பலே! நான் கோமாளியாக மாறிச் சில்லறைத்தனமான குறும்புகளுடன் உன்னையே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்க வேண்டுமா?"

வசந்தி களுக்கென்று சிரித்தாள். அடுத்த அறையில் உள்ள தன் சிநேகிதிக்குக் கேட்க வேண்டும் என்பது போலவே அப்படிச் சிரித்தாள்!

"நமக்கு நடந்தது காதல் கல்யாணமா? கட்டாயக் கல்யாணமா? பெற்றோர்களாகச் செய்து வைத்த வியாபாரமா? ஏனென்றால் அதற்குத் தக்கபடிதான் கணவனின் நடிப்பு மனைவியிடம் எதிரொலிக்க வேண்டும்!" என்றார் ஜகந்நாதன் கிண்டலாக.

"நமக்கு நடந்தது காதல் கல்யாணந்தான்!" என்று வசந்தி அதை வெகு ரசமாக அனுபவித்துச் சொல்லுபவள் போல் கூறிவிட்டு, "அதிலும் நான்தான் உங்களைக் காதலித்தேன்! கல்யாண வலையில் சிக்கிக் கொள்ளக் கூடாது என்றிருந்த உங்கள் மனதை நான்தான் மாற்றி என்னைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளும்படி வைத்தேன்! இப்படி நான் சொன்னதும் லலிதா என்னை அப்படியே கட்டிக் கொண்டு, 'நீ கெட்டிக்காரியடி! நீங்களிருவரும் ரொம்ப ரொம்பப் பொருத்தமான ஜோடியடி!' என்று சொல்லிச் சொல்லி என் கைகளிலும் கன்னங்களிலும் கிள்ளு கிள்ளு என்று கிள்ளித் தள்ளிவிட்டாள்!" என்றாள் நெஞ்சமெல்லாம் விம்மி, உடம்பெல்லாம் ஒருவித ஆனந்தத்தால் புல்லரிக்க.

"நம்மிருவருக்கும் கல்யாணமானதும் தேன்நிலாப் பயணம் புறப்பட்டு இங்கே மகாபலிபுரத்தைச் சுற்றிப் பார்ப்பதற்காக வந்து ரூமெடுத்துத் தங்கியிருக்கிறோம். அப்படித்தான் உன் சிநேகிதி நினைத்துக் கொண்டிருக்கிறாளா?"

"ஆமாம்! அதற்கேற்றாற்போலத்தான் நாம் நடிக்க வேண்டும்! நீங்கள் என்னை பேபி, பேபி என்று வெறும் தமாஷுக்காகக் கூப்பிடுகிறீர்களல்லவா? அதை வெகு பிரியத்துடன் நீங்கள் செல்லமாக அப்படிக் கூப்பிடுகிறீர்கள் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கிறாள். அது எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா?" என்று மனம் பூரிக்க வசந்தி சட்டென்று எதையோ நினைத்துக்கொண்டு கலவரத்தால் உடல் வெடவெடக்க, "நல்லவேளை! என் கழுத்துச் செயினை அவள் வெளியே எடுத்துப் பார்க்கவில்லை" என்று ஒரு பெருமூச்சு விட்டாள். "அந்தச் செயினை வெளியே எடுத்துப் பார்த்தால் அதில் தாலியில்லை என்பது அவளுக்குப் புரிந்திருக்கும்!"

"உன் சிநேகிதி நம் ரூமுக்கு விஜயம் செய்து நாம் நடத்தும் புதுக் குடித்தனம் எப்படியிருக்கிறது என்று பார்வையிடப்போகிறாளா?" என்று ஜகந்நாதன் மெல்லக் கேட்டார் வியர்வை முத்திட்டிருக்கும் வசந்தியின் முகத்தைப் பார்த்தபடியே!

''இன்னும் சிறிது நேரத்தில் லலிதா டிரஸ் செய்து கொண்டு இங்கு வருவாள்! மலைக் கோவிலிலுள்ள சிற்பங்களையும், பாண்டவர் ரதங்களையும் அவள் சுற்றிப் பார்க்கப் போகிறாளாம்! அவளோடு நம்மையும் வரச் சொல்லி வற்புறுத்துகிறாள்!''

''ஏன்? அவள் தனியாகவா வந்து ரூமில் தங்கியிருக்கிறாள்? அவள்கூட என்னைப் போலக் கதாநாயகன் எவனும் வரவில்லையா?''

''அவள் அப்பாவோடு வந்தாளாம்! இப்போது அவளுடைய அப்பா ஏதோ பிஸினஸ் விஷயமாக வெளியே போயிருக்கிறாராம். அதனால்தான் நம்மைக் கூப்பிடுகிறாள்!''

''நாம் இங்கே நாவல் எழுத வந்தோமா? மகாபலிபுரத்தில் சுற்றித் திரிய வந்தோமா?'' என்று முனகிய டாக்டர் ஜகந்நாதன், சட்டென்று ''முடியாது! முடியாது!'' என்று வேண்டும் என்றே உரத்த குரலில் மேஜை மீது ஓங்கி ஒரு குத்து விட்டார்.

வசந்தி மெல்லிய குரலில், ''ஏன் இப்படிக் கூச்சலிடுகிறீர்கள்? நாம் சண்டையடித்துக் கொள்கிறோமோ என அவள் நினைத்து விடுவாள்!'' என்று பதறினாள்.

''நினைக்கட்டுமே! புருஷன் மனைவிக்குள் சண்டை மூள்வது சகஜம்தானே?''

''ஆனால் நாம் புதுக் கல்யாணமானவர்களாயிற்றே?''

''ஓ! புதிதிலேயே சுய ரூபத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டால் என்னை நளினமில்லாதவன், முரடன், காட்டான் என்றெல்லாம் நினைத்து விடுவாள் இல்லையா?''

''புருஷனை அனுசரித்துப் போக எனக்குத்தான் புத்தியில்லை என்று மதிப்பிடுவாள்!'' என்று குறும்புத்தனமாகச் சிரித்த வசந்தி, ''இங்கே லலிதா வந்ததும், நீங்கள் கிளம்பத் தயாராக இருக்கவேண்டும்!'' என்றாள்.

''நேரத்தை நாம் வீணாக்க முடியாது. 'வெளியே போய்க் கற்சிலைகளைப் பார்த்துக் கொண்டு திரிவதை விடப் பொற்சிலையான உன்னைச் சுற்றிக் கொண்டே இந்த ரூமுக்குள்ளேயே அடைந்து கிடப்பதுதான் எனக்குப் பரமானந்தம்!' என்று சொல்லி அவளைத் துரத்திவிடுகிறேன்!''

''அப்படிச் சொன்னால் அவள் என்ன நினைத்துக் கொள்வாள்?''

''ஏன்? கிணற்று நீரை வெள்ளமா கொண்டுபோய்விடும் என்று கேலி செய்வாளா?'' என்று ஜகந்நாதன் மகா விஷமமாகக் கேட்டார்.

வசந்தி தன் முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.

''அப்படியானால் நான் ஓர் 'ஆர்டினரி'க் கணவன் போல் நடிக்கவேண்டுமா?'' என்றார் ஜகந்நாதன் கிண்டலாக அவளருகே வந்து.

வசந்தி மெல்லத் தலை நிமிர்ந்து அவரை ஆவலோடு ஏறிட்டுப் பார்த்தாள். ''என் மீது நீங்கள் ரொம்பப் பிரியம் வைத்திருப்பது போலவும் காட்டிக் கொள்ள வேண்டும்! இல்லாவிட்டால் அவள் என்னைக் குறைவாக நினைப்பாள்!''

''பிரியத்தைக் காட்ட நான் என்ன செய்ய வேண்டும்?''

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று வசந்திக்குப் புரியவில்லை. அவள் குழம்பியபடியே ''உதாரணமாக... உதாரணமாக..... அவளோடு நாம் கடை வீதிப் பக்கம் போகும்போது பூக்காரி எதிர்ப்பட்டால் உடனே எனக்கு நீங்கள் மல்லிகைப்பூ வாங்கிக் கொடுக்க வேண்டும். இன்னும் இன்னும்...'' என்று மேலே சொல்ல முடியாமல் முகம் சிணுங்கியபடி, ''இதையெல்லாமா ஒருத்தி சொல்லிக் கொடுப்பாள்? மேலும் நீங்கள் பிரமாதமான நாவலாசிரியர்! உங்களுக்கா அதெல்லாம் தெரியாது?'' என்று முனகினாள். இப்போது அவள் முகம் குங்குமமாகச் சிவந்து விட்டிருந்தது.

''ஓ! புரிகிறது! ஒரு கூடை மல்லிகைப் பூவை நான் வாங்கி அவ்வளவையும் என் கையாலேயே உன் கூந்தலில் சூடிவிட நான் தவிதவிக்க வேண்டும்! உன் சிநேகிதி நம்மைத் திரும்பிப் பார்க்காத சமயங்களில் அதாவது அவள் ஓரக் கண்ணால் நம்மைக் கவனிக்கும் சமயமாகப் பார்த்து நான் உன் தலைப் பின்னலைச் சட்டென்று என் பக்கமாகப் பிடித்திழுக்க வேண்டும்! இன்னும் இது போன்ற சில்லறை விஷமங்களையெல்லாம் வழி நெடுக நான் செய்து கொண்டே வரவேண்டும்! அப்படித்தானே! பார், பார்!'' என்றார் ஜகந்நாதன்.

வசந்திக்கு மிகவும் வெட்கமாகப் போய்விட்டது. கோபித்துக்கொள்பவள்போல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஆனால் உள்ளத்தில் பொங்கிக்கொண்டிருந்த உற்சாகம் மட்டும் குறையவில்லை. அதன் கிளுகிளுப்பு அவளுடைய உடலெங்கும் பரவி அதிகரிக்கவே செய்தது.


(தொடரும்)

அதிசயமான புதுமுறை தயாரிப்பு



பெப்ஸோடெண்டின் அற்புத நுரை உங்கள் பற்களின் வெண்மையை பளிச்சிடச் செய்யும்

எப்படி என்று பாருங்கள்: புது முறைப்படி தயாராகும் பெப்ஸோடெண்டில் மட்டுமே அற்புத நுரையை உண்டுபண்ணும் 'இரியம் ப்ளஸ்' உள்ளது. இந்த அற்புத நுரை பற்களைப் பாழாக்கும் பழுப்பை அகற்றி அவைகளை இயற்கை வெண்மையுடன் பிரகாசிக்கச் செய்கிறது...வாயைச் சுத்தம் செய்வதுடன் பெப்பர்மிண்டின் சுவையையும் அளிக்கிறது.



இந்துஸ்தான் லீவர் லிமிடெட்
இந்தியாவில் தயாரிப்பது

வழக்கறிஞர் வரிசை

பொதுவாக உள்ளூர் நீதி ஸ்தலங்களுக்குப் போய் நீதிக்காக வாதாடித் தொழில் புரிவோர்களின் எண்ணிக்கைதான் அதிகம். சிலருக்குத்தான் பக்கத்து மாகாணங்களுக்குப் போய் அங்குள்ள கோர்ட்டுகளில் ஆஜராகி வழக்காடும் வாய்ப்புக் கிட்டுகிறது. ஆனால் வெகு சிலருக்குத்தான் வெளிநாடுகளுக்குப் போய்த் தன் கட்சிக்காரர்களுக்கு வெற்றி தேடிக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு கிட்டுகிறது. அந்த வெகு குறைந்த எண்ணிக்கையிலடங்கும் வழக்கறிஞர்களில் ஒருவர்தான் திரு கே. ராஜா ஐயர். சென்னை உயர்நீதி மன்றத்துடன் கடந்த ஐம்பத்தியோரு வருடங்களாகத் தொடர்பு கொண்டிருப்பவர். இருபத்திரண்டாவது வயதிலே இந்த வழக்கறிஞர் தொழிலில் புகுந்து, இன்று எழுபது வயதைக் கடந்து விட்டிருந்த போதிலும் இன்னும், நடை உடை பாவனைகளிலும் பேச்சிலும் உற்சாகத்திலும் இளைஞராகவே இருக்கும் அதிர்ஷ்டத்தையும் பெற்றவர்.

சொந்த மாவட்டம் தஞ்சை. பிறந்தது சேலத்தில். ஆரம்பக் கல்வி மதுரையில். கல்லூரிப் பருவம் சென்னை மாநகரத்தில். இவருக்குத் தொழிலில் குருவாக வாய்த்தவர் காலம் சென்ற எஸ். சீனிவாச ஐயங்கார்.

இவருடைய குருநாதர், கோர்ட்டுகளில், சட்ட பாயிண்டுகளை விளக்குவதில் எத்தனை நிபுணரோ, அத்தனை நிபுணர் கோபத்திலும் சீறி விழுவதிலும்! சமயத்துக்குத் தேவையான உதாரணங்களும் மேற்கோள்களும், சட்டப் புத்தகங்களில் அகப்படா விட்டால் அந்தப் புத்தகங்கள் ராம பாணங்களாகப் பறந்து போய் மூலையில் விழும். இதர வழக்கறிஞர்களின் காரியாலயத்தில் கிடைப்பதை விட இதனாலேயே திரு சீனிவாசய்யங்கார் காரியாலயத்தில் புத்தகங்கள் பைண்டு செய்பவருக்கு அதிக வேலை இருக்குமாம்! ஒரு சந்தர்ப்பத்தில் அவர் ஒரு நாள் தம் ஜூனியர் ராஜா மீது சீறி விழுந்ததில் பின்னவர் நடு நடுங்கி மனம் தளர்ந்து வீட்டுக்கு வந்து விட்டார். தம் தந்தையிடம் 'அந்த சீனியர் முன்பு இனிப் போய் நிற்க முடியாது' என்று சொல்லி விட்டு, வேறு ஒரு சீனியரைத் தேடவும் ஆரம்பித்து விட்டார்.

ஆனால் சீக்கிரமே தம் ஜூனியரின் தந்தையைக் கடற்கரையில் சந்தித்த சீனிவாசய்யங்கார் ஐந்தாறு நாட்களாகப் பையன் தம் காரியாலயத்தின் பக்கம் வராதது பற்றிக் கேட்ட போது, அவர் பையனின் நடுக்கத்தைப் பற்றிச் சொன்னார். தம் பையனை மீண்டும் போய்ப் பெரியவரைப் பார்க்கச் சொன்னார்.

"ஹாம்! நல்ல காரியம் பண்ணினாய்? என் கோபம் என்ன புதிதா? அவ்வப்போது என் ஆத்திரத்தைக் கூப்பாடு போடுவதின் மூலம் தான் தணித்துக் கொள்வேன்! அதை யெல்லாம் சமாளித்துக் கொள்ளத் தெரிய வேண்டாமோ? போ! போ! அந்தக் கேஸ் கட்டுகளை எடுத்துப் படி" என்று சர்வ சகஜமாகச் சொல்லி உள்ளே அனுப்பி விட்டார்.

ஜூனியர் தம் குருநாதரின் கோபத்தை யெல்லாம் சமாளிக்கப் பழகி விட்ட பிறகு அதே குருநாதர் தம் அப்பாவி ஜூனியரைப் பார்த்து என்ன கேட்டார் தெரியுமோ?

"நீ ரொம்ப சாது! அப்பாவி! உன்னாலே ஹைகோர்ட்டிலே தாக்குப் பிடிக்க முடியாது! பேசாமல் வெளியூர்க் கோர்ட்டு ஒன்றைப் பார்த்து பிராக்டீஸ் பண்ணு போ!" என்றாராம். மற்ற விஷயங்களில் வார்த்தைக்கு வார்த்தை சீனிவாசய்யங்காரைப் பின்பற்றிய ராஜா ஐயர் நல்ல வேளையாக இந்த ஓர் உபதேசத்தை மாத்திரம் பின்பற்றவில்லை. அது சென்னை ஹைகோர்ட் செய்த அதிர்ஷ்டம் தான் என்று சொல்ல வேண்டும்!

சீக்கிரமே அதே சீனியரின் அபிமானத்துக்குப் பாத்திரமாய் விட்டார். சட்ட பாயிண்டுகளை அள்ளி வீசி வழக்குகளை ஆரம்பித்து நீதிபதிகளைப் பிரமிக்க வைக்கும் தம்முடைய அந்த சீனியர் சீனிவாசய்யங்கார், சட்டப் பாயிண்டுகளை வீசி விட்டு, அவைகளைக் கோத்து மணியாரமாக நீதிபதி முன் வைக்கும் பொறுப்பைத் தம் ஜூனியர் ராஜா ஐயரிடமே விட்டு விடத் தொடங்கினார்.

தம் சீனியரிடம் தாம் பெற்ற அனுபவங்களை இன்றும் ராஜா ஐயர் கடைப்பிடித்து வருகிறார். தம் சீனியர் மாதிரி தம் ஜூனியர்களிடம் அவர் ஒரு நாளும் கடுமையாகப் பேசுவதில்லை. அவருடன் அவர் ஜூனியர்கள் வெகு சரளமாகப் பழகுகிறார்கள். பெரியவருடன் கேஸ் விஷயமாக விவாதிப்பது என்பதே ராஜா ஐயரின் ஜூனியர்களுக்கு ஒரே குஷியாக இருக்குமாம்.

கிரிமினல் துறையைத் தவிர மற்ற எல்லாத் துறைகளிலுமே திரு ராஜா ஐயர் தம் கவனத்தைச் செலுத்துகிறார். ஆனால் அந்தத் துறையில்கூட மாதிரிக்காக அவர் அட்வகேட் ஜெனரலாகப் பதவி வகித்த போது ஈடுபட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்தக் காலத்தில் பிரபலமடைந்திருந்த லட்சுமிகாந்தம் கொலை வழக்கில் அவர் சர்க்கார் தரப்பில் வாதாட வேண்டிய நிலை. வழக்கு விசாரணைக் காலத்தில் அட்வகேட் ஜெனரலாக இருந்து நடத்திய திரு பி. வி. ராஜமன்னார், வழக்கு அப்பீலுக்கு வந்த போது உயர் நீதிபதி



ஸ்ரீ கே. ராஜா அய்யர்



செட்டியார்: நான் பொடி போடும் வழக்கத்தை விட்டுவிடத் தீர்மானித்து விட்டேன்!

குமாஸ்தா: நல்ல யோசனை! நான் அதை வரவேற்கிறேன்!

செட்டியார்: ஏன் அப்படி?

குமாஸ்தா: தினமும் என் பொடி டப்பியை நீங்கதானே காலி செய்து விடுகிறீர்கள் அதனால்தான்...!

யாகி விட்டிருந்தார். பொறுப்பு திரு ராஜா ஐயர் மீது விழுந்தது. 'அடடா, மனித உயிர் போவதும், நிற்பதும் இந்த வழக்கிலிருக்கிறதே! ரொம்ப ஜாக்கிரதையாகச் சட்ட நுணுக்கங்களைப் பார்த்தாகவேண்டும்' என்று தம் உதவியாளர்களிடம் சொல்லுவாராம்.

வழக்குகளை எடுத்து வாதாடும் போது திரு ராஜா ஐயர் தம் கட்சி சம்பந்தமான 'பாயிண்டு'களை மாத்திரம் எடுத்துச் சொல்லி எதிர்க் கட்சி வக்கீல் சில பாயிண்டுகளை மறந்து விட மாட்டாரா என்று எதிர்பார்ப்பதில்லை. தாம் வழக்கைத் தயார் செய்யும் போதே எதிர்க் கட்சிக்குச் சாதகமான விஷயங்களையும் அலசிப் பொறுக்கி, தாம் சமர்ப்பிக்கும் பாயிண்டுகளுடன் சேர்த்தே அவைகளையும் வைத்து நீதிபதிக்குத் தெளிவுபடுத்தி விடுவாராம். தம் கட்சிக்கு என்று பிரத்தியேகமாகச் சட்டத்தை வளைக்க முயற்சி செய்வது என்பது அவருக்குப் பிடிக்காத விஷயம்.

திறமை எங்கிருந்தாலும் பரந்த மனப்பான்மையுடன் அதை மதித்துப் பாராட்டும் தன்மை படைத்தவர் திரு ராஜா ஐயர்.

தையல் வேலை செய்யும் ஒரு கண்டிராக்டரின் இடம் தொழிற்சாலையா இல்லையா என்ற பிரச்னை சம்பந்தமான வழக்கில், இவர் இடைரென்று கோர்ட்டில் எதிர்த்தரப்பு வாதத்தைப் பாராட்டி அந்த வக்கீலைத் திகைக்க வைத்து விட்டாராம்!

ராஜா ஐயரின் சேவை நாட்டின் பல பாகங்களிலிருக்கும் கட்சிக்காரர்களுக்கும் தேவைப்படுகிறது. ஆந்திரப் பிரதேசம் தனியாகப் பிரிந்துபோன பிறகும், அடிக்கடி அவரை அழைத்துப் போய் விடுகிறார்கள். கேரளவாசிகளும் அப்படியே. அதனால்தானோ என்னவோ இவர் இரண்டு மூன்று தடவைகள் அளிக்கப்பட்ட நீதிபதி பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். 1945-50 ஆண்டுகளில் இவர் அட்வகேட் ஜெனரல் பதவி வகித்த போது இந்தியப் பாதுகாப்புச் சட்டங்கள் அமுலுக்கு வந்த புதிது. அவைகளை யெல்லாம் அலசி ஆராயும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது.

முன்னாள் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சர் லயனல் லீச் ரங்கூனில் பாரிஸ்டராக இருந்த போது அவருக்கே உதவி செய்ய ராஜா ஐயர் ரங்கூன் உயர்நீதி மன்றத்துக்குச் சென்றிருக்கிறார். இலங்கைக்கு இரண்டு தடவைகள் 'ஹிந்து சட்ட' சம்பந்தமாகச் சாட்சியங்கள் சொல்லப் போயிருக்கிறார். பிரசித்தி பெற்ற பெங்களூர் ராமலிங்கம் உயில் கேஸில், எஸ்டேட் நிர்வாகிகள் சார்பில் பிரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் போனபோது பிரிவிகவுன்சில் வழக்கறிஞருக்கு ஒத்தாசை செய்ய இவர் லண்டனுக்கே போயிருக்கிறார்.

பாங்கு நடத்தி பங்களூரில் பரபரப்பேற்படுத்திய கோபால் ராவ் வழக்கில் மைசூர் அரசாங்கம் இவரைச் சர்க்கார் சார்பில் ஏற்பாடு செய்தது. அந்தக் காலத்தில் இப்போது போல் விமானப் போக்குவரத்து கிடையாது. திரு ராஜா ஐயருக்குப் போய் வரப் பிரத்தியேக விமானமே ஏற்பாடு செய்யப்பட்டது. பாகிஸ்தான் பெடரல் கோர்ட்டுகளுக்கும் இவர் போயிருக்கிறார்.

இப்போது வக்கீல் தொழிலில் எல்லாருமே வரத் தொடங்கி விட்டார்கள். குறிப்பான துறைகளில் விசேஷ கவனம் செலுத்தி அந்தந்தச் சட்டங்களில் ஸ்பெஷலிஸ்டுகள் ஆனால்தான் முன்னேற முடியும் என்ற அபிப்பிராயம் உடையவர் திரு ராஜா ஐயர். அவருடைய ஜூனியர்களில் ஜஸ்டிஸ் வீராசாமியும் ராமமூர்த்தியும் இன்று மணி மணியாக விளங்குகிறார்கள். ஜஸ்டிஸ் வீராசாமியும் ஜஸ்டிஸ் ராமமூர்த்தியும் இன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதிகளாகப் பணியாற்றுகிறார்கள். திரு நாசராஜா, ஆந்திரப் பிரதேச அட்வகேட் ஜெனரலாக இருக்கிறார். திரு கணபதி ஐயர் டில்லி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கறிஞராக இருக்கிறார். மற்றும், சேஷாத்திரி, ஹரிஹரன் முதலியோர் அவருக்குத் துணையாகக் கூடவே இருக்கிறார்கள். புலியிடம் பயின்றவர்கள் பூனையாகி விடுவார்களா என்ன?

'கல்வி கற்பதின் அடிப்படை நோக்கமே எப்படி உணவைச் சம்பாதிப்பது என்பதற்காகவல்ல; எப்படி ஒவ்வொரு கவளத்தையும் ரசித்துச் சாப்பிடுவது என்பதற்காகத்தான்' என்றான் ஓர் அறிஞன்.

திரு ராஜா ஐயர் வாழ்க்கையை எந்தக் கோணத்திலிருந்தும் ரசிக்கப் பழகியவர். மக்காக டிரஸ் பண்ணிக் கொள்ளும் ஆர்வம் உண்டு. கலைகளை ரசிப்பதிலும் உற்சாகம் உண்டு. சென்னை ராஜ்ய வக்கீல்கள் சங்கத்துக்குத் தலைவராக இருந்திருக்கிறார். சென்னை ரசிக ரஞ்சனி சபாவுக்கும் பல ஆண்டுகள் தலைவராக இருந்திருக்கிறார். சிறந்த பேச்சாளர், ரசிகர். அவருக்குப் பிடிக்காத ஒரே விஷயம் அரசியல்!

வழக்குகள் போடுவதற்கான கோர்ட் ஃபீஸ் கட்டணம் ஏழரை சதமாக இருப்பது பல நியாயமான வழக்குகளையும் கோர்ட்டுக்கு வர விடாமல் தடுக்கிறது என்று அனுபவபூர்வமாக அபிப்பிராயப்படும் திரு ராஜா ஐயர் ஒரு காலத்தில் வைத்தியராகப் போகவேண்டுமென்று ஆசைப்பட்டார் என்ற விஷயம் ஆச்சரியமாக இல்லையோ?

இன்று அவர் ஒரு சட்ட வைத்தியர்! அவ்வளவுதான்! சரீர வைத்தியர் அல்ல!

பக்காசூரன் மலை

பிலோ இருதயநாத்



நீலகிரியிலிருக்கும் 'பக்காசூரன் மலை'க்குப் போக வேண்டும் என்ற எண்ணம் நீண்ட நாட்களாக என் உள்ளத்தில் இருந்து வந்தது. ஆனால் அவ்வெண்ணம் அடிக்கடி கைவிடப்பட்டது. காரணம் பழைய காலத்தில் ஆங்கிலேயருடன் வேட்டைக்குச் சென்ற சிக்காரிகளாலும்; ஆயாமார்களாலும், சமையல் வேலை செய்த பல 'பொட்லர்'களாலும் கூறப்பட்ட பல விதமான பொய் வதந்திகளே.

''பக்காசூரன் மலைக்கு நானும் என் துரையும் பல ஆண்டுகளுக்கு முன் சென்றோம். அப்பப்பா! அந்தப் பயங்கரத்தை என்னவென்று கூறுவது. நடந்து கொண்டேயிருந்தோம். உடனே பெரிய பெரிய வண்டுகள் எங்களைப் பக்காசூரன் மலைக்குப் போகாத வண்ணம் கடிக்க ஆரம்பித்தன. ஒவ்வொரு வண்டும் சுமார் வாத்து முட்டை அளவு இருக்கிறது. நானும் துரையும் ஓடி வந்து விட்டோம்.'' — இப்படி ஒரு சிக்காரி கூறினார்.

''நான் பக்காசூரன் மலையில் பகாசூரனுடைய கால் ஒரு மலையில் பதிந்திருப்பதைக் கண்டேன்'' என்று கூறினான் ஒரு பொட்லர்.

இவைகளையெல்லாம் கேட்ட பிறகு பக்காசூரன் மலைக்குப் போக ஒரு பக்கத்தில் பயமும், மற்றொரு பக்கத்தில் பக்காசூரன் மலையைச் சரியானபடி பார்த்தவர்களே யில்லை என்ற ஒரு தைரியமும் ஏற்பட்டன.

ஆகையால் நானும் நீலகிரி கோத்தகிரியில் வாழும் திரு மோசஸ் அவர்களும் சமீபத்தில் கோத்தகிரியிலிருந்து குன்னூர் வழியாகச் சென்று, ''நான்செச்க'' எஸ்டேட்டில் வேலை செய்யும் திரு இரங்கசாமி அவர்களின் இல்லத்தில் தங்கினோம். மறு நாள் காலையில் பக்காசூரன் மலைக்குப் பல நண்பர்கள் எங்களுடன் லாரியில் பிரயாணமானார்கள். லாரியும் மலையடிவாரத்தில் போய் நின்றது.

மரத்தில் வண்டுகளின் ரீங்காரம் தவிர மற்ற ஓசைகள் கேட்கவில்லை. எல்லோரையும் மேலும், கீழும் நான்கு பக்கங்களிலும் பார்த்துக் கொண்டே மலை ஏறி நடக்கும்படி கேட்டுக் கொண்டேன். மலையின் உச்சிக்குப் போகப் பாழடைந்த படிகள் இருந்தன. மேல் படியை அடைந்ததும் இரு சுவர்கள் தெரிந்தன. அவை நாங்கள் சென்ற மேல் படியின் இரு பக்கத்திலும் வளைந்து சென்றன.

வழியில் ஒரு சிறு சோலையைக் கண்டோம். அதனுள் நுழைந்து போக வேண்டும். இரண்டாவது கோட்டைச் சுவர் போல், முதலில் பார்த்த சுற்றுச்சுவரே நாங்கள் நுழைந்து வந்த சோலைக்கு மறு பக்கத்தில் தெரிந்தது. இதைப் போலவே ஏழு சிறு சோலைகளுக்குள் நுழைந்து நுழைந்து சென்றோம். ஒரே கோட்டைச் சுவர்தான் வளைந்து வளைந்தும், சுற்றிச் சுற்றியும் வருவதால் ஏழு கோட்டைச் சுவராகக் காட்சி அளிக்கிறது.

கொஞ்சம் இளைப்பாறியபின் மலையைச் சுற்றிலும் உள்ளவற்றையும், சுவர்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தோம். மலையின் உச்சியில் வட்டமாகச் சிறுசிறு பாறைகளைக் கொண்டு சுவர் கட்டியிருக்கின்றனர். சுவரில் சிறு சிறு துவாரங்கள் காணப்படுகின்றன. அவைகளின் மூலம் மேலிருந்து கீழேதான் பார்க்கலாம். தரை மார்க்கமாக விரோதிகள் வருகிறார்களா என்று பார்ப்பதற்கே அவை உபயோகப் படுகின்றன. அப்படி வரும் விரோதிகளைத் துப்பாக்கியால் சுடவும் முடியும்.

இந்தக் கோட்டைக்கு மத்தியில் மண்ணால் கட்டிய பல அறைகள் இடிந்து போய்க் காணப்படுகின்றன, அந்த அறைகள் பாம்புப் புற்றுகளும், புதர்களும் கொண்டு பார்ப்பதற்கே பயங்கரமாக இருக்கின்றன.

மலை உச்சியிலிருக்கும் ஒரு பெரிய பாறை ஏறி நின்று பார்ப்பதற்கு வசதியாக இயற்கையாகவே அமைந்திருக்கிறது. அதன் மேல் ஏறி நின்று பார்த்தால் மேட்டுப் பாளை

யம், கோவை, தளநாயக்கன் கோட்டை, (இன்று பவானி நீர்த் தேக்கம்) சந்திர மங்கலம் முதலிய மூன்று பக்கங்களில் இருக்கும் ஊர்களை நன்றாகப் பார்க்கலாம்.

இங்ஙனம் நாங்கள் பேசிக் கொண்டிருந்த பொழுது, திடீரென்று எங்களுடன் அன்று வந்த லாரி டிரைவர் சற்றுத் தூரம் போய் வந்தவர், தம் நண்பரிடம் மெதுவாக ஏதோ சொன்னார். நான் அவர் பேசியதையும், சைகையையும் அவருடைய முகத்தையும் ஒரே நேரத்தில் கவனித்தேன்.

என்ன விஷயம் என்று விசாரித்ததும் அவர் என்னை அழைத்துக் கொண்டு போய், ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினார். என் உடல் முழுவதும் வேர்த்து விட்டது. பேச என் நா இடம் கொடுக்க வில்லை. நான் தைரியத்தைக் கைவிடாமல், அங்கே கண்டதை எங்கள் கூட்டத்தில் முக்கியமான திரு இரங்கசாமி அவர்களிடம் மட்டும் கூறினேன். பிறகு எல்லோரையும் அழைத்துக் கொண்டு வேகமாகக் கீழே வந்து சேர்ந்தோம்.

கூட்டத்தில் சிலரைத் தூக்கிக் கொண்டு தான் கீழே இறங்கி வந்திருக்க வேண்டும்.

''சரி! இந்தக் கோட்டையைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் என்ன?'' என்று எல்லோரும் என்னிடம் கேட்டார்கள்.

''பகாசூரனுக்கும் இந்தக் கோட்டைக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. சேரன் செங்குட்டுவன் கண்ணகி தேவிக்குச் சிலை அமைக்க நான்கு விதப் படைகளுடன் இமயம் சென்றான். செல்லும் போது அவன் படைகளுடன் நீலகிரியில் சில காலம் தங்கினான். அப்பொழுது நீலகிரியில் வாழ்ந்த கொங்கு நாட்டு மக்களாகிய பழங்குடிகள் (குறும்பர்கள், தோதுவர்கள், கோத்தர்கள்) சேரன் செங்குட்டுவனுக்குக் குரவைக் கூத்து ஆடினார்கள் என்று சிலப்பதிகாரம் — கால்கோட் காதையில் கூறப்பட்டுள்ளது. அங்ஙனம் சேரன் நீலகிரியில் பாடி தங்கிய இடத்தில் கோட்டையை அமைத்துக் கொண்டான். நீலகிரியை விட்டுப் பிரயாணமானதும் ''சேரம் பாடி'' வழியாகச் சென்றதாம்



கீழே வந்ததும் மற்றவர்கள், ''உச்சியில் என்ன பார்த்தீர்கள்?'' என்று என்னைக் கேட்டார்கள்.

''உச்சியில் டிரைவர் காட்டிய இடத்துக்குக் கீழே ஒரு பெரிய பள்ளம் இருந்தது. அந்த இடத்தில் புதர்களுக்கு வெளியில் ஒரு பெரிய புலி வாயைத் திறந்து கொண்டு படுத்திருந்தது. அதன் வாயின் அகலம் சுமார் ஓரடி இருக்கும். அதனுடைய கோரைப் பற்களில் இறைச்சிகள் மாட்டிக் கொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது. மேலும் அந்த இறைச்சிகளை ஈக்கள் மொய்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. புலி ஏதோ ஒரு விலங்கின் குருதியைக் குடித்த மயக்கத்தில் இருந்ததால், அது நாம் வந்ததைக் கவனிக்கவில்லை. மேலும், அது மிகவும் பாதாளத்தில் இருப்பதால் நம்முடைய வாடையை மோப்பம் பிடிக்கவில்லை. வேகமாகக் கீழே வந்து விட்டோம்'' என்று கூறினேன்.

இதைக் கேட்டதும் உடனே சிலரைப் பயம் பிடித்துக் கொண்டது. இதை மாத்திரம் நான் மலை உச்சியில் கூறி இருந்தால், அந்தக்

இன்றும் அந்த இடத்தில் பல சின்னங்கள் இருக்கின்றன. 'சேரன் — பாடி தங்கிய இடம்'' என்ற பெயர் மருவிச் 'சேரம் பாடி'' யாக வழங்குகிறது. ஆகையால் இந்தக் கோட்டை சேரன் செங்குட்டுவனால் கட்டப் பட்டது. ஆனால் இதற்குப் ''பகாசூரன் கோட்டை'' என்று எப்படிப் பெயர் வந்தது என்ற ஒரு கேள்வி உண்டாகிறது அல்லவா?

இந்தப் பகாசூரன் கோட்டையை மலைச் சரிவிலும் பாறைகளின் சரிவிலும் கட்டி யிருக்கிறார்கள். அந்தக் கோட்டையைக் கண்டால் சுவர்கள் வழுக்கி விழுந்து விடும் போல் தோன்றுகின்றன. ஆகையால் பிற்காலத்தில் இந்தக் கோட்டையைப் பார்வை யிட்டவர்கள், ''அடே அப்பா! இந்தக்கோட்டையை இந்த ஆபத்தான சரிவில் நின்று, கட்டியவன் பகாசூரனாகத்தான் இருக்க வேண்டும்'' — என்று வியந்து கூறி இருக்க வேண்டும். இதுவே நாளடைவில் திரிந்து 'பகாசூரன் கோட்டை'யாகி இருக்க வேண்டும். பிறகு அதை உறுதிப்படுத்துவது போலப் பல கதைகள் தோன்றி இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

ஹோட்டல் அறை ஒன்றில் உட்கார்ந்திருந்த தன் முதுகில் அப்படி ஓர் அறை எதிர்பாராத சமயத்தில் வந்து விழும். கண்ணன் அறிய மாட்டான் பாவம்! ஒரு கணம் கலங்கித்தான் போய் விட்டான்! அடித்தது....?

அவன் அருமை நண்பன் மூர்த்தி !

ஒன்றாய்ப் படித்து வளர்ந்தவர்கள்! இடையில் வேலை செய்த கொடுமையினால் வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டவர்கள் ! மற்றப்படி அவர்கள் மீது குற்றம் ஏதுமில்லை! 'பள்ளிக்கூடம் போகிறேன்' என்று சொல்லி விட்டு மாங்காய் திருடித் தின்றது முதல் பால்காரனின் கன்றுக் குட்டியை அவிழ்த்து விட்டு அடி உதை வாங்கிய அத்தனை விஷயங்களிலும் இருவருக்கும் பங்கு உண்டு!

''என்னடா கண்ணா? அப்படி விழிக்கிறாய்?'' உரிமையுடன் கேட்டான் மூர்த்தி.

கண்ணனின் கண்களில் உலகத்தின் துன்பமெல்லாம் கண்ணீர்த் துளிகளாகப் பளபளத்தன !

''டேய், கண்ணா! என்னடா இது? தாடி, மீசை..... உம்..... ஏன் இப்படிச் சோகமாய் இருக்கிறாய்? என்ன விஷயம்? மனைவியை ஊருக்கு அனுப்பி விட்டாயாக்கும்! அந்தச் சோகத்தில் இப்படித் தவிக்கிறாயா? உம்..... நீ காதல் கலியாணம் செய்து கொண்டவனல்லவா? ஒரு நிமிடப் பிரிவைக் கூடத் தாள முடியாது உன்னால்!'' மூர்த்தி பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தான்.

கண்ணன் பேசினால்தானே?

''டேய்! என்னடா இது? நான்பாட்டுக்குக் கத்திக் கொண்டிருக்கிறேன்....நீ.... அது போகட்டும். வெளியூரில் இருந்தால் தான் என்ன? எனக்குக் கடிதம் போடக் கூடாதா? அல்லது இப்போதுதான் இந்த ஊருக்கு வந்திருக்கிறாயே..... என் வீட்டுக்கு வரக் கூடாதா? என்னப்பா இது வேஷம்?''—

கண்ணன் நிதானமாகப் பதில் பேசினான்:

''மூர்த்தி! நீ நினைப்பது போல் என் இல்லற வாழ்வு இன்பப் பூஞ்சோலையல்ல அப்பா ! அது பாலைவனம்! வறண்ட மணலைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது! கானல் நீரைக் குளிர் நீராக எண்ணியது என் தவறு!''

மூர்த்தி திடுக்கிட்டு நின்றான்.

ஹோட்டலில் அனைவரும் இவர்கள் இருவரையுமே உற்றுப் பார்ப்பது தெரிந்தது.

அவசரமாக இரண்டு 'காப்பி'க்கு ஆர்டர் செய்து விட்டு அதைக் குடித்ததும் வலுக்கட்டாயமாகக் கண்ணனைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டான் அவன்!

* * *

கண்ணனின் உள்ளம் எரிமலையாகப் பொங்கியது.

சே! என்ன வாழ்வு! பெண்ணாம் பெண்! பேய்! எதற்கெடுத்தாலும் சம உரிமை! இந்தச் சம உரிமைப் போரே வேண்டாம்! அவள் தனி உரிமையுடன் வாழட்டும்! இனி அவள் முகத்திலேயே விழிப்பதில்லை! தன் தீர்மானத்தை மூர்த்தியிடமும் கூறிவிட்டான்.

மூர்த்திக்கும் மணமாகி விட்டதாமே! இந்த வீட்டில் அவன் இரண்டு நாட்களாக இருக்கிறானே! 'அவளை' எங்கே காணவேயில்லை ! வீட்டில்தான் இருக்கிறாளாம்! மூர்த்தி சொல்கிறான்! சமையல் அறையில் வளை குலுங்கும் ஒலி! 'சரக் சரக்' என்று புடவைச் சத்தம்! இவற்றைத் தவிர ஒரு பேச்சு! ஊஹூம்! பரிமாறும் போது ஒரு

கண்ணான கண்ணனுக்கும்..

விமலா ரமணி





அட்டைப் படக் கதை

மாமி வந்து விடுகிருள்! இவள் என்ன கோஷாவா?

மூர்த்தியிடம் அவன் கேட்டும் விட்டான்!

''ஏனப்பா? உன் மனைவியை எனக்கு அறிமுகம் செய்து வைக்க வில்லையா?''

மூர்த்திக்கு மணமாகி விட்டது என்று தெரிந்த உடனேயே கண்ணன் முதல் காரியமாக 'ஷேவ்' செய்து கொண்டு தலையை நன்ருய் வாரிக் கொண்டு 'டிப்டாப்'பாக ஆகி விட்டான்! பிறர் மனைவியின் கண்களில் அவன் தாழ்ந்திருக்கலாமா?

அவன் கேள்விக்கு மூர்த்தி அலட்சியமாகச் 'சூள்' கொட்டிஞன்.

''நீ என்னடா கண்ணு, என் 'ஒய்ப்' உன் 'ஒய்ப்' மாதிரி படித்தவள் என்று நினைத் தாயா? அது சுத்த பட்டிக்காடுடா! பெரியவர்கள் செய்து வைத்த கலியாணம்! அப்படித்தான் இருக்கும்! எவ்வளவோ திருத்திப் பார்த்து விட்டேன்! ஊஹூம்! அது சமையல் அறையை விட்டு நகராது! சரி மூஞ்சியும் ... சரி.....சரி உன் பாடு தேவலேடா ராஜா! மார்க்கண்டேயனுடை அப்பாகிட்டே ஸ்வாமி வரம் கொடுக்கும் போது கேட்டாராமே, 'நோயும், நொடியும் மந்த புத்தியுமுள்ள நூறு வயதுப் பிள்ளை வேண்டுமா? ஆனால் புத்திசாலியும், அற்ப ஆயுளும் கொண்ட பிள்ளை வேண்டுமா என்று?' நீ கொஞ்ச நாட்கள் வாழ்ந்தாலும் படித்த மனைவியுடன் காதல் வாழ்வு நடத்திஞய்! நான்... இனி என் ஜென்மம் முழுதும் இப்படித்தான்...''

கண்ணனுக்கு என்னவோ போலிருந்தது.

காதல் வாழ்வாவது, காதல் வாழ்வு! மண்ணுங்கட்டி! நாளொரு சண்டையும், பொழுதொரு பூசலுமாகச் சாக்கடை வாழ்வு! ரொம்ப 'ஹாரிபிள்'! இந்தப் பட்டிக்காட்டுக்கும், அந்தப் பகட்டுப் பட்டணத்துக்கும் இடையில் 'ஸ்டேஷனே' கிடையாதா? ஆண்டவா?

ஃ ஃ ஃ

''அப்போ நீ உன் மனைவியை அழைத்துக் கொள்வதாக இல்லே?'' — மூர்த்தி கேட்டான்.

''சத்தியமாய் இல்லே! ஒரு வருடமாகி விட்டது! என்ன திமிர் இருந்தால் ஒரு கடிதம்கூடப் போடாமல் இருப்பாள்! சம உரிமைக்காரி அல்லவா? நான் முதலில் போடட்டும் என்று இருப்பாள்! நான் தாழ்ந்து போகப் போவதில்லே! அவளுக்கும் எனக்கும் உறவு கிடையாது இனி?''

''சரி..... தன்னு குப்பையை.'' — மூர்த்தி எழுந்து விட்டான்.

''கடை வீதி வரை வருகிறயா, கண்ணு?''

''எதற்கு?''

''என் மனைவிக்கு நாளை பிறந்த நாள்..... அவளுக்கு ஏதாவது புடவை வாங்க.....''

கண்ணன் சிரித்தான்.

''என்னையா கூப்பிட்டாய்? பேஷ்.... போய் உன் மனைவியை அழைத்துக் கொண்டு போ.... அவளுக்குப் பிடித்ததை வாங்கிக் கொள்ளட்டும்.....''

மூர்த்தியின் முகம் கறுத்தது.

''அவளுக்குப் பிடித்தது என்று இந்த உலகில் ஒன்றுமே கிடையாது..... நீ வா சொல்கிறேன்.....''

புடவை விஷயத்தில் கூடவா? இதென்ன விசித்திரப் பெண்! இவள் பெண்ணு? தெய்வமா?

தன் வாழ்வில் ஏற்பட்ட அநுபவம் ஒன்று அவனுக்கு நன்ருக நினைவிருக்கிறது.

இப்படித்தான் அன்றும்.... அவன் மனைவிக்கு மறு நாள் பிறந்த நாள். அவளை அப்படியே ஆச்சரியக் கடலில் தூக்கிப் போட வேண்டும் என்று நினைத்தான் கண்ணன்.

இருநூறு ரூபாய் விலையில் கடைக்காரன் சொன்ன 'லேடஸ்டு பாஷன்' புடவை ஒன்றைப் பொறுக்கி எடுத்தான். புடவையைப் பிரிக்கும் போது அவள் முகம் மலரப் போகும் தாமரைப் புன்னகையின் கற்பனையில் வீடு நோக்கி நடந்தான்.

ஆனால் நடந்தது!

''இருநூறு ரூபாயைக் கொண்டு கொடுத்து இத்தனை கன்ருவிப் புடவையை வாங்கி வந்திருக்கிறீர்களே! புடவையா இது? முதலில் இதை வாபஸ் செய்யுங்கள்.... நாளைக்கு எனக்குப் 'புதிது' இல்லா விட்டாலும் போகிறது! புடவையா இது? சாணித் துணி!''

அவள் பேசியவை வார்த்தைகளா?

கூர் அம்புகள்!

கண்ணனின் உள்ளம் நைந்து நைந்து வெடித்துச் சிதறித் துண்டு துண்டானது!

சினிமாவாக இருந்தால் எரிமலை வெடிப்பதைக் காட்டுவார்கள்! தலையில் ரயில் ஓடுவதைக் காட்டுவார்கள்!

நம் கண்ணன்....?

அன்றுதான் அவன் தன் கோபத்தைக் காட்டினுன்! கோபிக்க அவளுக்கு மட்டும் தான் உரிமையா என்ன? முடிவு....?

'பாகப் பிரிவினை'! தன் மனைவி படித்தவள் அவளைப் 'பார்த்தாலே பசி தீரும்' என்று நினைத்த கண்ணன் இன்று...? 'படித்தால் மட்டும் போதுமா'? என்று எண்ணினுன்! 'பந்த பாச'த்தை மறந்து கணவனும், மனைவியும் 'பாச மலரின் இனிய சுகந்தத்தை இழந்து ஒருவர் மற்றவரிடம் 'பாவ மன்னிப்பு'கேட்க விரும்பாமல் தனிமைக் கோலம் பூண்ட இந் நேரத்தில்.....?

'பச்சை விளக்கு' காட்டப் போவது யார் என்பதே கேள்வி!

போகட்டும், இதற்குமேல் கண்ணனின் மன நிலையை சினிமா பாஷையில் விண்டுரைக்க முடியாது!

இப்படி இருக்கையில்.....?

இங்கு மூர்த்தியின் மனைவி!

'நான் பார்த்த பெண்ணை நீ பார்க்க வில்லை' என்று கண்ணனுக்குப் பாட வேண்டும் போல் இருந்தது!

அன்று மாலையில் —

நண்பர்கள் இருவரும் கடைத் தெருவுக்குச் சென்ருர்கள். வேண்டுமென்றே கண்ணன் மிக மோசமான கலரில் மிக மோசமான 'டிசைனு'கப் பொறுக்கினுன்!

மூர்த்திக்கு இதெல்லாம் கவனிக்க எங்கே நேரம்? வீட்டில்.....?

ஊஹூம்! ஒரு சத்தம்! ஒரு ரகளை! மூச்! ஆஹா! இவளல்லவா பெண்! மூர்த்தி பாக்கியசாலி! கணவன் வாங்கித் தந்தது காஷாயமானுலும் அதை அன்புடன் ஏற்றுக்

கொள்ளும் இவளல்லவோ அருந்ததி! அவள்.. அரும் நீ!

* * *

வடை பாயசத்துடன் விருந்து முடிந்தது.

''மூர்த்தி! நீ ரொம்ப அதிர்ஷ்டசாலியப்பா! உன் சொல்லுக்கு அடங்கி நடக்கும் அன்பு மனைவி! உன் அன்புப் பரிசை அவமதிக்காமல் ஏற்கும் அவள் பண்பு! உன் விருப்பம் அவள் விருப்பம்! நீ ரொம்ப ரொம்ப...; ரொம்ப அதிர்ஷ்டசாலியப்பா!''

மூர்த்தி விரக்தியாகச் சிரித்தான்.

''என் அதிர்ஷ்டத்தின் பின்னே ஒரு பயங்கரம் ஒளிந்திருக்கிறது கண்ணன்.''

கண்ணன் விழித்தான்.

''நான் யாரிடமும் இது வரையும் சொல்லவில்லை. ஆனால் உன்னிடம் சொல்லாதிருக்க விரும்ப வில்லை! இந்த ஹாலில் நானும் என் மனைவியுமாக எடுத்துக் கொண்ட புகைப் படம் ஏன் இல்லை என்று கேட்டாயே! அதற்குக் கூட இதுதான் காரணம்!''

மூர்த்தி நிறுத்தினான். கண்ணன் ஏனோ பயங்கரத்துடன் மேலே கேட்கச் சித்தமானான்.

''அவள்.... என் மனைவி..... ஒரு குருடி கண்ணா. குருடி...... அவளால் எதையும் பார்க்க முடியாது! வழக்கமாகச் செய்யும் காரியங்கள்...... அவளால் ஒரே நிதானத்துடன் செய்யப்படுகின்றன. ஆனால் வெளியில், வாசலில் எங்கும் அவள் வருவதில்லை. அவள் குருடி...... நான் வாங்கி வந்த புடவையை விமரிசிக்க அவளுக்கு ஏது சக்தி! பழைய புடவையைத் தந்து 'புதிது' என்றாலும் அவள் மகிழ்ச்சியுடன்தான் கட்டிக் கொள்வாள்! அவள் உலகம் இருட்டு! அவள் கற்பனை உலகம்தான் பிரகாசமானது! அதில் நாம் காணாததை யெல்லாம் அவள் காண்கிறாள்! ஒரு பெண் தன் விருப்பு, வெறுப்புக்களை அடக்கி ஜடமாக வாழ வேண்டும் என்றால் அவள் குருடியாகத்தான் இருக்க முடியும். வீண் பெருமையும், சற்றே கர்வமும், கணவனுடன் சம உரிமை கோரும் பாவமும் பெண்களின் இயல்புகள்! பல ஆண்டுகளாக அடிமைப்பட்ட இனம் துள்ளிக் குதிக்கும்போது ஏற்படும் தடுமாற்றம் இது! இதை மெல்லமெல்லச் சரிப்படுத்தி விடலாம்! மனைவி செய்யும் சில அசட்டுத்தனமான காரியங்களைக் கண்டும் காணாத குருடனாக நாம் நடித்து விட்டால் நாளடைவில் நம்மைத் தடுக்கும் கணவன் ஏன் ஒன்றுமே சொல்லவில்லை என்பதை அந்தப் பெண்மை ஆராயும்! ஏதாவது ஒரு புதுமையை ஆராய்வதே பெண்மையின் இயல்பு! அந்த ஆராய்ச்சியின் முடிவில் உன் அலட்சியத்தை அவளால் தாள முடியாது! பிறகு ஒவ்வொரு சிறு விஷயத்துக்கும் உன்னிடம் அபிப்பிராயம் கேட்க அவளே ஓடோடி வருவாள்! ஆரம்ப நாட்களில் நீ கொஞ்சம் குருடனாக, செவிடனாக நடி! உன் வாழ்வு வளம் பெற்று விடும்! ஆனால்..... குருட்டு மனைவியுடன் ஆயுள் முழுதும் நானும் கண் இருந்தும் குருடனாக, காது இருந்தும் செவிடனாக வாழ்கிறேன் பார்! இந்தத் துர்ப்பாக்கிய நிலை உனக்கு வேண்டாமடா, கண்ணா. வேண்டாம்! என்னைப் பார்த்தா பொறாமைப்படுகிறாய்! நானா அதிர்ஷ்டசாலி?'' என்று கூறி மூர்த்தி குலுங்கிக் குலுங்கி அழுதான்.

கண்ணன் விக்கித்து நின்று விட்டான். அவனையும் அறியாமல் அவன் உள்ளத்திலே கழிவிரக்கம் சுரந்தது! ஓஹோ! முதலில் இதைத் தெரிவிக்க மனமின்றித்தான் மனைவி பட்டிக்காடு, அப்படி இப்படி என்றானா?

மூர்த்தி எவ்வளவு உயர்ந்தவன்!

குருட்டு மனைவியுடன் இவ்வளவு மகிழ்ச்சியுடன் வாழ்கிறானே! அவனல்லவா மனிதன்!

கண்ணன்......?

அற்பச் சண்டையை அபாரப்படுத்தி மனைவியைத் துரத்தி அவள் சரணடையட்டும் என்று காத்திருக்கிறானே! இதுவா பண்பு? தாழ்ந்தவரைத் தயவுடன் அணைத்துக் கொள்வது அழகா? அல்லது 'நீ என் அடிமை' என்பதை ஒவ்வொரு வினாடியும் சுட்டிக் காட்டிப் பேசி அடிமையைச் சீற விடுவது பண்பா?

''மூர்த்தி — நான் வருகிறேன்.''

கண்ணன் கிளம்பி விட்டான். அவன் எங்கே போகிறான் என்பதை மூர்த்தியும் கேட்கவில்லை! அவனுக்குத் தெரியாதா?

கண்ணன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அவன் அருகில்—

சிரித்தபடி நின்று கொண்டிருந்தாள் கமலா.

''உங்கள் நண்பர் ஓடும் வேகத்தைப் பார்த்தால் 'ராக்கெட்' தோற்று விடும் போல் இருக்கிறதே!''

தன் அருகில் நின்றவளின் கண்களை உற்றுப் பார்த்தான் மூர்த்தி.

''கமலா..... சமையல் அறையிலிருந்து விடுதலையா இன்று?''

அவள் சிரித்தாள்.

''இன்னும் ஒரு மாதத்தில் நம் கல்யாணம்!''

''அதற்குள் என்னைக் குருடியாக்கி விட்டீர்களே, அத்தான்!''

அத்தை வந்தாள்.

''நீ குருடி! நான் சமையல்காரி! நல்ல பிள்ளை!''

''அத்தான்!''

''உம்!''


''அந்தப் புடவை நன்றாகவே யில்லை அத்தான்.....அதைத் திருப்பிக் கொடுத்து விட்டு வேறு வாங்கி வாருங்கள்..... நான் இன்னும் உடுத்திக் கொள்ள வில்லை..... உங்கள் நண்பர் செலக்ஷன்......'' மூர்த்தி வியப்புடன் பார்த்தான் அவளை!

பெண் பெண்தான்! அந்தச் சலனமும், அந்தக் குழந்தை உள்ளமும்! கொஞ்சி மகிழ வேண்டிய பெண்மையின் இந்தக் குணங்களையா தூற்றினான் கண்ணன்?

''சரி...... சரி, நீயும் வா.... இரண்டு பேருமே போகலாம்..... எனக்கு இப்பவே டிரெயினில்!''

நடிப்புக் 'குருடனு'ம், குருடியும் நடந்தனர். உலகம் தன் 'குருட்டுக் கண்களை'த் திறந்து அவர்களை வியப்புடன் பார்த்தது! அதே சமயம் — கண்ணன் தனது குருட்டுக் கற்பனைகளுடன் ரயிலில் சென்று கொண்டிருந்தான் தன் மனைவியை அழைத்து வர!

சிம்லாவில் சியாமளா தேவி





தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

மகாகவி பாரதியார் சக்தி உபாசகராக இருந்திருக்கிறார். அவர் தாம் கண்ட அன்னையாராம் அலைமகள், கலைமகளது வடிவழகைப் பலப் பல பாக்களில் வர்ணித்திருக்கிறார். அவர் கண்ட காளியை,

பின்னோர் இரவினிலே - கரும்
பெண்மை அழகொன்று வந்தது கண்முன்பு
கன்னி வடிவம் என்றே களிகொண்டு
சற்றே அருகிற்சென்று பார்க்கையிலே
அன்னை வடிவமடா! அவள்
ஆதிபராசக்தி தேவியடா!

என்று மிகுந்த உற்சாகத்தோடு பாடியிருக்கிறார். தமிழ் நாட்டில் உள்ள காளி வடிவங்கள் அத்தனை அழகான வடிவங்களாகக் காணப்படுவதில்லை. மதுரையில் உள்ள ஊர்த்துவ தாண்டவமூர்த்தியோடு போட்டியிட்டு நடமாடும் காளி ஒருத்தியே சிறப்பான வடிவமாக இருக்கப் பார்க்கிறோம். வடநாட்டில் 'சாக்தம்' பரவியிருக்கிறது. காளி வழிபாடும் சிறந்திருக்கிறதே. ஆகவால் அழகிய காளி வடிவை அங்கு காணலாம் என்றே எண்ணினேன். காளி கட்டம் என்று இன்றைய கல்கத்தாவுக்கே பெயர் கொடுத்த காளி கோயிலுக்குச் சென்றேன். அங்குள்ள காளியோ நாக்கை வெளியில் தள்ளிக் கொண்டு மிகவும் பயங்கரவடிவிலேயே காட்சி தருகிறாள். ஒரே மலர் மாலைக் குவியலுக்குள் புதைந்து கிடந்தாலும், அமைதியாகக் கிடக்கும் சிவன் மேலேயே நின்று ஆடிக் கொண்டிருக்கிறாள் அவள் என்பர். சண்டிகரில் உள்ள சண்டியும், கால்காவில் உள்ள காளியும் அழகானவர்கள் இல்லை. ஆதலால், என் யாத்திரையில், சிறந்த மலை வாசஸ்தலமான சிம்லா சென்றதும், அங்குள்ள சியாமளாவின் கோயிலுக்குச் சென்றேன். சியாமளா என்றால் கருத்த நிறமுடைய காளி என்றுதானே பொருள். இன்னும் சொல்லப் போனால் சியாமளா என்ற பெயர் தானே சிதைந்து சிம்லா என்று பெயர் பெற்றிருக்கிறது. அந்த சியாமளாதேவியோ ஓர் அடி உயரமே உள்ள ஒரு சிறிய வடிவினள். அந்த வடிவினைப் பார்த்து 'அன்னை வடிவமடா, அவள் ஆதிபராசக்தி தேவியடா' என்று பாரதியாரோடு சேர்ந்து நம்மால் உற்சாகமாகப் பாட முடியாது. என்றாலும் இமயத்தின் சிகரத்திலே சிறந்ததொரு நகரமான சிம்லாவில் இருக்கும் சியாமளியைப் பார்க்கா விட்டால் நம்முடைய யாத்திரை பூரணம் அடைந்ததாக ஆகாது.

சிம்லா செல்வதற்கு வழி, முதலில் டில்லியிலிருந்து ரயிலில் புறப்பட வேண்டும். இரவு பத்து மணிக்கு டில்லியில் ரயில் ஏறினால் காலை ஆறு மணிக்குக் கால்கா ஸ்டேஷன் வந்து சேருவோம். அதன்பின் ஒரு பிரச்னை மேலே செல்ல வேண்டிய பயணத்தை ரயிலிலேயே தொடர்வதா, இல்லை, டாக்ஸி வைத்துக் கொண்டு ரோடு வழியே செல்வதா என்று. கிட்டத்தட்ட அறுபதுமைல்ரோட்டில் செல்ல வேண்டும். வழியோ வளைந்து வளைந்து மலை மீது ஏறிக் கொண்டிருக்கும். அத்தகைய பயணத்தில் வயிற்றைக் குமட்டி வாந்தி எடுக்க வரும். இதற்கெல்லாம் தயார் என்பவர்கள் டாக்ஸியில் ரோடு வழியே செல்லலாம். சுமார் பத்து பதினொரு மணிக்குச் சிம்லா போய்ச் சேர்ந்து விடலாம். வசதியாகப் பஸ்ஸிலும் பிரயாணம் செய்யலாம். இது எல்லாம் நமக்கு ஒத்து வராது. வசதியாகச் செல்ல விரும்புபவர் மலைமேல் செல்லும் சின்ன ரயிலிலேயே ஏறி உட்கார்ந்து கொள்ளலாம். அது ஆமை வேகத்தில்தான் நகர்ந்து, வளைந்து வளைந்து ஊர்ந்து சென்றாலும், பயணம் வசதியாக இருக்கும். பல இடங்களில் மலையைக் குடைந்து அமைத்திருக்கும் கணவாய்கள் வழியாகச் செல்லும். அழகான இயற்கைக் காட்சிகளும் தென்படும். மத்தியானம் இரண்டு மணிக்குச் சிம்லா ஸ்டேஷன் வந்து சேருவோம்.

ஸ்டேஷனில் இறங்கியதும் எங்கே செல்வது என்பது பிரச்னை. கொஞ்சம் வசதியானவர்கள் என்றால் பெரிய ஹோட்டல்களுக்குச் செல்லலாம். இல்லையென்றால் ஸ்டேஷனிலிருந்து முந்நூறு அடி தணிந்திருக்கும் பிரதேசத்துக்குச் சென்றால் சவுத் இந்தியன் கிளப் என்று ஒரு கட்டடம் இருக்கும். ரயில்வே உத்தியோகத்தில் இருந்த தென்னிந்தியர்களால் — ஆம், முக்கியமாகத் தமிழர்களால் கட்டப்பட்ட கட்டடம் அது. அங்கு அனுமதி பெற்றுத் தங்கலாம். ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. சிம்லாவில் டாக்ஸிகளோ, டோங்காவோ கிடையாது. எல்லாரும் நடராஜாக்களாக மாற வேண்டியதுதான். ஆட்கள்

இழுக்கும் ரிக்‌ஷாக்கள் உண்டு. முன்னே இருந்து இரண்டு பேர்கள் இழுப்பர். பின்னே இருந்து இரண்டு பேர்கள் தள்ளுவர். கூலியும் அதிகம் கேட்பர். சாமான்களைத் தூக்குவதற்கு மட்டும் கூலிகள் உண்டு. அவர்கள் முதுகில் எவ்வளவு சாமான்களை வேண்டுமானாலும் ஏற்றலாம். அத்தனையையும் சுமந்து கொண்டு அநாயாசமாக மலை மேலே ஏறுவார்கள்.


கொஞ்சம் நின்று நின்று ஒரு மைல் தூரம் ஏறிக்கடந்தால் மால் என்ற பகுதிக்கு வந்து சேருவோம். மாலின் இறக்கோடியில் ஒரு மலையாளி மதராஸி ஹோட்டல் வைத்திருக்கிறார். அங்கு சென்றால்தான் இட்டிலி சாம்பார், தோசை, வடை கிடைக்கும். அதிலும் திருப்தி இல்லாவிட்டால் முருங்கைக்காய் சாம்பார் சாப்பிட ஸவுத் இந்தியன் கிளப்புக்குப் போக வேண்டியதுதான்!

சிம்லாவில் குளிர் அதிகம். ஆம்! கடல் மட்டத்துக்கு ஏழாயிரம் அடிக்கு மேலுள்ள பிரதேசம் அல்லவா? அதுவும் வடக்கே ஒதுங்கிய இடம். ஊட்டி குளிர் சிம்லா குளிருக்கு உறை போடக் காணாது என்றாலும் பகலில் மாலில் சுற்றுவது நாகரிகமாக இராது. மாலையில் நாலு மணிக்கு வெளிக் கிளம்பினால் மாலின் மேற்கு ஓரத்துக்கு வந்து சேரலாம். அந்த இடத்தை 'ஸ்காண்டல் பாயிண்ட்' என்று கூறுகிறார்கள். அதாவது வம்பளப்போர் கூடும் இடம் என்றுதான் பொருள். அதன் பக்கத்தில்தான் பஞ்சாப் சிங்கம் லஜபதிராயின் சிலை அமைத்து வைத்திருக்கின்றனர். இது காரணமாகப் பழைய ஸ்காண்டல் பாயிண்ட் என்ற பெயர் மாறி, லஜபதி ஸ்கொயர் என்று வழங்குகிறது. இங்கிருந்து கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ 'வாக்' பண்ணப் புறப்படலாம். மாலை வேளையில் உல்லன் உடை அணிந்து நாலு மைல் போய் வந்தால் உடம்புக்குத் தெம்பாயிருக்கும். உண்ணும் உணவும் ஜீரணிக்கும். வடக்கேயுள்ள கிறிஸ்டி பள்ளத்தாக்கில்தான் அன்னன்டேல், கிளென் என்ற அழகான இடங்கள் இருக்கின்றன. இயற்கையின் வனப்பெல்லாம் திரண்டிருக்கும் இடங்கள் அவை.

ஸியாமளா தேவி கோயில் சிம்லாவுக்குத் தெற்கே மூன்று மைல் தூரத்தில் உள்ள தாரா தேவி என்ற மலைச் சிகரத்தில் இருக்கிறது. அதற்கு நடந்துதான் போக வேண்டும். ஒரு நாள் மாலையை இதற்கென்று ஒதுக்கி நடக்கலாம். போகிற வழியில்தான் ராஷ்டிரபதி பவன் இருக்கிறது. பழைய வைஸ்ராய்கள் காலத்தில் மிக மிக அழகாக வைத்திருந்திருக்கிறார்கள். இன்று எல்லாம் தூங்கிக் கிடக்கிறது. அனுமதி பெற்று உள்ளே நுழைந்து பார்க்கலாம். கட்டடம் அவ்வளவு சிறப்பான கட்டடம் அல்ல. அதற்கும் மேற்கே இரண்டு மைல் தூரம் சென்று மலை ஏறினால் தாராதேவி சிகரத்தை அடையலாம். அங்குதான் ஒரு சிறு கோயில் சதுரமான ஓர் இடத்தில், ஓட்டுக் கூரை வேய்ந்து கட்டியிருக்கிறார்கள். ஒரே ஓர் அறை. அதுதான் கர்ப்பக் கிருஹம்; அதுதான் அர்த்த மண்டபம். அதுவே மகா மண்டபமுங்கூட. அங்கே ஓர் அடி உயரத்தில் ஒரு சிறு கருத்த சிலை. முகத்தைத் தவிர மற்றப் பகுதிகளை மூடியிருப்பார்கள். அதுதான் ஸியாமளா தேவி. என்ன ஏமாற்றம்! இமயத்தின் சிகரத்தில் உலகெலாம் காக்கிற அன்னை காளிக்கு இத்தனை சிறிய கோயிலா? ஒரு ராஜ ராஜன் மட்டும் அங்கு சென்றிருந்தால் பெருவுடையாருக்கு அமைத்த பெரிய கோயிலைப் போல் ஒரு பெரிய கோயிலை இந்தப் பிரகதீஸ்வரிக்கு அமையாது இருந்திருப்பானா? அதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? இந்தத் தாரா தேவி ஸியாமளையை வணங்கி விட்டு நமது இருப்பிடத்துக்குத் திரும்பும் போது சிம்லாவில் உள்ள வங்காள வியாபாரிகள் 'காளி பாரி' என்று ஒரு சிறிய கோயிலைக் கட்டியிருக்கின்றனர். இங்கு கட்டிடம் சலவைக் கல்லில்தான். எப்போதும் பஜனையும் பூசையும் நடக்கும். இங்கு செல்வார் தொகையே அதிகம். சொல்லப்போனால் ஸியாமளையைத் தேடிப் போவோர்களே கிடையாதுதான்.

ஜக்கோ மலை என்னும் பகுதியில் இன்னொரு கோயில் இருக்கிறது. சிம்லாவைவிட ஆயிரம் அடி உயரத்தில் இருக்கிறது. சுமார் ஒன்றரை மைல் ரொம்பச் சிரமப்பட்டு ஏறிச் செல்ல வேணும். அங்கு ஒரு பெரிய கோயில் ராமருக்கு. அக்கோயிலில் பிரதான தெய்வமாக விளங்குகிறவர் அஞ்சநேயர்தான். அதற்கேற்றாற் போல் அங்கு நமது கிஷ்கிந்தா வாசிகள் அதிகம்தான். கோயிலைச் சுற்றி எண்ணிறந்த குரங்குகள். அதனால் போகும்போதே கொஞ்சம் கடலை, பழம் வாங்கிச் செல்ல வேணும். கோயிலுள் நுழைந்து அங்குள்ள அஞ்சநேயரையும் அவர் நிழலில் வதியும் ராமனையும் வணங்கித் திரும்பலாம். மலை ஏறிய சிரமத்துக்கு ராமதரிசனம் கிடைக்கிறதே. அது போதாதா?

சிம்லா உல்லாசமாகப் பொழுது போக்க ஒரு சிறந்த இடம். அதுவும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் அங்கு பனி மழை பெய்யும். சிகரங்கள் உருக்கிய வெள்ளியால் மூடப்பெற்றிருக்கும். ஏன், வீட்டுக் கூரைகள், மரங்கள் பனியால் மூடப் பெற்றிருக்கும். பனிக் கட்டிகள் உறைந்து கிடக்கும் வழியாக நடந்து செல்வதே மிக்க மகிழ்ச்சி தரும். ஆஸ்த்மா முதலிய நோய் உள்ளவர்கள் அந்தத் திசை நோக்கியே தலை வைத்தல் கூடாது. உடலில் வலிவும் உள்ளத்தில் தெம்பும் எல்லாவற்றுக்கும் மேலாகப் பையில் நிறையப் பணமும் உள்ளவர்கள் சென்று காண வேண்டிய இடம்.



மனைவி: நாம் இருவரும் ஸ்டைலாப் போவதைப் பார்த்து என்ன பேசுவாங்க?

கணவன்: என்ன பேசுவாங்க, இவங்க தலையிலேயே ஒற்றுமை இல்லையே. வீட்டிலா இருக்கும் என்றுதான் பேசுவாங்க!



கல்யாண
பட்டு & நூல்
ஜவுளிகள்
ஒரே விலையில் கிடைக்குமிடம்
ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்
ஏர்கண்டிஷன் ஷோரூம்
186, காந்தி ரோடு - காஞ்சீபுரம்
கடைவீதி | ராஜவீதி
சேலம்-1. | கோயமுத்தூர்-1.
ELEGANT



tik-20
டிக்-20
மூட்டைப்பூச்சிகளைக்
கொல்லுகிறது
டாடா-பைஸன் தயாரிப்பு
ராலிஸ் இந்தியா லிமிடெட்

விலைக்கு வந்த வீடு!

கஸ்தூரி பஞ்சு

பதினைந்து வருஷ இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பட்டணத்தில் காலடி எடுத்து வைத்தாள் பார்வதி.

'வேண்டாம்' என்று ஒதுக்கித் தள்ளின போதும் வலுக் கட்டாயமாக மனத்தைச் சுற்றின பழைய நினைவுகள்.

இதே சென்ட்ரல் ஸ்டேஷனில் பன்னிரண்டு வயது ராஜுவை அழைத்துக் கொண்டு, தன்னந் தனியாக இரண்டாம் பேர் அறியாமல் இரவோடு இரவாகத் தூரத்து உறவினர் ஒருவரை நம்பி, வடக்கே புறப்பட்டதை நினைக்கும்போது இப்போதுகூட அவள் உடல் நடுங்கியது.

அவ்வளவு அவசரமாக அவள் கிளம்பியதற்கு முக்கிய காரணம், மூத்தாள் பெண் நாகுவுக்கு நியாயமாகச் சேர வேண்டிய பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகளை அமுக்குவதற்காகத்தான் என்பது, அவளுக்கும் அவள் மனசாட்சிக்கும் மட்டுமே தெரிந்திருந்த உண்மை. அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாள் இதுவரையில்.

பார்வதி இரண்டாம்தாரம். முதல்தாரத்துக்கு ஒரு பெண். பார்வதியின் கணவர் சாம்பசிவம் இருந்த வரையில் பட்சபாதம் எதுவுமின்றிச் சீராகத்தான் நடந்து வந்தது அந்தக் குடும்பம்.

'அழித்தால் ஆறு ஆள் செய்யலாம்' என்பது போல் கல்லுக் குண்டாக இருந்த சாம்பசிவம், திடுமென்று கண்ணை மூடினபோது தான் அவள் உள்ளமும், மாடுகள் இறங்கிக் குளித்த குட்டையைப்போல் குழம்பிக் கலங்கிப் போய் விட்டது.

நாகுவின் தாய் மாமா ஒருவர், சாவுக்கு வந்து விட்டுப் போனபோது நாகுவைத் தம்முடன் அழைத்துக் கொண்டு போனார்.

அவர்கள் போன பதினைந்து நாட்களுக்கெல்லாம் அவரிடமிருந்து பார்வதிக்குக் கடிதம் ஒன்று வந்தது.

''தாயில்லாத நாகுவைத் தந்தையுமில்லாமல் அங்கு விட்டு வைப்பதில் எங்களுக்கு விருப்பமில்லை. அவள் பொறுப்பு இனி எங்களுடையது. உங்கள் கணவர் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லையாதலால் நாகுவுக்குச்



சேர வேண்டிய நகைநட்டுகள், அவள் திரு மணத்துக்குச் செலவழிக்கப் போதும் பணம் இவைகளைப் பெற்றுக் கொள்ள அடுத்த வாரம் அங்கு வருகிறேன். மூன்றும் மனித ரின் தலையீடின்றி விவகாரத்தை முடித்துக் கொள்ள விருப்பப்படுகிறேன்'' என்று எழுதியிருந்தார்.

கடிதத்தைப் படித்ததிலிருந்து அவள் உள்ளம் ஒரு நிலையில் இல்லை. நாகுவின் மாமா எழுதியிருப்பது போல், சாம்பசிவம் உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை.

கல்லுக் கல்லாகத் தங்க நகைகளும், அவ ளும் அவருமே அறிந்திருந்த ரொக்கப் பணத் தையும் தவிர, வீடு, நிலம் என்று குறிப்பிடும் படியாக எதுவும் இல்லை.

இவ்வளவு வருஷங்கள் பட்சபாதமின்றி இருந்து விட்ட பார்வதிக்கு, கணவருமில் லாமல் கையில் இருக்கும் சொத்தையும் பிரித் துக் கொடுக்க வேண்டும் என்கிற நிலை வந்த போது நாகு, ராஜு இருவரையும் சமமாகப் பாவிக்க ஏனோ அவள் உள்ளம் இடம் தரவில்லை.

இருப்பதில் பாதியை நாகுவுக்குக் கொடுத்து விட்டால், குழந்தை ராஜுவின் பிற்காலப் படிப்புக்கும், வசதியான வாழ் வுக்கும் வழியில்லாமல் போய் விடுமோ என் கிற அச்சம் அவள் மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டது.

இரண்டு நாட்கள் யோசித்து யோசித்துப் பார்த்த பார்வதி, திடமான ஒரு தீர்மானத் துக்கு வந்து விட்டாள்.

நாகுவின் மாமா வந்து விட்டால், அவர் முகத்துக்கு முன் மறுத்துக் கூறும் துணிவு அவளுக்கில்லை. ஆகவே, இருப்பதை எடுத்துக் கொண்டு அக்கம் பக்கத்தவரிடம் கூட எதுவும் கூறாமல், ராஜுவுடன் வடக்கேயுள்ள உற வினர் ஒருவர் ஊருக்கு அவசரமாக ரயிலேறி விட்டாள் பார்வதி.

ஆயிற்று. அப்படி இப்படி என்று பதினைந்து வருடங்கள் பறந்து விட்டன. ராஜு பெரியவ னாகி, நன்றாகப் படித்து, நல்ல உத்தியோகத் திலேயும் அமர்ந்து விட்டான்.

இவ்வளவு வருடங்களுக்குப் பிறகு, ராஜு வுக்குச் சென்னைக்கு மாற்றலாகி, உத்தரவு வந்தது. ஒரு வாரத்துக்கு முன் அவன் மட் டும் புறப்பட்டு வந்து, வீடு பார்த்தாகி விட் டது என்று எழுதி இதோ அம்மா பார்வதி, அவன் மனைவி கங்கா, குழந்தை ரவி மூன்று பேரும் வந்து இறங்கியிருக்கிறார்கள்.

''என்னம்மா, புதிதாகப் பட்டணம் பார்ப்பது போல் பிரமித்து நின்று விட் டாயே! கங்காவுக்கு வேண்டுமானால் புதிது. நமக்குப் பழைய ஊர்தானே இது!'' ராஜு வின் குறும்புக்குரல் பார்வதியின் நினைவை நிலைக்குக் கொண்டு வந்து சேர்க்கிறது.

''எங்கேடா வீடு பார்த்திருக்கிறாய்? சௌகரியமாக இருக்கிறதா?'' என்று வினவி னாள் பார்வதி.

''எழும்பூரில் வீடு. நீ வந்து பாரேன். அசந்து நின்று விடுவாய்'' என்றான் ராஜு.

ராஜு சொன்னதில் மிகையில்லைதான். வாசலில் கம்பிக் கிராதியும், சலவைக் கல் வராந்தாவுமாக வீடு கிளி கொஞ்சிற்று.

ஒரு வாரத்துக்குப் பிறகு, ராஜு ஆபீசுக் குப் போன பிறகு, வராந்தாவில் உட்கார்ந்து குழந்தை ரவிக்கு வேடிக்கை காண்பித்துக் கொண்டிருந்தாள் பார்வதி. கங்கா உள்ளே ஏதோ வேலையாக இருந்தாள்.

அப்போது நாலைந்து ஆட்கள் வந்து, ''அம்மா! ஐயா இருக்கிறாரா?'' என்று பார்வதியிடம் கேட்டார்கள்.

''எதுக்கு ஐயா வேண்டும்?'' என்று கேட்டாள் பார்வதி.

''மாடியிலே ஏதோ அறை கட்ட வேணு மாம். கண்டிராக்டர் ஐயா தான் அனுப்பிச் சாரு'' என்றான் ஒருவன்.

''அழகாயிருக்கு. வாடகை வீட்டிலேயிருக் கோம். இதில் கட்டறதாவது! விலாசம் தப்பா வந்திருப்பீங்க. போ, போ'' என்று விரட்டினாள் பார்வதி, அன்று மாலை வீட்டுக்கு வந்த மகனிடம் விஷயத்தைச் சொன்னாள்.

''ஆமாம்மா. உன்கிட்டே சொல்ல மறந்துவிட்டேன். அந்த ஆட்கள் ஆபீசுக்கே வந்தார்கள். நாளைக்கு வரச் சொல்லி யிருக் கேன். மாடியிலே இரண்டு பெரிய அறையும் கொல்லைப் புறம் ஒரு வராந்தாவும் போடலாம்னு இருக்கேன்.''

''என்னடா ராஜு! உனக் கென்ன பைத்தியமா? நீ



எதுக்குப் போடறது? வீட்டுக்காரர் கட்டச் சொல்லியிருக்காரோ?'' என்று கேட்டாள்.

''அம்மா, அது ஒரு பெரிய திட்டம்!'' என்று புன்னகை செய்தான் ராஜு. ''இந்த வீட்டை இன்னும் ஒரு வருஷத்துக்குள் எனக்கே வித்துடறதாக இருக்கார் வீட்டுக்காரர். உனக்குத்தான் பட்டணத்திலே வீடு வாங்கணும்னு ரொம்ப ஆசையாச்சே.''

''அதுக்காக? பணம் ஏது இவ்வளவுக்கு ?''

''அம்மா, எங்க ஆபீஸிலே கடன் கேட்டிருக்கேன். கொடுக்கிறதாகச் சொல்லியிருக்கிறார்கள். வீடும் குறைந்த விலைக்குக் கிடைக்கும் போல் இருக்கிறது. விடுவானேன்? அதுதான் இப்போ கையில் இருக்கிற பதினைந்தாயிரம் ரூபாயில் மாடியில் அறைகள் கட்டி விட்டால், நாம் வாங்கினபிறகு அதைக் குடக் கூலிக்குக்கூட விடலாமே!''

''என்னமோ ராஜு, யோசித்துச் செய். நம்முடையது என்று வாங்கின பிறகு செலவழித்தால் நிம்மதியாக இருக்கும். ஏனென்றால், ஏதாவது தகராறு வந்து விட்டால், பணத்தைக் கட்டடத்தில் போட்ட பிறகு எதையும் செய்ய முடியாது, ஆமாம்'' என்று எச்சரித்தாள் பார்வதி.

''கவலைப்படாதேம்மா. அப்படி யெல்லாம் ஒன்றும் ஆகாது. கையிலிருப்பது செலவழிந்து போவதற்குள் உருப்படியாக ஏதாவது செய்தால்தான் உண்டு'' என்று சொன்ன ராஜு, சொன்னபடி காரியத்தில் இறங்கி விட்டான். மளமள வென்று மாடியிலும், பின்னாலும் கட்டடங்கள் எழுந்தன.

வீட்டுத் தோட்டத்தில் புதிய செடிகள் நடுவதும், பாத்திகள் கட்டுவதுமாகப் பார்வதியும், கங்காவும்கூட வீட்டை அழகுபடுத்த முழுமூச்சாக முனைந்தவேளையில், சீனக்காரன் படையெடுத்த மாதிரி 'திடு'மென ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டான் ராஜு.

''அம்மா! நீ சந்தேகப்பட்டது நடந்து விட்டது. அந்த மனிதன் வீட்டை விற்கப் போவதில்லையாம். 'உடனே காலி செய்' என்று சொல்லுகிறார்'' என்றான் ராஜு ஒரு நாள் திடீரென்று.

பார்வதி நிலை குலைந்து போனாள். ''ஏண்டா, ராஜு! பதினைந்தாயிரம் ரூபாய் என்பது உனக்கு விளையாட்டு விஷயமாகவா இருக்கிறது? செலவழிந்த பணத்துக்கு வழி?''

''அம்மா! நீ என்னிடம் கோபித்துக் கொண்டு என்ன பலன்? 'நானா செலவழிக்கச் சொன்னேன்' என்று வீட்டுக்காரர் கேட்கிறார். நியாயம்தானே! நான் வேறு வீடு கூடப் பார்த்து விட்டேன். வேறு வழியில்லை.''

''ஆமாண்டா, அவன் நியாயக்காரன். பணம் செலவழித்த நீதான் மோசக்காரன், அப்படித்தானே! எனக்கென்று ஏமாளிப் பிள்ளை நீ யிருக்கும்போது அவனைச் சொல்லிக் குற்றமில்லை'' என்று முணுமுணுத்தாள்.

''என்ன கங்கா, அப்படிப் பார்க்கிறே ?'' பால் டம்ளரை மேஜை மீது வைத்து விட்டுத் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மனைவியிடம் கேட்டான் ராஜு.

''நான் ஒன்று கேட்கிறேன். உண்மையைச் சொல்ல வேண்டும்?'' என்றாள் கங்கா.

''என்ன? கேளு, சொல்கிறேன்.''

''வந்து, வீட்டுக்காரர் பணம் கொடுத்துத்தான் நீங்கள் மாடியில் அறை கட்டியிருக்கிறீர்கள். சும்மாவானாலும் வேடிக்கைக்காக அம்மாவிடம் உங்கள் பணம் என்று சொல்லுகிறீர்கள் என்பது என் எண்ணம்.''

''அடேயப்பா, பெரிய போடாகப் போடுகிறாயே ! உனக்கு அப்படித் தோன்றக் காரணம்?'' என்று கேட்டான்.

''பின்னே என்ன, பணம் இழந்து விட்டதன் ஏமாற்றமோ, ஆத்திரமோ துளிக்கூட இல்லையே! மகிழ்ச்சியுடனிருக்கிறீர்கள்!''

''நீ கணித்ததில் ஒன்று சரி, ஒன்று தவறு. என் மனம் மகிழ்ச்சியாக இருப்பது உண்மை. ஆனால் வீட்டுக்காரர் பணம் கொடுத்தார் என்பது தவறு.''

''ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறதே உங்கள் பேச்சு. நீங்கள் கஷ்டப்பட்டுச் சேர்த்த பணம் கையை விட்டு நழுவினால், மனம் எப்படி மகிழ்ச்சியாக இருக்கும்?''

''அவசரப்படுகிறாயே, கங்கா விஷயம் தெரியாமல். ரொம்ப வருஷங்களுக்கு முன்னர் வீட்டுக்காரருக்குப் பத்தாயிரம் ரூபாய் கடன் பட்டிருக்கிறோம் நாங்கள். வட்டியுடன் இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு திருப்பித் தர முடிந்ததில், மகிழ்ச்சியடைவது தவறா?''

''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

''கங்கா! பதினைந்து வருடங்களுக்கு முன்பு, என் அக்காவுக்கு, அதாவது என் அப்பாவின் மூத்த தாரத்தின் பெண்ணுக்குச் சேர வேண்டிய பத்தாயிரம் ரூபாயைக் கொடுக்காமல் வடக்கே வந்து விட்டோம். உங்களுக்கு முன்பாக வீடு பார்க்க வந்தேனே, அப்போது விசாரித்து, அக்காவின் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டேன். ஆனால் அக்காவைப் பார்க்காமல், அவள் கணவரையே சந்தித்துப் பேசியதால், என்னை அவர் அறிய முடியாமல் போயிற்று. அக்காவிடம் விஷயத்தைச் சொல்லி, பத்தாயிரம் ரூபாயைக் கொடுக்கலாம் என்றால், அம்மாவின் பெயருக்கு இழுக்கு ஏற்படுவதாக ஆகும். ஆகவே அவர்களுக்குச் சொந்தமான வீட்டில் குடியேறி, கொடுக்க வேண்டிய பத்தாயிரத்துக்கு வட்டியாக மேலே ஐயாயிரம் போட்டு, கட்டடமாக எழுப்பி விட்டேன். அவருக்கு உண்மை தெரியாதாகையால், அவருடைய உத்தரவின்றிக் கட்டடம் கட்டினதற்குக் கோபித்துக் கொண்டு காலி செய்யச் சொல்லி விட்டார். அக்காவுக்குக் கொடுப்பதில் அம்மாவின் விருப்பம் எப்படியிருக்குமோ என்று தெரியாததுடன், எனக்கு எந்த விஷயமுமே தெரியாது என்று நிம்மதியாக இருக்கும் அம்மாவின் உள்ளத்தை அநாவசியமாகச் சஞ்சலப்படும்படி செய்ய விருப்பமில்லாமல், ஏமாந்தது போல் இப்படியொரு நாடகமாடுகிறேன். இப்போ சொல்லு, நான் செய்தது சரியா தவறா?''

ராஜுவின் பெருந்தன்மையைக் கேட்ட கங்காவின் கண்கள் மட்டுமில்லை, வெளியே இருந்த பார்வதியின் கண்களும் கலங்கின.

ஆம், வேறு ஏதோ வேலையாக அந்தப் பக்கம் வந்த பார்வதியின் செவியில் சம்பாஷணை முழுவதுமே விழத்தான் செய்தது.

தெரிந்தோ தெரியாமலோ செய்துவிட்ட பாவக் கறையைத் தன் பிள்ளை துடைத்து விட்டதையறிந்தபோது, பார்வதியின் பெற்ற மனம் பெருமையில் பூரித்துப் பொங்கிற்று.


எல்லா டயர்களும் ஒன்றுபோலத் தோன்றலாம்
ஆனால் பயர்ஸ்டோன் டயரில் ஒரு வித்தியாசம் இருக்கிறது

Firestone









துக்கடா



கானடாவில் புகழ் பெற்ற எழுத்தாளர் அவர். அவரது நவீனம் ஒன்றைப் பிரசுரகர்த்தர் ஒருவர் வெளியிட்டார். எத்தனையோ விளம்பரங்கள் கொடுத்தும் அந்த நவீனம் மக்களைக் கவரவில்லை. அந்த நவீனத்தை அச்சிட்டு விளம்பரப்படுத்திய செலவுகூடத் தேறாது என்றாகி விட்டது. ஆசிரியருக்கு எங்கிருந்து அவரது ராயல்டித் தொகையைக் கொடுப்பது?

எனவே, பிரசுரகர்த்தர் ஒரு புதிய விளம்பர முறையைக் கையாண்டார். 'மணமக்கள் தேவை' என்னும் விளம்பரப் பகுதியில், ஒரு விளம்பரம் கொடுத்தார்.

''கோடீசுவரர் ஒருவருக்கு மணமகள் தேவை. அவள் குறிப்பிட்ட நவீனத்தில் வரும் கதாநாயகியைப் போல் நன்னடத்தை உள்ளவளாகவும், அழகியாகவும், படித்தவளாகவும் இருக்க வேண்டும். சொத்து சுதந்திரத்தைப் பற்றி அக்கறையில்லை'' என்பதே அந்த விளம்பரம்.

விளம்பரம் கொடுத்த இருபத்து நான்கு மணி நேரத்துக்குள், அந்த நவீனம் விற்பனையாகிப் பிரசுரகர்த்தரையே பெருந்தனக்காரராக்கி விட்டது.

ஃ ஃ ஃ

இந்தக் குடுகுடுப்பைக்காரனைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. அவன் பக்கத்து வீட்டுக்கும் நல்லதைச் சொல்லி வைக்கிறான்!

ஃ ஃ ஃ

''அப்பப்பா! இந்த 'லைப் இன்ஷியூரன்ஸ்' பணத்தை மூச்சைப் பிடித்துக் கொண்டு கட்டி வருவதற்குள் என் உயிரே போய்விடும் போலிருக்கே!''

ஃ ஃ ஃ

அதிகமாகப் பேசி 'போர்' அடிப்பவர்களுக்கு ஒரு வார்த்தை:

''பிறரை எப்போதும் சந்தோஷமாக வைத்திருப்பதே உங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். அதற்கு அவர்களைத் தனிமையில் விட்டுப் போக வேண்டுமானாலும் போய் விடுங்கள்!''

ஃ ஃ ஃ

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஒருவர், ஏதோ நற்பணிக்காக நிதி சேர்த்துக் கொண்டிருந்தார். ஒரு கிராமத்துக்குச் சென்று அவர் உள்ளத்தை உருக்கும் வகையில் சொற்பொழிவாற்றினார். பிறகு தமது தொப்பியைக் கையில் எடுத்துக் கொண்டு, தாம் சேகரிக்கும் அந்த நிதிக்கு ஏதாவது போடுமாறு கேட்டார். அந்தத் தொப்பி மக்களிடையே உலவியது. பலர் தம்மால் இயன்றதை அந்தத் தொப்பியில் போட்டனர். ஒருவருக்கு இது பெரும் பிரச்னையாகி விட்டது. தாமும் ஏதாவது போடாவிட்டால் நன்றாயிராது என்று நினைத்தார். தொப்பி அவரை நெருங்கி விட்டது. சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்தத் தொப்பியில் தமது தலையையே போட்டுக் கொண்டு விட்டார். கொடுத்த பொருளைத் திரும்ப எடுத்துக் கொள்ளக் கூடாதல்லவா? எனவே, அந்தத் தொப்பியுடனேயே அவர் நடையைக் கட்டினார்.

பொக்கைவாய் மொழிகள்

இளைய பாரதத்தினாய் வா வா! என்று சொல்லும்போதே நம்மைப் போல் முதிய பாரதத்தினர்களை என்ன சொல்கிறார்கள் என்பது நான் உங்களுக்குச் சொல்லாமலே தெரியும். அப்படிப் போ போ என்று அவர்கள் சொன்னாலும் போகாதீர்கள். தைரியமாக இருங்கள் என்றுதான் உங்களுக்கு எழுதுகிறேன்.



பல் வரிசை இருக்கும்போது என்ன வாழ்ந்தது? அதனால் உபத்திரவம்தான். உண்மையாகச் சொல்கிறேன். என் பற்களையெல்லாம் எடுத்த பிறகுதான் என் வாயே எனக்குப் பிடித்திருக்கிறது. யாரிடமும் பல்லைக் காட்டிக் காரியத்தைச் சாதிக்க வேண்டாம். பல் இடுக்கில் ஏதேனும் மாட்டிக் கொண்டு அதை அப்புறப்படுத்த ஒரு குச்சியோ, குண்டூசியோ, இல்லை, ஓர் உலக்கையோ தேடித் தவிக்க வேண்டாம். அப்படித்தான் ஒரு குண்டூசி கிடைத்தாலும் அது சுற்றிக் குத்தி இரத்தம் வருவதுதான் மிச்சம். அப்புறம் அது 'செப்டிக்' ஆகிப் பல்வலி ஏற்பட்டு அவஸ்தைப்படவும் நேரிடும்.


பல்லிருந்தால் முறுக்கு, சீடையைக் கடித்துச் சாப்பிடலாம் என்பது உண்மை. ஆனால் அதிலே ஓர் உப்பு, காரம் குறைந்தால் சரி பண்ண முடியுமா? எங்களைப் போல் முறுக்கு சீடையைப் பொடி பண்ணிச் சாப்பிடுபவர்கள் அதில் தேவையானால் ஒரு சிட்டிகை உப்பையும் கலந்துகொள்ளலாம் இல்லையா?

'பல்லுப் போனால் சொல்லுப் போச்சு' என்று சொல்வார்கள். என் பொக்கை வாய் மழலை மொழியின் அழகு பல்லில்லாதவர்களுக்குத்தான் தெரியும். பல் முளைக்காத குழந்தையின் மழலைமொழியை மட்டும் ரசிக்கிறார்களே அது தேவலையோ என்றுதான் நான் கேட்கிறேன். இந்த வயசிலே நான் மழலை பேசுவதை என் தாய் தகப்பனார் இருந்து கேட்டிருந்தால் எவ்வளவு சந்தோஷப்படுவார்கள் என்றுதான் நான் நினைத்துப் பார்க்கிறேன். என் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்புகிறது!

Printed & Published by B. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

மக்ளீன்ஸ்

உபயோகித்து
அந்த அதிகமான வெண்மையைப்
பாருங்கள்!





இவ்விதம் சோதியுங்கள்

1. உங்கள் நாக்கினால் பற்களைத் தடவுங்கள். அவற்றின் மேலுள்ள பாசியை உணர்கிறீர்களா?
2. இப்போது, மக்ளீன்ஸ் பற்பசைகொண்டு பற்களைத் தேயுங்கள். அது பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கிக் காப்பதுடன் உங்களுக்குப் புதுமையான உணர்ச்சியை அளிப்பதை உணர்வீர்கள்.
3. அந்த அதிகமான சுத்தத்தை உணருங்கள்... அந்த அதிகமான வெண்மையைப் பாருங்கள்.



மக்ளீன்ஸ் பழுப்பு நிறமடைந்த
பற்களை வெண்மையாக்குகிறது!

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon

